மயிலைத் தமிழ்ச் சங்க வெளியீடு-1.

~~7479~~
~~F1344~~
17-57
~~42~~ 67

# நவநீதப் பாட்டியல்

(உரையுடன்)

35-L
13

9

35-L
13

பதிப்பாசிரியர் :
ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.,
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

மயிலைத் தமிழ்ச் சங்கம்
சென்னை

1943

அடக்க விலை ரூ. 1-2-0
3 பிரதிகள் விலை ரூ. 3-3-0

[பதிப்புரிமை]

மயிலைத் தமிழ்ச் சங்க வெளியீடு-1.

# நவநீதப் பாட்டியல்

(உரையுடன்)

பதிப்பாசிரியர் :
ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

மயிலைத் தமிழ்ச் சங்கம்
சென்னை

அடக்க விலை ரூ. 1-2-0
3 பிரதிகள் விலை ரூ. 3-3-0

1943

பதிப்புரிமை]

THE B. N. PRESS, MADRAS

# முகவுரை

தமிழ்நலங் கருதி மயிலைத் தமிழ்ச் சங்கம் உழைத்துவரும் பல துறைகளில் இதுவரை வெளி வாராத நூல்களை அச்சிடுதலும் ஒன்ருகும். இப்பணியில் நவநீதப் பாட்டியலே இச்சங்கத்தின்முதல் வெளியீடாகும். இந்த நூல் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பெற்றது. இதுவரை இதில் இருபத்தைந்து பாட்டுக்களே வெளிவந்துள்ளன. பல ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துப் பதிப்பித்துத்தந்த சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் திரு. ச. வையாபுரிப்பிள்ளை அவர்களுக்கும், அவர்களுக்கு அநுமதி தந்த பல்கலைக்கழகத்தார்க்கும், அவர்களுடனிருந்து இப்பணியிற் பேருதவிசெய்த திரு. மு. ஷண்முகம் பிள்ளை அவர்களுக்கும் இச்சங்கம் நன்றி செலுத்துகிறது.

இந்நூலை வெளியிடத் தேவையான பொருளை முன்பணமாகத் தந்துதவிய திரு. எம். சுப்பராய அய்யரவர்களுக்கு நன்றியுடையோம்.

இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய பி. என். அச்சுக்கூடத் தலைவர்க்கும் எங்கள் நன்றி உரியது.

தமிழ் கற்பவர்கள் நன்மையைக் கருதி அடக்க விலைக்கே விற்கத் தீர்மானித்திருக்கிறது. இப்போதிருக்கும் காகித விலையைக் கருதி 250 பிரதிகளே அச்சிடப்பெற்றுள்ளன.

மயிலைத் தமிழ்ச்சங்கம்,
22. பலாத்தோப்பு மயிலாப்பூர்,
சுபானு௵ சித்திரை௴ கஉ

கா. இராமநாதன் செட்டியார்
எ. டி. கிருஷ்ணமாசாரியார்
காரியதரிசிகள்

# பொருளடக்கம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | v - xii |
| நூல் | 1- 70 |
| பிற்சேர்வு: I மிகைச் செய்யுட்கள் | 71- 75 |
| ,, II பிரபந்த அகராதியும் இலக்கணமும் | 76- 85 |
| ,, III 1. பாட்டியல்களின் ஒப்புநோக்குப் பட்டிகை | 86- 91 |
| 2. மிகைப் பிரபந்தங்கள் | 92- 93 |
| ,, IV பாக்களின் சாதி முதலியவற்றின் பட்டிகை | 94 |
| ,, V 1. இரண்டு செய்யுட்களின் பழையவுரை | 95- 97 |
| 2. பழையவுரையில்மேற்கோட்சூத்திரங்கள் | 98-110 |
| 3. பழையவுரையிற் கண்ட விசேடங்கள் | 111-116 |
| 4. பாட பேதங்கள் | 117 |
| ,, VI 1. உரையில் எடுத்தாண்ட நூல்கள் | 118-119 |
| 2. பழையவுரையில் எடுத்தாண்ட நூல்கள் | 119 |
| 3. தொல்காப்பியர் காலத்துச் செய்யுள் வகைகள் | 119-120 |
| 4. பிற்காலத்துச் செய்யுள் வகைகள் | 120-121 |
| ,, VII 1. நவநீதப் பாட்டியல் பொருட் குறிப்பகராதி | 122-130 |
| 2. நவநீதப் பாட்டியல் : செய்யுள் முதற் குறிப்பகராதி | 131-132 |
| பிழை திருத்தம் | |

# முன்னுரை

1932ஆ மே மாதம் எனது விடுமுறைக் காலமானதால் திருவனந்தபுரம் சென்றிருந்தேன். அங்கே அரசாங்க வடமொழி நூல்-நிலையத்தில் திருவாய்மொழியின் வட்டெழுத்துப் பிரதி யொன்று இருப்பது தெரிந்து அதைப் பார்வையிடுவதற்காக அந்நிலையத்திற்குப் போக நேர்ந்தது. அங்கிருந்த எனது நண்பர் ஸ்ரீ ஜி. ஹரிஹர சாஸ்திரிகள் மலையாளலிபியில் சில தமிழ் நூல்கள் கடிதத்திற் பிரதி செய்து சில தொகுதிகளாக வைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்கள். உடன் ஒரு தொகுதியை வரவழைத்து நோக்கியதில், அதில் தண்டியலங்காரம் உள்ளமை தெரிந்தேன். இதற்கப்புறம் உள்ள ஒரு பக்கத்தில் புதிதாக ஒரு கலித்துறைச் செய்யுள் காணப்பட்டது. அதனைக் குறித்து வைத்துக்கொண்டேன். எந்நூலைச் சார்ந்தது அது என்று அப்பொழுது எனக்குத் தெரியமாட்டாது.

விடுமுறை கழிந்து சென்னைக்குத் திரும்பியதும், இந்தச் செய்யுளைக் குறித்து ஆராயத் தொடங்கினேன். பாட்டியல் நூல்களுள் இது காணப்பெறுதல்வேண்டுமென எளிதில் ஊகித்துக்கொண்டேன். கலித்துறையில் அமைந்ததாக நவநீதப்பாட்டியல் ஒன்றே உள்ளது. ஆனால் அந்நூலிற்குரியனவாய் மற்றைப் பாட்டியல்களோடு அச்சில் 25 செய்யுட்களே வெளிவந்திருந்தன. நவநீதப்பாட்டியல் முழுமையும் அவ்வளவுதான் என்பது தமிழறிஞர் பெரும்பாலரின் கருத்து. நான் குறித்து வைத்திருந்த செய்யுள் அவற்றில் காணப்படவில்லை.

பின்னர், சென்னை அரசரங்க நூல் - நிலையத்தில் இப்பாட்டியற் பிரதி இருப்பது தெரிந்து அதனை வரவழைத்து நோக்கினேன். இதில் நான் குறித்துக்கொண்ட 'அறந்திறம்பாமல்' என்ற செய்யுள் 86-வது செய்யுளாக அமைந்திருப்பது கண்டு மிகவும் மகிழ்வுற்றேன். இப்பிரதி திரு. கே. நாதமுனி என்பவரால் 27-7-1920ல் பாலக்காடு புதுநகரத்திலுள்ள வடமலைநம்பிச் செட்டியாருக்குரிய ஏட்டுச்சுவடியினின்றும் அரசாங்க நூல் - நிலையத்திற்காகக் கடிதத்தில் பெயர்த்தெழுதப்பட்டது. இதில் எழுத்துக்கள் சிதைந்தும் குறைந்தும் ஓரோவிடங்களில் சொற்கள் மறைந்தும் போயின. இதன்கண் அடங்கிய செய்யுட்கள் 102.

மயிலைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் இப்பாட்டியலை உரையுடன் பதிப்பிக்க வேண்டுமென்று சென்ற டிஸம்பர் மாதத்து இறுதியில் தீர்மானமாயிற்று. இதனைப் பதிப்பித்தற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் அனுமதியும் பெற்றேன். புத்துரை ஒன்று எனது மேற்பார்வையில் பல்கலைக் கழகத்து மாணவராகிய வித்வான் எம். ஷண்முகம்பிள்ளை எழுதி முடித்தனர். இவ்வுரையைப் பலமுறை பரிசோதித்துப் புதுக்கியும் கூட்டியும் செப்பனிட்டு இவ்வாண்டு ஜனுவரி மாதத்தில் அச்சிடுவதற்குக் கொடுத்தேன். முன்னுரையின்பொருட்டுப் பலவகைப் பாட்டியற் பிரதிகள் பெறுவது அவசியம் எனத் தோன்றியபடியால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அதிகாரிகளுக்கு எழுதினேன். அங்கிருந்து நவநீதப்பாட்டியல் பிரதியொன்றும் பிரபந்த தீபிகைப் பிரதியொன்றும் கிடைத்தன.

இந்நவநீதப்பாட்டியற் பிரதியில் 17 இதழ்களும், இதழ்களின் ஒவ்வொரு பக்கத்திலும் சராசரி 6 வரிகளும் உள்ளன. செய்யுட்களின் மொத்தம் 105. 'சுபகிருதுஸு மாசிமீ க-உ திருவாதிரை உதயாதி நாழிகை ச-இ எழுதி நிரம்பிற்று மூலபாடம்' என்று இறுதியிற் காணப்படுகிறது.

இப்பிரதியை அச்சிட்ட பிரதியோடும் கைப்பிரதியோடும் ஒப்பிட்ட காலத்துப் பிற்காலத்தாரால் சேர்க்கப்பெற்ற 30 செய்யுட்கள் காணப்பட்டன. இவற்றுள் 27 செய்யுட்கள் 'மிகைச் செய்யுள்' என்ற தலைப்பின்கீழும், ஒரு செய்யுள் 34-வது பக்கத்தின் அடிக்குறிப்பிலும் இப்பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு செய்யுட்கள் வருமாறு:

கரிமுகத் தண்ணல் கடவுள ரைங்கரக் கற்பகத்தைப்
பரிவுரை மாமலர் சாத்திப் பணிந்துள பாவினத்தை
அரிமத னை நவநீத னென்னுமி யான்வகுத்தேன்
உரைசெய் நவநீதப் பாட்டியல் தன்னை யுலகினுக்கே.

சகத்தினின் முத்தமிழ் தம்மையுண் டாக்கியச் சங்கத்தினில்
அகத்திய மாமுனி யாக்கிய பாட்டிய லானபௌவம்
நிகழ்த்துகை மின்மினி யாதித்த னுக்கு நிகரொக்குமென்
றுகப்பது போலுமென் றேபுல வோர்முன் னுரைப்பதுவே.

இவ்விரண்டும் முதலும் ஈறும் ஆகவும் 'கார்கொண்ட' (1) 'நூற்பெயர்' (69) 'நாட்டிய வெண்ணெண்' (102) என்ற செய்யுட்களை முறையே இடைப்பெய்து பாயிரமாக இப்பிரதி குறிக்கின்றது. இவைகளில் பெரும்பாலன நயமற்றனவாயும் முன் விளக்கிய பிரபந்தங்கள் சிலவற்றையே மீண்டும் விவரிப்பனவாயும் உள்ளன. அன்றியும் இப்பதிப்பில் உள்ள 25, 26, 34, 37, 48, 49, 59, 66, 68, 73, 81, 82, 86-94, 96-101 என்று எண்ணிடப்பெற்ற 27 செய்யுட்களும் இச்சங்கத்துப் பிரதியிற் காணப்படவில்லை. மேலும் இப்பதிப்பிலுள்ள 11, 12-ஆம் செய்யுட்கள் முன்பின்னாகவும், இங்ஙனமே 71, 72-ஆம் செய்யுட்களும் முன்பின்னாகவும் அமைந்திருந்தன. பிழைகளும் மிகவும் மலிந்திருந்தன.

பிற்சேர்வுகள் ஒழிய மூலபாடமும் உரையும் அச்சிட்டு முடியும் தறுவாயில் ஒரு சிலசெய்யுட்களின் பாடமும் பொருளும் பொருத்தமற்றனவாகக் காணப்பட்டன. ஆகவே, வேறு பிரதியின் உதவியுமிருந்தால் நலம் என்று எண்ணினேன். தமிழ்ப்பேராசிரியரான மஹாவித்வான் ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்களிடம் நவநீதப்பாட்டியல் உரைப்பிரதியொன்று உண்டென்றும், அஃது அவர்களால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து நூல்-நிலையத்திற்கு உதவப்பட்டுள்ளதென்றும் ஏற்கெனவே கேள்வியுற்றிருந்தேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு இப்பிரதியை எனக்கு உதவுமாறு வேண்டிக்கொண்டேன். அவர்களும் அன்பு கூர்ந்து அனுப்பினார்கள்.

இப்பல்கலைக் கழகத்துப் பிரதியில் 'நவநீதர் பாட்டியல்' என்றே நூற்பெயர் காணப்படுகின்றது. 8, 10 எண்ணுள்ள பதிப்புச் செய்யுட்கள் 10, 8 என்ற எண் முறையில் வந்துள்ளன. 89-வது செய்யுளின்பின் 'குற்றமில்லா' (பக் 95) என்ற ஒரு செய்யுளும், 91-வது செய்யுளின்பின் 'நல்லவைக் கண்ணும்' (பக் 97) என்ற ஒரு செய்யுளும் காணப்படுகின்றன. மேற்குறித்த வேறுபாடுகளொழிய இப்பிரதி எனது கைப்பிரதியோடும் எனது பதிப்புப் பிரதியோடும் முற்றும் ஒத்திருக்கிறது. ஆனால் இப்பிரதி 'மூன்று தமிழின்' (95) என்ற செய்யுளோடு இடையற்று நின்றுவிடுகிறது. முதலில் பூர்த்தியாக இப்பிரதி இருந்தது என்பதற்கும், பெரியதோர் ஏட்டுப் பிரதியின் ஒரு பகுதிதான் என்பதற்கும், அறிகுறிகள் இல்லாமற் போக

வில்லை. இதன் முகப்பில் 'காரிகை-க, பாரதம் 6-ஆம் நாள் உயுத்தம்-க, நன்னூல்-க, புகலூரந்தாதியுரை-க, நவநீதப்பாட்டியல்-க, பழமலையந்தாதி-க' என்றுஎழுதப்பட்டுள்ளது. எனவே இந்த ஆறு நூல்களும் ஏட்டுப்பிரதியில் முதலில் இருந்தன என ஊகித்தல் தகும். முகப்பில் உள்ள இரண்டு இதழ்களில்......பிள்ளை, தியாகராசன் செட்டியார் என்ற பெயர்களும், 'காரிய காரணங்கள்' என்ற சித்தியார்ச் செய்யுளும்,

'தானே புரிவினையாற் சாருஞ் சுகதுக்கம்.
தானே யனுபவித்தல் தப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையீர் செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து.' (நீதிவெண்பா. 47)

என்ற செய்யுளும் சில விடுகவிகளும் திருக்குற்றாலத்துப் பள்ளுப் பிரபந்தத்திலிருந்து இரண்டு செய்யுட்களும் காணப்படுகின்றன.

இம்முகப்பேடுகளை நீக்கினால் நூற்பகுதியில் 35 இதழ்கள் உள்ளன. இதழ்ப் பக்கங்களில் பெரும்பாலனவற்றில் 8 வரிகளும் சிலவற்றில் 9 வரிகளும் அமைந்திருக்கின்றன.

இப்பிரதியில் மூலமும் உரையும் உள்ளன என்று மேலே குறிக்கப்பட்டது. உரை மிகப் பழைய காலத்ததாகத் தோன்றுகிறது. இதனை இயற்றியவர் யாவர் எனத் தெரியக்கூடவில்லை. நூலாசிரியரே உரை இயற்றினார் எனக்கொள்ளுதற்கும் இடமில்லை. ஏனெனில், உரைகாரர் பலவிடங்களிலும் நூலாசிரியரைப் படர்க்கையில்வைத்துப் பேசுகிறார். உதாரணமாக 21-ஆம்செய்யுளுரையைக் (பக்,112)காண்க, உரைசெல்லும் நெறியால், அவர்பரந்ததமிழறிவு படைத்தவர் என்பது எளிதிற் புலனாகின்றது. 'செய்வித்தானாற் பெயர் பெற்றன பிங்கல சரிதை, வாமன சரிதை' எனக் குறிப்பிடுகின்றார். இந்நூல்கள் இதுகாறும் அறியாதன. மேற்கோளாக அவர் எடுத்தாளும் சூத்திரங்களுட் சில பன்னிருபாட்டியலிலும், சில யாப்பருங்கல விருத்தியிலும் உள்ளன, இன்னும் சில இக்காலத்தில் கேட்டும்அறியாதன. உதாரணமாக அவிநயனார்கலாவியல், பொய்கையார் கலாவியல், செய்யுள் வகைமை, முள்ளியார் கவித்தொகை, கல்லாடர் பாட்டியல் முதலியவற்றைக்கூறலாம். இங்கே 'கலாவியல்' என்பது 'கவியியல்' என்றிருக்கலாம் போலும். பொய்கையார் பாவியல்

என்று ஓரிடத்தில் குறிக்கப்பட்டுள்ளது இவ்வூகத்தைவலியுறுத்தும். 'பரணர் பாட்டியல்'எனக்காட்டப்பட்டதை யாண்டும் 'பருணர்பாட்டியல்' என்றே வழங்கியுள்ளார். ஒருகால் வருணர் பாட்டியலைக் குறித்ததாகலாம் என்ற ஐயப்பாடு தோன்றினும், அதில் காணும் சூத்திரங்களிற் சில பரணர்க்குரியனவாகப் பன்னிரு பாட்டியலின் அச்சுப் பிரதியால் தெரிகின்றமையின், பரணர் என்றே யாண்டும் பாடம் கொள்ளப்பட்டது. இப்பாட்டியல்களெல்லாம் வழங்கிவந்த காலத்தில் உரைஎழுதப்பட்டதாதலால் அதன் தொன்மையும் சிறப்பும் நன்கு விளங்கும். இவ்வுரையால் பல அரிய நுண்பொருள்களும் வெளிப்படுகின்றன. உதாரணமாக, அரசர் முன்னிலையில் வாதம் முதலியன நிகழ்த்துவோருக்குரிய விதிகள் சில இதில் தரப்பட்டுள்ளன (பக் 95-97). இவை பற்றிய நூல்கள் எல்லாம் இக்காலத்து இறந்து ஒழிந்தமையால், இவ்விதிகளின் பொருள் உணர்வது அரிதாய் இருக்கின்றது.

இவ்வுரைப்பிரதி நூலின்பகுதி முழுவதும் அச்சிட்டபின் கிடைத்ததாகையால் இதில் அதிகமாகக் காணப்பட்ட 2 செய்யுட்களின் உரையும், மேற்கோளாக எடுத்தாண்ட சூத்திரங்களும், சில உரை விசேடங்களுமே இப்பதிப்பில் கொடுத்தற்கு இயன்றது. இவ்வரிய உரையில் ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழைகள் மலிந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

இப்பழையவுரை இங்கு வெளியிடும் புத்துரையைப் பயனற்றதாகச் செய்துவிடவில்லை. விளக்கமில்லாதிருந்த இடங்கள் புத்துரையில் வெண்பாப்பாட்டியல் முதலியவற்றின் துணைகொண்டு நன்கு விளக்கப்பட்டுள்ளன. பிற பாட்டியல்களோடு இந்நூல் வேறுபடுமிடங்களில் அவ்வேறுபாடுகள் மேற்கோள்களுடன் விவரிக்கப்பட்டுள்ளன. பல நுட்பமான விஷயங்களும் தக்க மேற்கோளுடன் நன்கு புலப்படுமாறு செய்யப்பட்டுள்ளன. தற்கால மாணவர்களுக்குப் பயன்படவேண்டும் என்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு உரை தெளிவாக எழுதப்பட்டுள்ளது. பட்டிகைகளும் பிற்சேர்வுகளும் இப்பதிப்பின் சிறப்பியல்புகளாம்.

பழையவுரை நூலினது காலத்தை அறுதியிடுவதற்கு ஒருவாறு பயன்படுகிறது. அதன்கண்ணே எடுத்தாளப்படும் சூத்திரங்களால் பன்னிரு பாட்டியலை ஒருசில இடங்களில் நவநீதப் பாட்டியல் பின்

பற்றிச் செல்கின்றது என உணரலாம். இணைமணி மாலையின் இலக்கணத்தைக் காண்க. சிற்சில இடங்களில் வச்சணந்திமாலைக் கருத்துக்களோடு மாறுபட்டும் செல்லுகின்றது. உறுப்பு என்னும் செய்யுளின் இலக்கணம் இதற்குத்தக்க சான்றாகும்: புத்துரை வெண்பாப் பாட்டியலைத் தழுவி எழுதப்பட்ட போதிலும், பழையவுரையே (பக்-116) நூலாசிரியர் கருத்தை வெளிப்படுத்துவது என்று கொள்ளுதல் நேரிதாகும். நவநீதப்பாட்டியல் அகத்தியத்தின் வழி நூல் என்பது 'குறுமுனி யாதிக் கலைஞர் கண்ட பாட்டியலானவை யெல்லாம் தொகுத்தான்' (102) என்ற செய்யுளால் விளங்கும். சிதம்பரப் பாட்டியலும் அகத்தியத்தின் வழிப்பட்டதே. வெண்பாப் பாட்டியல் அதன் உரையால் இந்திரகாளியத்தின் வழிப்பட்டது என்பது விளங்குகிறது. எனவே பாட்டியல்கள் இந்திரகாளியநெறி, அகத்தியர் நெறியென இருவேறு வழியினவாய் அமைந்தனவாகலாம் என்று கருத இடமுண்டு. வெண்பாப் பாட்டியல் இந்திரகாளிய நெறிக்கும், நவநீதப்பாட்டியல் அகத்தியர் நெறிக்கும் வழிகாட்டிகளாய் இயற்றப்பட்டன போலும். மேற்குறித்த உறுப்புப்பற்றிய வேறுபாடு முதனூற் கொள்கைகளின் வேறுபாட்டினால் அமைந்தது என்று ஊகிக்கலாம். அகத்தியரது புதுக் கொள்கைகளில் ஒன்று ஆனந்தக் குற்றம். இக்குற்றம் பற்றிய சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியில் உள்ளன. நவநீதப்பாட்டியல் ஆசிரியர் இக்குற்றங்களை உடன்பட்டு ஆனந்தக்குற்றம் என்ற பெயரினையே தமது நூலில் எடுத்தாளுகின்றார். வெண்பாப்பாட்டியலின் ஆசிரியர் இக்குற்றங்களை உடன்பட்டார் என்பதற்குச் சான்று இல்லை. அகத்தியர் பாட்டியல்களின் வழித்தாய் நூல் செய்தவர்கள் அவரைத் 'திருமுதுபொதியிற் றெய்வ முனிவன்' என்பர் (பக். 115). இந்திரகாளிய நெறியின் வந்தோரும் * பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் இவ்வகத்தியனார் பொதியின் முனிவர் அல்லர் என்றும் பிற்காலத்தார் ஒருவர் என்றும் கொள்வர். இருவேறு நெறிகளுக்கும் வழிகாட்டிகளாய் அமைந்த நூல்களாதலின் இவை சற்றுமுன் பின்பாகத் தோன்றியிருக்கலாம்.

நவநீதப்பாட்டியல் நல்லவை, நிறையவை, தீயவை, குறையவை என நான்கு வகை அவைகளுக்கு இலக்கணம் கூறுகின்றது. இவ்

---

* பேராசிரியர், தொல்-உவம-37 உரை; மரபு-108 உரை.
நச்சினார்க்கினியர், மலைபடுகடாம்-145 உரை.

அவைகளுக்குரிய சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியில் காணப்படுகின்றன. இவ்வொற்றுமையோடு பிறவற்றையும் நோக்கும் போது யாப்பருங்கல விருத்திக்குப் பிற்பட்டது நவநீதப்பாட்டியல் என்பது போதரும். இந்நூல் வச்சணந்திமாலையையும் நோக்கி யியற்றியதாகலாமாதலின், அதற்குச் சிறிது பிற்பட்டதென்று கருதலாம்.

வேறொரு காரணமும் இங்கே எடுத்துக்காட்டுதற்கு உரியது. பிரபந்தங்கள் 96 என்ற வரையறை கி. பி. 1732ல் இயற்றப் பெற்ற சதுரகராதியில் உள்ளது. இவ்வகராதிக்கு முற்பட்டது எனக் கருதத்தகும் 'பிரபந்த மரபியல்' என்ற நூலில்,

'பிள்ளைக் கவிமுதல் புராண மீருத்
தொண்ணூற் றாறெனுந் தொகைய தாமுற்
பகரியன் முன்னுறப் பாடும் பிரபந்த
மரபிய லதுபிர பந்தமர பியலே.'

என வருகின்றது. இதன்கண்ணும் பிரபந்தங்களின் எண் வரையறையைக் காணலாம். கி. பி, 1535ல் வாழ்ந்தவன் என்றறியப் படும் சிவந்தெழுந்த பல்லவராயன்மீது பாடப்பெற்ற உலாவில்

'... ... தொண்ணூற்றாறு
கோலப்ர பந்தங்கள் கொண்டபிரான்'

என்று கூறப்படுகின்றது. இதனால் 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இந்த எண் வரையறையைப் புலவருள் ஒரு சாரார் மேற்கொண்டனர். 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்எழுந்த இலக்கண விளக்கப் பாட்டியல் இவ்வரையறையைக் கூறவில்லை, இங்ஙனமே 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்வாழ்ந்த பரஞ்சோதிமுனிவரும் தமது சிதம்பரப்பாட்டியலில் இவ்வரையறையைக் குறிப்பிடவில்லை. ஆகவே, இவ்வெண் வரையறை பெரும்பாலார்க்கு உடன்பாடு இல்லாத ஒரு காலமும் இருந்தது எனத் தோன்றுகிறது. இவ்வுடன்பாடற்ற காலத்திற்கு மிக முன்பு பிரபந்தங்கள் பலப்பல பாட்டியல் நூல்களில் விளக்கப்பட்டுவந்தன. இங்ஙனம் பிரபந்தங்கள் தோன்றி வரவர எண் பெருகி வந்த காலம் ஒன்றும், வரையறை எய்திய காலமொன்றும், உடன்பாடற்ற காலம் ஒன்றும், பெரும்பாலார் உடன்பட்ட காலம் ஒன்றுமாக வகுத்தல் கூடும். இவ்வகுப்பு முறையும் நவநீதப் பாட்டியல் எண் பெருகி வந்த காலப்பகுதியைச் சார்ந்தது

எனக் காட்டுகின்றது. ஏன் எனின், இப்போது அகப்படும் மற்றை எல்லாப்பாட்டியல்களிற்காட்டிலும், இந்நவநீதப் பாட்டியலில் மிகக் குறைந்த எண்ணுள்ள பிரபந்தங்கள் விளக்கப்பட்டுள்ளன. மிகைச் செய்யுட்களிற் புதியனவாகச் சேர்க்கப்பெற்றுள்ள பிரபந்தங்களை நீக்கினால், 44 பிரபந்தங்களே இதனுள் கூறப்படுவன.

வச்சணந்திமாலை இயற்றப்பெற்றது 13-ஆம் நூற்றாண்டாதலின் நவநீதப் பாட்டியல் 14-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றது என்று முடிவு செய்யலாம்.

இந்நூலின் ஆசிரியராகிய நவநீதரைக் குறித்து யாதும் அறியக் கூடவில்லை. நவநீத நடன் (102 பாடபேதம்) என்று இவர் குறிப்பிடப்படுதலினாலே இவர் ஆடலாசிரியராக, அஃதாவது பரத நாட்டியம் பயிற்றும் ஆசிரியராக, இருந்தனர் என்று அறியலாகும். இத்தொழிலை ஸ்வதர்மமாகவுடைய குலத்தைச் சார்ந்தவராக இவர் பெரும்பாலும் இருத்தல்கூடும். இவர் பாட்டியலைச் செய்ததற்கு ஓரியையும் புலப்படுகிறது. பரத நாட்டிய சாஸ்திரத்தில் அரங்கில் ஆசன அமைப்பும் அரசன் முன்னிலையில் அவனைக் குறித்து ஆடிப் பாடும் பாட்டுக்களிற் பொருத்தவிலக்கண முதலியனவும் கூறப்பட வேண்டும் அவசியம் எளிதில் அறியத்தக்கதே. என்னிடமுள்ள பரத சாஸ்திர ஏட்டுப் பிரதியொன்றில் இவ்விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன. தம் குலத்தொழிலோடு நெருங்கிய தொடர்புடையதாதலின் பாட்டியற்பொருள் குறித்து நவநீதர் நூலியற்றினார் என்று கொள்ளுதல் பொருந்தும். இவ்வாசிரியரது சமயம் வைஷ்ணவம் என்பது 'கார்கொண்ட' என்ற காப்புச் செய்யுளால் விளங்கும். இவரது நாடு 'நவநாடு' என்பது நூலின் இறுதிச் செய்யுளில் 'நவநாட்டு நவநீதனே' என்று வருதலினால் அறியப்படும்.

இந்நூலைப் பதிப்பித்தற்கு வேண்டும் ஏட்டுப் பிரதிகளைத் தந்துதவிய சென்னை அரசாங்க நூல் - நிலயத்தாருக்கும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர்க்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னைப்
பல்கலைக் கழகம்,
14-4-1943

**எஸ். வையாபுரிப் பிள்ளை**
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்

ஸ்ரீ:

# நவநீதப் பாட்டியல்

## முதல்மொழி யியல்

1. கார்கொண்ட மேனிக் கறைகொண்ட நேமிக் கமலக்கண்ணன்
பார்கொண்ட பாதத்தை யேத்திப் பகருவன் பாட்டியலைத்
தேர்கொண்ட அல்குற் றுடிகொண்ட சிற்றிடைச்செந்துவர்வாய்
வார்கொண்ட பூண்முலை வேல்கொண்ட வாள்விழி வாணுதலே.

பிரபந்தங்களினுடைய முதல்மொழிக் குரிய இலக்கணங்களை உணர்த்துவதால் இவ்வியல் முதல்மொழி யியல் என்று பெயர் பெறுவதாயிற்று. இயல் - நூற்பகுதி.

வாணுதலே, கமலக்கண்ணன் பாதத்தை யேத்திப் பாட்டியலைப் பகருவன். மேனி - நிறம்; கறை - பகைவரது இரத்தக்கறை; நேமி - சக்கரம்; பார் கொண்ட பாதம் - நிலத்தை அளந்த பாதம்; நிலத்தைத் திருமால் அளந்தது திருவிக்கிரமாவதாரத்தில். பாட்டியல்-பாட்டுப்பற்றிய இலக்கண நூல்: 'அணியியல்' என்பதுபோல. பாட்டு-பிரபந்தம்; வார் - கச்சு.

இச்செய்யுளில் சொல்லப்பட்டன கடவுள் வணக்கமும், நூலிற் சொல்லப்படும் பொருளும். இவற்றை மயிலைநாதர் ஒரு சாரார் வேண்டும் சிறப்புப்பாயிரம் என்று கூறி 'வணக்க மதிகாரம் என்றிரண்டும் சொல்லச், சிறப்பென்னும் பாயிரமாம்' என்ற பழைய சூத்திரத்தையும் மேற்கோள் காட்டுவர். இச் செய்யுளில் 'கார் கொண்ட......ஏத்தி' என்றது கடவுள் வணக்கம். 'பகருவன் பாட்டியலை' என்றது அதிகாரம். 'தேர்கொண்ட....வாணுதலே' என்றது மகடூஉ முன்னிலை. இந்நூல் யாப்பருங்கலக் காரிகைபோல மகடூஉ முன்னிலையாய்ப் பாடப் பெற்றது.

## முதல் மொழிப் பொருத்தம்

2. மங்கலஞ் சொல்லெழுத் தொன்றிய தானம் வருமிருபால்
பொங்கிய உண்டி வருணம் பகுத்திடு நாட்பொருத்தம்
தங்கிய நாற்கதி எண்கணம் என்று தமிழ்தெரிந்தோர்
இங்கிவை பத்தும் முதல்மொழிக் காமென் றியம்பினரே.

முதல்மொழிக்கு மங்கலம் முதலிய பத்தும் ஆம் என்று தமிழ் தெரிந்தோர் இயம்பினர். இருபால் என்பதிலுள்ள இரு என்ற அடைமொழியை உண்டி என்பதனோடும் கூட்டவேண்டும்.

இந்தப் பத்தினையும் பொருத்தம் என்று வழங்குவர். பத்தாவன:—மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் என்பன.

ஒன்றிய - பொருந்திய; பொங்கிய - சிறப்பின்மிக்க; இருபால்-ஆண்பால், பெண்பால்; இரு உண்டி - அமுது, நஞ்சு; நாற்கதி; மக்கள், தேவர், நரகர், விலங்கு; எண்கணம் - நிலம், நீர், தீ, மாருதம், அந்தரம், பருதி, திங்கள், இயமானன்.

செய்யுள் முதல் மொழிக்கு இப்பத்தே அன்றி, கன்னல் (நாழிகை), புள் என்ற இரண்டினையும் கூட்டிப் பன்னிரு பாட்டியல் கூறுகின்றது. மேலும் அப்பாட்டியலில் முதல்மொழியைப் பற்றி எழுத்தியல், சொல்லியல் என இரண்டு இயல்கள் உள்ளன. எழுத்தியலில் முதற்சீரின் முதல்எழுத்துப்பற்றி வரும் பொருத்தம் உணர்த்தப்படுகின்றது. அவை பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் என்பன. இவற்றுள் பிறப்பு என்பதைத் தனியாகக் கூறாது வருணத்துடன் சேர்த்துரைப்பன வெண்பாப் பாட்டியல் முதலியன. இந்நூலிலும் அவ்வாறே காணப்படுகிறது. கணம், மங்கலம் என்ற இரண்டும் சீரைப்பற்றி வருவன; ஆதலின் இவை சொல்லியலில் உள்ளன, இவற்றுள் சொல், எழுத்து என்பவற்றை ஏனைய பாட்டியல்கள் போலத் தனியாகவன்றி மங்கலத்துடன் சேர்த்து இப்பாட்டியல் தெரிக்கின்றது. பால் மூன்றுள வேனும் முதல் மொழிக்கு ஆவன இரண்டேயாதலின் 'இருபால்' என்றனர்.

இனி, பத்தும் முறையே விளக்கப்படுகின்றன.

---

2. 3 தெண்ணிய; 13 யேகணம்; 15 தமிழறிந்தோர்; 18-19 முதன் மொழியாமென்; 20 றியம்புவரே.

### மங்கலச்சொல்

3. திருமணி பூத்திங்கள் சொற்சீர் எழுத்துப்பொன் தேரழகு
வருபுனல் கார்புயல் மாநிலங் கங்கை மலையுலகம்
பரிகடல் யானை பரிதி அமுதம் பகர்முதற்சீர்க்
குரியநன் மங்கலச் சொல்லென்று நாவலர் ஓதினரே.

முதற்சீர்க்குரிய நன்மங்கலச் சொல்: திரு, மணி, பூ, திங்கள், சொல், சீர், எழுத்து, பொன், தேர், அழகு, புனல், கார், புயல், மா, நிலம், கங்கை, மலை, உலகம், பரி, கடல், யானை, பரிதி, அமுதம் என்பன.

வருபுனல் - ஓடி வருகின்ற நீர்; பகர் - சொல்லப்படுகின்ற. இவற்றிற்குப் பரியாய நாமம் வரினும் இழுக்காது என்பர் வெண்பாப்பாட்டியல் உரைகாரர். 'அகரமுதல எழுத்தெல்லாம்' (குறள்-1) 'மூவாமுதலா உலகம்' (சிந்தாமணி-கடவுள்) என்பவற்றிற் போன்று அடைமொழி அடுத்தும் மங்கலச் சொல்வரும். அமுதம் மங்கலச் சொல்லாய் வருதல் அருகிய வழக்குப் போலும்.

திரு – திருமழை தலைஇய (மலைபடுகடாம்)
மணி - மணிகொண்ட திரைஆழி (மதுரைக் கலம்பகம்)
பூ - பூமேலயனறியா (கோயினுன்மணிமாலை)
திங்கள் - திங்களைப் போற்றுதும் (சிலப்பதிகாரம்)
சொல் - சொல்லின் கிழத்தி (தண்டியலங்காரம்)
சீர் - சீர்தந்த (விக்கிரமசோழன் உலா)
எழுத்து - எழுத்தெனப்படுவ (தொல்காப்பியம்)
பொன் - பொன்வண்ணம் (பொன்வண்ணத்தந்தாதி)
தேர் - தேர்கொண்ட காமன் கவிகையும் (திருவாரூர்க்கோவை)
அழகு - ஏராரிளங்கிளியே (திருத்தசாங்கம்)
புனல் - நீர்கொண்ட மேகம் (தேவை உலா)
கார்-கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர் (அகநானூறு)
புயல் - புயல்வண்ணன் (கலிங்கத்துப் பரணி)
மா - மாநிலம் சேவடியாக (நற்றிணை)

---

3. 2-5 பூத்திங்க ளாரணஞ் சொற்சீ ரெழுத்துப்பொன்றேர்; 12 ஆலையம்; 15 புகழ் முதற்சீர்க்; 16 குரியன; 17-18 மங்கலமாமென்று; 18 சொல்லென.

நிலம் - நிலம்போற்றும் அகத்தியன் (கடம்பவன புராணம்)
கங்கை - கங்கைவாழ் வேணி (திருப்பறியலூர்ப்புராணம்)
மலை - மலைமகளொருபால் (இலக்கண விளக்கம்)
உலகம் - உலகம் உவப்ப (திருமுருகாற்றுப்படை)
பரி - ஆடும்பரிவேல் (கந்தர்அநுபூதி)
கடல் - கடலுடைப் பெருமாநிலம் (சீகாளத்திப் புராணம)
யானை - யானைக்கண்டம் (நிரோட்டக யமக அந்தாதி)
பரிதி-பரிதிதன் மரபில்வரு பார்த்திபன்(அரிச்சந்திர புராணம்)

4. பொருள்தெரி யாமை சிறப்பின்றி நிற்றல் பொருள்பலவாய்
வருமொழி யாதல் வகையுளி சேர்தல் வொருஞ்சீருடன்
திரிதரும் ஈறுடைத் தாதல் எடுத்தஅச் சீர்ச்செய்யுமேற்
சரிவிலை யாய்அது தான்அமை யாதென்று சாற்றுவரே.

4. எடுத்துக்கொண்ட அந்த முதற் சீரைப் பொருள் தெரி யாமை முதலானவை வருமாறு (புலவன்) செய்யுமேல், அது நூலுக்கு அமையாது என்று சொல்லுவர்.

பொருள் தெரியாமை: பொருள் தெரியாத கருகிய சொற்கள் முதலியன வருதல்.

சிறப்பின்றி நிற்றல்: அழகு இல்லாத சொற்கள் முதலியன வருதல்.

பொருள்பலவாய் வருமொழியாதல்: பல பொருள்படும் சொற்கள் வருதல்.

வகையுளி: பொருள்நோக்கிச் சொல்லைப் பிரித்தவிடத்துத் தளையும் சீரும் சிதையுமாயின் அவ்விடத்து ஓசையை நோக்கிப் பிரித்தல் வகையுளியாம்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (குறள் - 3)

என்றவிடத்து வாழ்வார் எனப் பொருள்நோக்கிச் சொல்லைப்பிரிக்குமிடத்து ஓசை கெடும். அதன்கண் வாழ் என்பதனை முதல் நின்ற சீரோடு ஒட்ட, ஓசை கெடாது வருதல் காணலாம்.

---

4. 2 யாமற்; 10 வொருபொருடன்; 14-15 எடுத்தவிற் சேர்ந்தவெல்லாம்; 15 சீர்ச்செய்யுளைச்; 17 யாயவை; 17-18 யாய்முன் வரினமை.

அருணேக்கு நீரா ரசை சீ ரடிக்கண்
பொருணேக்கா தோசையே நோக்கி—மருணீக்கிக்
கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு

என்பது யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள்.

### எழுத்து

5 மூன்றைந்தேழ் ஒன்ப தெழுத்தாய் வியநிலை யாய்முதற்சீர் [ற்
தோன்றிடின் நன்றிரண் டீரிரண்டாறெட் டெழுத்துத்தோன்னூ
சான்றவர் கொள்ளார் சமநிலை தாமென்று தாழ்குழையை
மான்தரு கோல மதர்விழி யோட்டிய வாணுதலே.

முதற்சீர் வியநிலையாய்த் தோன்றிடின் நன்று; சமநிலை சான்றவர் கொள்ளார். வியநிலை என்பதை வியம்+நிலை எனப் பிரிக்க. வியம் - ஒற்றைப்பட்ட எண். 'பாலைவியமெல்லாம்' (பழம்பாட்டு). இது விஷமம் என்னும் வடமொழித்திரிபு. 'விய மமே வாழிகுதிரை' (கலித். 96) என்ற கலித்தொகை யுரையைக் காண்க. வியமம் வியம் என்ருயிற்று.

இரண்டு எழுத்தைப் பற்றி வச்சணந்திமாலை ஆசிரியர் சொல்ல வில்லை. அதன் உரைகாரர் "இரண்டெழுத்து ஆராயாது விட்டது எற் றுக் கெனின், 'முன்மொழி யாகலான் மூவசைச் சீரல்லன, நன்மை சால்தெய்வம் நவிலாமை' என்னும் இதனல் மறுக்கப்பட்டது" என் பர். பன்னிரு பாட்டியலும் இங்ஙனமே கூறும். சங்க நூல்களில் பெரும்பாலும் முதற்சொல் ஈரசைச்சீர்களாய்க் காணப்படுகின்றன. மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது எனப்பட்ட எழுத்துக்கள் ஒற்றுடன் கூடியன. 'ஒற்றெழுத்து ஒழிந்து ஒன்பதெழுத்தான் வருவதொரு மூவசைச் சீரின்மையின்' என்பது வெண்பாப் பாட்டியலுரை. 'மூன்றைந் தேழொன் பானெழுத் தான்ற வொற்றுடன் எண்ணி' என்பது பன்னிரு பாட்டியல் (139).

---

5. 3 தெழுத்தாம்; 6-7 தோன்றிய நன்றிரண்; 13 சமனிலை; 14 யாமெ ன்று; 15 தாழ்குழையின்.

### தானம்

6\. குறிலைந்துந் தந்நெடில் கூட்டிஇ உஐஔ கொண்டடைவே
முறைமையிற் பாலன் குமரன் அரசன்மூப் பேமரணம்
இறையென ஏத்து மவன்பெயர் பாலனா எண்ணிவந்த
நெறிமையின் மூப்பு மரணமும் பாட்டிடை நீக்கினவே.

குற்றெழுத்து ஐந்தையும் தம்மினமான நெட்டெழுத்துக்களுடன் கூட்டி, இ,உ நின்ற தானத்திலே முறையே ஐ,ஔ சேர்த்து, அம்முறையில் பாலன், குமரன், அரசன், மூப்பு, மரணம் என்று கொள்க. நூலுள் தலைவனாகச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றவனுடைய பெயரின் முதலெழுத்தைப் பாலனாகக் கொண்டு எண்ணி வந்த முறையில் மூப்பும், மரணமும் குறிக்கும் எழுத்துக்களைக் கொள்ளார்; பாலன், குமரன், அரசன் இவற்றைக் குறிக்கும் எழுத்துக்களைக் கொள்ளுவர்.

விக்கிரம சோழனைப் பற்றிப் பாடிய உலாப் பிரபந்தம் 'சீர்தந்த தாமரையாள் கேள்வன்' என்று தொடங்குகிறது. அ, ஆ; இ, ஈ, ஐ; உ, ஊ, ஔ; எ, ஏ; ஒ, ஓ: என்ற ஐந்து எழுத்துத் தொகுதிகளுள் விக்கிரம சோழன் என்ற பெயரின் முதலெழுத்தாகிய 'வி' 'இ. ஈ, ஐ' என்ற தொகுதியைச் சார்ந்தது; ஏனெனில் 'வி' என்பதில் இகரம் வருதலால். இந்தத் தொகுதியைப் பாலனாக வைத்து முறையே எண்ணினால் இவனுடைய பெயருக்கு, இ, ஈ, ஐ - பாலன், உ, ஊ, ஔ-குமரன், எ, ஏ-அரசன், ஒ, ஓ - மூப்பு, அ, ஆ - மரணம் ஆம். இவனைப்பற்றிய பிரபந்தம் 'சீர்' என்று தொடங்குவதால் இது பாலன் என்ற தானம் ஆம். எனவே இவ்வுலாவின் முதலெழுத்துத் தானப்பொருத்த முடையதாதல் காணலாம்.

இராசராச சோழனுலாவின் முதற் சீராகிய 'புயல் வண்ணன்' என்பதிலுள்ள 'பு' மேற்கூறிய முறையே நோக்கினால் குமரன் என்ற தானத்தைச் சாரும்.

---

6\. 3-4 கூடி அஇஉஎஒக்; 4 உஎஔ, உஎஐஔ; 8-10 குமார னரசனா மூப்புடனே; 11 மறையென; 11-20 தறுசேர் மரணமென்றைந்து வகைப் பட்ட தானமுமாம்-அறமொரு மூன்று நன்றும் பின்னிரண்டு மாகாவென் றுமே; 12-14 எற்றுப்பெயர் பாலனாய்முறை; 16 நெறிமையும்; 19 பாடிட; 20 நீக்கினரே.

தானத்தை நட்பு, உதாசீனம், பகை என மூன்ருகப் பன்னிரு பாட்டியல் பிரிக்கின்றது. பாலன், குமரன், அரசன் என்ற மூன்றும் நட்புத்தானம்; மூப்பு உதாசீனமாகும்; மரணம் பகைத்தானம்.

பால்

7. குற்றெழுத் தாடூஉ மகடூஉ நெடில்நல்ல என்று கொள்வர்
ஒற்றெழுத் தாய்தம்அலியென்றுபாட்டின்முன் ஓதவொட்டார்
மற்றெழுத் தாய உயிர்மெய்க் குறில்நெடில் அவ்வகையே
பொற்ருெடிச் சிற்றிடைப் போர்வேல் நயனப் புணர்முலையே.

குற்றெழுத்து ஆண்பால்; நெட்டெழுத்துப் பெண்பால்; இவை கொள்வர்; ஒற்றெழுத்தும், ஆய்தவெழுத்தும் அலி என்று பாட்டின்முன் சொல்ல உடன்படார். உயிர்மெய்க் குறிலும், நெடிலும் உயிரெழுத்துக்களை யொத்து ஆண் பெண் வகையின் அடங்கும்.

அலியைப் பேடு என்றும் வழங்குவர். 'மூவகைப்பாலும்' என்பது பன்னிரு பாட்டியல் (1). ஆண் பெண் எழுத்துக்கள் மயங்கி வரினும் ஆம். 'அவ்விருபாற்கும் அலி யெழுத்தாகா, தம்முள் மயங்கினுந் தாவின்று என்ப' (பன்னிரு. 52); 'மருவுகுறில் ஆண் நெடில் பெண் ணவரவர்க்காம், மயங்கினுமாம் வரலாகா பேடொற்ருய்தம்' என்பது சிதம்பரப் பாட்டியல். ஒற்றும் ஆய்தமும் முதலாகாவெனினும் பாலுரிமை கூறு முகத்தான் உரிமை கூறினர் என்பது இலக்கண விளக்கப் பாட்டியலுரை. ஆண் பெண்ணிற்கு முறையே குறில் நெடில் உரியவென்ருது, உயிர் பன்னிரண்டும் ஆண் எனவும், உயிர்மெய் யெல்லாம் பெண் எனவும் பன்னிருபாட்டியல் கூறுகிறது.

உண்டி: அமுதெழுத்து

8. குறில்முதல் நான்கும் கசதந பமவக் குற்றெழுத்தும்
அறிவோர் அமுதெழுத் தாமென் றறைவர் தசாங்கத்தயல்
உறுவன வாயின் உலகோர் புகழ்நன்மை எய்துமென்ப
சிறுமுறு வற்செங் குமுதத் துவர்வாய்த் திருந்திழையே.

---

**7.** 2 தாணு; 4-5 நெடிலின மேன்று கொள்வார்; 8 அலியெனப்; 9 பாட்டினில்; 12-14 தாமுயிர் மெய்க்குறிலே நெடில்; 13-14 மெய்குறிலா ணெடில்; 18-19 போர் வேலினன்பர். இரண்டு மூன்றடிகள் தம்முள் மாறிக் கிடக்கின்றன.

**8.** 5 குற்றளவும்; 13 உளவாம்.

அமுதவெழுத்து ஆவன : குறில் முதல் நான்கும் (அ, இ, உ, எ), க,ச, த, ந, ப, ம, வ என்ற ஏழு உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும் ; இவை தசாங்கத்தின் அயலில் வந்தால் புகழும் நன்மையும் வந்து சேரும் என்பர் உலகோர்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' (திவாகரம்-II, 15). முறுவல் - புன்சிரிப்பு ; குமுதம் - ஆம்பல் ; துவர்-பவழம்; இழை - ஆபரணம். திருந்திழை - அன்மொழித்தொகை.

இருவகை உண்டியுள் ஏனைய எழுத்துக்கள் முன் வந்தால் அவை குற்றமாகா எனப் பன்னிருபாட்டியல் கூறும்.

உண்டி : நஞ்செழுத்து

9. கூறும் அளவும் மகரக் குறுக்கமும் யரலவினில்
ஏறும்ஆ ஓவும் யரலவொற் றும்ஏழு நெட்டெழுத்தும்
வேறுள ஆய்தமுட நஞ்செழுத் தாகும்வெற் பாதிபத்தின்
ஈறு முதலும இயலப் பெறுஎன்பர் ஏந்திழையே.

நஞ்செழுத்து ஆவன : அளபெடை (உயிரளபெடை, ஒற்றளபெடை), மகரக் குறுக்கம், யரலவின் ஏறும் ஆ ஓ (யா, யோ; ரா, ரோ ; லா லோ), யரல ஒற்று (ய், ர், ல்), நெட்டெழுத்தேழு (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) என்பன. வெற்பாதி பத்து என்றது தசாங்கத்தை. இதன் ஈற்றிலும் முதலிலும் நஞ்செழுத்து வருதல் கூடாது.

இவற்றோடு ஆய்தக் குறுக்கத்தை வெண்பாப் பாட்டியலுரையும், இகர ஐகார உகார ஔகாரக் குறுக்கங்களைப் பன்னிரு பாட்டியலும் சேர்க்கின்றன. நெட்டெழுத்துக்களுள் ஆவும், ஓவும் நஞ்செழுத்து என்று மட்டும் பன்னிரு பாட்டியலில் காணப்படுகிறது. ஆனால நெட்டெழுத்துக்கள் நஞ்செழுத்தாக வெண்பாப் பாட்டியல் முதலியவற்றில் காணப்படவில்லை. திருவாசகத்துள் 'ஏரார் இளங் கிளியே' என்று தொடங்கும் திருத்தசாங்கம் இதற்கு மாறாக உள்ளது.

---

9. 6-9 ஏறியவோவும் யரலவொற்றோடு மேழ்; 8 யரலழவொற்; 18 இயலைப்; 19 பெறுவென்பன், பெறுதென்பர்.

"முதற்சீரில் மங்கலச்சொல்லின்கண் நஞ்செழுத்து வந்தன வாலோ எனின் 'நஞ்சும் அமுதாம் மங்கலம் புகினே' (பன்னிரு-இந்திரகாளி-43) என்பவாகலின் மூவகைச் சீருள் மங்கலச் சொல் ஒழியக் கொள்க" என்பர் வெண்பாப் பாட்டியல் உரைகாரர். நஞ்செழுத்தான மெய்களுடன் சேர்ந்த உயிரெழுத்துக்களைப் புலவர் கொள்வர் எனப் பன்னிரு பாட்டியல் கூறும்.

**உண்டி: தசாங்கம்**

10. மலையாறு நாடூர் மலர்த்தார் வயப்பரி மாமதத்த
கொலையார் களிறு கொடிமுர சாணை குலவுபத்தும்
தலையான நூலோர் தசாங்கமதென்பர் தமதயலே
கொலையான சொற்பொருள் தோன்றிடில் ஆனந்தங்கூறுவரே.

மலை, யாறு, நாடு, ஊர், தார், பரி, களிறு, கொடி, முரசு, ஆணை என்ற பத்தினையும் நூலோர் தசாங்கம் என்பர்.

இவற்றின் பக்கத்தில் கொலையைப் பற்றிய சொல்லும் பொருளும் வருமாயின் ஆனந்தக் குற்றமாம் என்று கூறுவர்.

பிற்கூறிய வழக்கு ஏனைய பாட்டியல்களில் காணப்படவில்லை.

வய - வலி ; குலவு - விளங்கும்.

வச்சணந்திமாலை முதலியவற்றிற் போலப் பிரபந்தங்களின் இயல்புரைக்குமிடத்துத் தசாங்கம் உணர்த்த வேண்டுவதாயிருப்பினும், இங்கே உணர்த்தியது அமுத எழுத்துத் தசாங்கத்து வரும், நஞ்செழுத்து வாரா என்பதனைக் கூறவேண்டும் காரணம் பற்றி

**படைத்தவர்கள்**

11. விதியவன் முந்நான் குயிர்தரச் செய்ய விரிசடைமேல்
நதியவன் நாரணன் சேயிந் திரன்ஞாலஞ் சூழவரு
கதிரவன் சோமன் தருமன் வருணன் கனகநிதிப்
பதியவன் என்றிவர் மூவா றுடம்பு படைத்தனரே.

---

10. 13-14 தசாங்கமற்றென்பர்; 15 தமக்கயலே.

11. 4-5 செய்தான் விரிசடையோன்; 6-10 நதிநாரணன் செவ்வேளிந்திரன் ஞாலங்கள் சூழவருங்; 9-10 தன்ஞாலஞ் சுழலவரும்; 17 என்றிவை; 20 படைத்தவரே.

பன்னிரண்டு உயிரும் பிரமன் படைத்தனன். சிவபெருமான், நாராயணன், முருகன், இந்திரன், சூரியன், சந்திரன், யமன், வருணன், குபேரன்: என்ற ஒன்பதின்மரும், முறையே இரண்டிரண்டாக, க முதல் பதினெட்டு மெய்களையும் படைத்தனர்.

ட, ண ; த, ந; ற, ன என்ற இவற்றை முறையே முருகன், சந்திரன், குபேரன் என்ற மூவரும் படைத்தனராக இந்நூல் கூற, ட, ண என்ற இரண்டு மெய்களைப் படைத்தவன் செவ்வாய் என்றும், த, ந என்ற இரண்டு எழுத்துக்களைப் படைத்தவன் புதன் என்றும், ற, ன என்பனவற்றைப் படைத்தவன் வியாழம் என்றும் வெண்பாப் பாட்டியல் தெரிவிக்கின்றது. பன்னிரு பாட்டியலில் ல - வ, ழ-ள, ற-ன இவற்றைப் படைத்தவர் முறையே குபேரன், யமன், வருணன் என்று காணப்படுகிறது. ஆனல் இந்நவநீதப் பாட்டியல் இவற்றிற்கு முறையே யமன், வருணன், குபேரன் என்று கூறுகின்றது. படைப்புக்கூறுதலில் சிதம்பரப்பாட்டியல் இப்பாட்டியலோடு ஒத்துள்ளது.

### வருணம்

12. காலயன் இந்திரன் சந்திரன் கண்டன காவலர்க்கு
மாலயன் சேயரன் கண்டன மாமறை யோர்க்குநிதிக்
காலையன் அந்தகன் கண்டன வாகும் வணிகருக்கு
வேலையன் கண்டன வேளா ளருக்கு விலக்கல்லவே.

காலயன் (சூரியன்), இந்திரன், சந்திரன், படைத்த எழுத்து (த, ந, ப, ம, ய, ர) மன்னர் வருணத்திற்குரியன. திருமால், பிரமன், முருகன், சிவபெருமான் படைத்தன (அ ஔ ; க, ங, ச, ஞ, ட, ண) மறையவர்களுக்கு உரியவாம். நிதிக்காலையன் (குபேரன்), அந்தகன் (யமன்) என்ற இருவரும் படைத்த ல, வ, ற, ன என்ற நான்கும் வணிகர்க்கு உரிய. வேளாளருக்கு வேலையன் (வருணன்) கண்டன (ழ, ள) ஆம்.

நிதிக்கு ஆலையன் எனப்பிரிக்க; வேலை - சமுத்திரம், வேலையன் - சமுத்திரத்திற்குரியவன், காலயன்; காலகிருத் என்பதுபோலக் காலத்தைத் தோற்றுவிப்பவன் என்று பொருள்பட்டுச் சூரியனைக் குறித்தது. மறையோர்க்கு நால்வரும், மன்னர்க்கு மூவரும், வணி

12. 2-3 சந்திரனிந்திரன்; 10-11 யோர்க்குநிதி மாலையன்.

கர்க்கு இருவரும், வேளாளருக்கு ஒருவரும் கண்ட எழுத்துக்கள் உரியன என்று கூறுதல் நோக்கத்தக்கது.

### நாள்

**13.** அகர முதல்நான்குங் கார்த்திகை மற்றவற் றின்அடைவே
உகர முதல்ஐந்தும் பூராடம் உத்திரா டம்ஒழிந்த
ஒகர முதல்மூன்றும் ஏய்ந்த துயிரில் உயிர்மெய்யினிற்
ககர முதல்நான்கும் ஓணமென் றோதுவர் கற்றவரே.

அ, ஆ, இ, ஈ - கார்த்திகை ; உ, ஊ, எ, ஏ, ஐ - பூராடம் ; ஒ, ஓ, ஔ - உத்திராடம் ; க, கா, கி, கீ - ஓணம் ; அடைவே-முறையாக.

**14.** ஏனைக் குகர முதலிரண் டாதிரை யென்பர் அப்பால்
ஆன எழுத்தொரு மூன்றும் புனர்பூச மாம் அடைவே
போனபின் நின்றன மூன்றெழுத் தும்பூசம்என்ப பொய்யா
வானக் கருங்குழல் வம்பார் வனமுலை வாணுதலே.

கு, கூ - திருவாதிரை ; கெ, கே, கை - புனர்பூசம் ; கொ, கோ, கௌ - பூசம் ; வம்பு - கச்சு.

**15.** ஏய்ந்த சகரம் இரேவதி நாள்முதல் மூன்றினுக்கும்
வாய்ந்த எழுத்தொரு நான்கைந்துமூன்றும அவற்றின்வர்க்கத்
தாய்ந்தஞும் மூன்றும் அவிட்டமென் றுயின அஞ்சனத்தைத்
தோய்ந்து குழையைத் தொடருந் தடங்கண் துடியிடையே.

ச, சா, சி, சீ - இரேவதி ; சு, சூ, செ, சே, சை - அச்சுவினி ; சொ, சோ, சௌ - பரணி ; ஞா, ஞெ, ஞொ - அவிட்டம்.

---

**13.** 4-5 யாமற் றவற்றினிடை; 9-10 மாமென வோதுவர்காண்; 11-15 திகழுமொகர முதன் மூன்றுமே யுத்திராட மென்பர்; 13-15 போந்ததினி யுயிர்மெய்யெழுத்தில்; 19 றோதினர்.

**14.** 4-10 டேந்திருவாதிரையென் றுன வவற்றி னடைவொரு மூன்றும் புனர்பூசமாய்ப்; 9-10 புணர்பூசமாய் முன னின்ற.

**15.** 3 இரேபதி; 4 நான்கிதன்; 11 தாய்ந்தரு; 13 அவிட்டமீ 16 தோய்ந்த; 19 திருக்கண்.

'ஞம்மூன்றும் அவிட்டம்' என்றாராயினும், ஞகரத்துள் 'மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களையே கொள்ளவேண்டும். ' ஆ எ ஒ எனு மூவுயிர் ஞகாரத்துரிய (தொல். மொழி. 31) என்றதனால்' ஞா, ஞெ, ஞொ என்ற மூன்றுமே கருதப்பட்டதாகல் வேண்டும். குமாரசுவாமியத்துள் ஞ, ஞா, ஞி என்ற மூன்றும் அவிட்டம் என்று சொல்லப்பட்டுள்ளன (நட்சத்திர சரித்திரப் படலம்-1).

16. ஓதுந் தகரம் இரண்டேழு மூன்றடைவே உலவாச்
சோதி விசாகஞ் சதையமும் ஆமென் தொடர்நகர
ஆதியி லாறும் அனுடம்அல் லாதன ஆறெழுத்தும்
ஏதமில் கேட்டைபூ ரட்டாதி யான இருவகையே.

த, தா - சுவாதி ; தி, தீ, து, தூ, தெ, தே, தை - விசாகம்; தொ, தோ, தௌ - சதையம் ; ந, நா, நி, நீ, நு, நூ - அநுடம் ; நெ, நே, நை - கேட்டை ; நொ, நோ, நௌ - பூரட்டாதி.

17. சொல்லும் பகரத்துள் உத்திர நாள்முதல் மூன்றும்பற்றிச்
செல்லும் ஒருநான் கிரண்டாறும் சென்றபின் மவ்வருக்கம்
புல்லு மகம்இரு மூன்றுமூன் றாயிலி யம்புயலும்
அல்லும் பொருங்குழல் அல்லா தனபூரம் ஆயினவே.

ப, பா, பி, பீ - உத்திரம் ; பு, பூ - அஸ்தம் ; பெ, பே, பை, பொ, போ, பௌ - சித்திரை ; ம, மா, மி, மீ, மு, மூ - மகம் ; மெ, மே, மை - ஆயிலியம் ; மொ, மோ, மௌ - பூரம்.

18. யகரத்துள் யாவுத்தி ரட்டாதி பின்னும்யக ரத்துள்ளூம்
பகரச்செய் மூலம்யூ காரம்யோ காரம்அப் பான்மருவும்
வகரத் திருநான்கும் ரோகணி யோடு மகசிரமாம்
சிகரப் பணைமுலைச் சிற்றிடைப் பேரல்குற் றேமொழியே.

யா - உத்திரட்டாதி ; யூ, யோ - மூலம் ; வ, வா, வி, வீ - ரோகணி ; வெ, வே, வை, வௌ - மகசிரம்.

---

16. 2-5 தகர வுயிர்மெய் இரண்டேழு மூன்றடைவே.

18. 7-15 மூலம் யுகரயோகாரமிப்பான்மருவும் வகரத்தி னன்கும் பின்னன்கு முரோணி மிருகசிரம்; 6. பகரத்த, பகரத்தரு; 8 யகாரம்யொ 10 பார்மருவும்; 12 தொரு நான்கும்; 15 மிருகசிரமுமாஞ்.

மகசிரம் - மிருகசீர்ஷம். இச்சொல் மகயிரம் என வழங்குதலும் உண்டு. யு, யூ - மூலம் என்னும் குமாரசுவாமியம் (நட்சத்திர சரித்திரப் படலம்-1). வகரத்து இருநான்கும் என்றது வகரத்துள் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை; அவையாவன வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ என்பன: 'உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்குயிர், வ என்னெழுத்தொடு வருதலில்லை' (தொல் - மொழி - 63) என்றாராகலின்.

19. மொழிந்தஅந் நாட்களை மூவொன்ப தாக்கி அவற்றின்முன்னர்
இழிந்தன ஒன்றுமூன் றைந்தே ழிவையொக்க ஏனையவுள்
அழிந்தன வல்லன அட்டம ராசி வயிநைசிகம்
கழிந்தன நின்றன தாம்இயல் பாகக் கருதுகவே.

சொல்லிய இருபத்தேழு நாட்களையும் பாட்டுடைத்தலைவனுடைய இயற்பெயரின் முதலெழுத்திற்குரிய நாளையாவது, தலைவன் பிறந்த நாளையாவது முதலாகக் கொண்டு ஒன்பது ஒன்பதாக மூன்று கூறு செய்யவேண்டும். இவ்வாறு பகுக்கப்படும் மூன்று கூற்றிற்கும் சன்மம், அனுசன்மம், உபசன்மம் என்று இலக்கண விளக்கப் பாட்டியலின் உரையிற் பெயர் இடப்பட்டுள்ளன. அந்த நாள் முதலாக எண்ணி வந்த முறைமையில் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு: இவை இழிந்தன. இவற்றைப்போல ஏனையவற்றுள் அட்டமராசி நக்ஷத்திரங்களும் வயிநைசிகமும் அழிந்தன; ஆதலால் கொள்ளத்தக்கனவல்ல. கழிந்து நின்ற பிற நட்சத்திரங்களையே இயல்பாகக் கருதி, அவற்றைக் கொள்ளுக. அட்டமராசி-எட்டாம் ராசிக்குரிய இரண்டேகால் நாள் (17, 18-வது நாள்). வயிநைசிகம் - எண்பத்தெட்டாம் கால் (23-வது நட்சத்திரம்). இச்சொல் விநாசம் என்றதன் தத்திதாந்தம்; அழிவைச் செய்வது என்பது பொருள். 'சிறந்த சீர்த்தலைவன் பிறந்த நாளாயினும், பெயர் நாளாயினும் இயலுற வுணர்ந்தபின்' என்பது பன்னிரு பாட்டியல்; சிதம்பரப் பாட்டியலும் இவ்வாறே விதிக்கும். ஆனால் இலக்கண விளக்கப்பாட்டியல் 'இறைவன் பெயர் முதல் எழுத்தை நோக்கி' எனப் பெயருக்குரிய நாளினையே குறிப்பிடுகின்றது.

---

19. 1 மொழிந்தன நாட்களை; 5 அவற்றின் பின்னர்; 6 இழிந்தன; 10 இத்தனையும்; 14-15 ராசிவை நைசிகங்கள்; 20 கருதுவரே.

## கதி

20. வல்லினம் குற்றெழுத் தீறின்றி யேவரின் வானோர்கதி
மெல்லினம் ஈறின்றி மேவு நெடில்முதல் நான்கும்வந்தாற்
சொல்லுவர் மக்கட் கதியெனச் சொன்ன மொழிமுதற்கண்
புல்லு மெனின்அவை யெல்லாப் புலவரும் போற்றுவரே.

வல்லினம் ஆறும், குற்றெழுத்து ஐந்தும், ஈற்றெழுத்து நீங்க வருவன (க, ச, ட, த, ப, அ, இ, உ, எ,) வானோர்கதியாம். மெல்லினம் ஆறனுள் ஈற்றெழுத்து ஒழிய நின்ற எழுத்து ஐந்தும், பொருந்திநின்ற நெட்டெழுத்து ஏழனுள் முதல் நின்ற எழுத்துக்கள் நான்கும் (ங, ஞ, ண, ந, ம, ஆ, ஈ, ஊ, ஏ) மக்கட்கதியாகும். இவ்விரண்டும் முற்சொன்ன முதல்மொழியிடத்துப் பொருந்திவருமாயின், அவற்றை எல்லாப் புலவரும் போற்றுவர்.

21. பன்னொன்று பத்துயிர் யம்முதல் மூன்றுபன் னேழ்பதினைந்
தென்னும் இவையே விலங்கின் கதிஇயம் பாவெழுத்துத்
தன்னை நரகர் கதியென்று சாற்றுவர் தாமுணர்ந்தோர்
முன்னை மொழிக்கண் வரத்தகா தென்று மொழிவர்களே.

பதினொன்ருவது உயிரான ஓ-வும், பத்தாவது உயிரான ஒ-வும், யமுதலான ய, ர, ல என்ற மூன்று எழுத்துக்களும், பதினேழாம் மெய்யெழுத்தான ற-வும், பதினைந்தாம் மெய்யான ழ-வும் என்ற இவை விலங்குகதி எழுத்துக்கள். இங்குக் கூறப்படாத ஏனைய எழுத்துக்களை (ஐ, ஔ, வ, ள, ன) நரகர்கதி என்று உணர்ந்தோர் சொல்லுவர். இவ்விரண்டு கதிக்குரிய எழுத்துக்களும் முதன்மொழியிடத்து வரத்தகாவென்று சொல்லுவர்.

## கணம்

22. நேரசை மூன்றிய மானன் நிரைப்பின்பு நேரிரண்டு
சேர்வன திங்கள் நிரையசை மூன்றுஞ் செழுநிலமாம்

---

**20.** 3 தீறன்றி; 7 மீறன்றி; 13 கதியென்று; 17 மெனினிவை; 18-20 நன்றென்று நாவலர் போற்றினரே.

**21.** 1 மன்னொன்று; 7 அவையே; 15 தாமுணர்வோர்; 16 முன்னர்; 20 மொழிந்தனரே.

**22.** 3 மானும்; 5-6 நேரிரண்டாய்ச் சேர்வரின்.

நேரசைப் பின்னர் நிரையிரண் டாய்வரின் நீர்க்கணமாம்
தேரியல் அல்குற் றிருவே இதுநல்ல சீர்க்கணமே.

நேர், நேர், நேர் — இயமானன் ; நிரை, நேர், நேர் - திங்கள்; நிரை, நிரை, நிரை - நிலம்; நேர், நிரை, நிரை - நீர் ; இந்த நான்கு சீரும் நன்மையைத்தரும் சீர்க்கணமாகும். இயமானன் என்பதைச் சுவர்க்கம் என்னும் பெயரால் அழைப்பர் வச்சணந்தி மாலையுடையார். இயமானன் என்பதன் பொருள் யாகத்தலைவன். அந்நூலாசிரியராகிய குணவீர பண்டிதர் சைனராகையால் இதனைக் கொள்ளாது இதன்பயனாகிய சுவர்க்கத்தைக் கொண்டார்போலும். இலக்கண விளக்கப் பாட்டியல் ஆசிரியர் பெரும்பாலும் முன்னோர் நூலினையும், உரைகளையும் பின்பற்றி யுரைப்பவராதலின், அவரும் சுவர்க்கமே கொண்டனர்.

23. நிரையிரண் டாய்ப்பின்பு நேரிறின் அந்தரம் நேரிரண்டாய்
நிரையிறின் மாருதம் நேர்நடு வாகி நிரையிருபால்
விரைதரு கோதைவெந் தீக்கணம் நேரிரண் டின்நடுவே
நிரைவரு மாயிற் பருதிஇந் நாற்கணம் நீக்கினவே.

நிரை, நிரை, நேர்-அந்தரம் ; நேர், நேர், நிரை - மாருதம்; நிரை, நேர், நிரை - தீ ; நேர், நிரை, நேர்-பருதி: இந்நான்கு கணங்களும் வரும் சீர் செய்யுட்குப் பொருந்தா என்று நீக்குவர். விரைதரு கோதை - மகடூஉ முன்னிலை. இக் கணங்களின் பெயர்கள் இறைவனது அட்டமூர்த்தங்களினின்று கொள்ளப்பட்டனபோலும். அட்டமூர்த்தங்களாவன : 'பார்நீர் தேயு வாயுவாகாயம், சூரிய னிந்திய மானன் அட்டமூர்த்தம்' (திவாரம் - பல்பொருட். 117).

சிதம்பரப் பாட்டியலும் பன்னிரு பாட்டியலும் இயமானன் முதலிய எண்வகைக் கணத்திற்கும் நாளும் பலனும் சொல்லுகின்றன. இயமானன், மதி, நிலம், நீர் இந்நான்கு கணங்களுக்கும் இப்பெயர்களோடு பிரமகணம், இலக்குமிகணம், சுரபிகணம், கருடகணம் என வேறு நான்கு பெயர்களும் சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் என்ற இரண்டு நூல்களிற் காணப்படுகின்றன. இவற்றைக் கணவிவரப் பட்டிகையிற் காண்க.

---

**22.** 12 பின்பு.
**23.** 20 நீக்குவரே.

### தசாங்கச்சீர்

24. உன்னுந் தசாங்கம் ஒருசீ ரதனுள் உரைப்பதன்றிப்
பின்னின்ற சீரொடு சேர்ந்தே பிளவு படிற்பிழையாம்
இன்னும் அவைதாம் புணர்மொழி யாயின் இயல்புபெறும்
மின்னும் வெளியுந் துடியும் நிகரிடை மெல்லியலே.

தசாங்கமாகக் கூறப்பட்ட பத்தும் ஒரு சீரினுள் அமையாது பின் நின்ற சீரோடும் சேர்ந்து பிளவுபடுமாறல் குற்றமாம். அப்பெயர்கள் புணர்மொழியில் வருமாறல் இயல்பு புணர்ச்சியைப் பெற்று வரும்.

புணர்மொழியா யிருப்பின் பிரித்தவழிப் பெயரிறுதிக்கண் தொகைச் சொற் கொடுத்துக் கூறின் வழுவாகாதென்பர் இலக்கண விளக்கப்பாட்டியலார்.

மேற்கூறிய பத்துப் பொருத்தங்களுள் மங்கலம், சொல் என்ற இரண்டும் சொல் நோக்கியும், கணம் சீர்நோக்கியும், எழுத்து முதலிய ஏழும் எழுத்து நோக்கியும், கூறப்படும் பொருத்தங்களாம்.

இவ்வியல் முதல்மொழி யோத்து என்றும், பொருத்தவியல் என்றும் சில பிரதிகளிற் காணப்படுகிறது.

**முதல்மொழி யியல் முற்றும்.**

---

1. மங்கலம் — முதற்சீர் திரு, மணி முதலிய மங்கலச் சொற்கள் பொருந்தி வருதல்.
2. சொல் — பொருள் தெரியாமை, சிறப்பின்றி நிற்றல், பொருள் பலவாய் வருமொழியாதல், வகையுளி சேர்தல், வருஞ்சீருடன் திரிதரும் ஈறுடைத்தாதல் என்ற இக் குற்றங்கள் நீங்க முதற்சொல் வருதல்.
3. எழுத்து — முதற்சீர் 3, 5, 7 அல்லது 9 எழுத்துக்கள் கொண்டு (வியநிலை) வரின் நன்று. சமநிலை சான்றவர் கொள்ளார்.

---

**24.** 8. சோந்து.

| | | |
|---|---|---|
| 4. | தானம் | அ, ஆ - பாலன்; இ, ஈ, ஐ - குமரன்; உ, ஊ - அரசன்; எ, ஏ - மூப்பு; ஒ, ஓ, ஔ - மரணம். இவ்வைந்து தொகுதியுள் தலைவன் பெயரின் முதல் எழுத்தைப் பாலனாக வைத்து எண்ணி வரும் முறைமையில் பாலன், குமரன், அரசன் நன்று; ஏனைய வரலாகா. |
| 5. | பால் | குறில் - ஆண்; நெடில் - பெண். பால் மயங்கினும் குற்றமில்லை. அலி (ஒற்று, ஆய்தம்) வரலாகாது. |
| 6. | உண்டி | அமுதவெழுத்து: அ, இ, உ, எ, க, ச, த, ந, ப, ம, வ. நஞ்செழுத்து: அளபெடை, மகரக் குறுக்கம், யரலவின் ஏறும் ஆ ஓ. ய்ரல ஒற்று, ஏழு நெட்டெழுத்து, ஆய்தம். அமுதவெழுத்துக்கள் முதன் மொழிக்கு ஆம். அல்லன ஆகா. |
| 7. | வருணம் | அந்தணர்: அ - ஔ; க - ண. அரசர்: த - ர. வணிகர்: ல, வ, ற, ன. வேளாளர்: ழ, ள. |
| 8. | நாள் (நட்சத்திரம்) | பெயர்நாள் அல்லது உற்பவ நாள் தொடங்கி 27-நாட்களையும் மூன்று கூறு செய்க. இவற்றில் 1, 3, 5, 7-ல் வரும் எழுத்துக்களும் அட்டமராசி, வயினாசிக எழுத்துக்களும் ஒழிந்தன நன்று. (பட்டிகை பார்க்க) |
| 9. | கதி | வானோர்: க, ச, ட, த, ப, அ, இ, உ, எ. மக்கள்: ங, ஞ, ண, ந, ம, ன; ஆ, ஈ, ஊ, ஏ. விலங்கு: ஒ, ஓ, ய, ர, ல, ழ, ற. நரகர்: ஐ, ஔ, வ, ள, ன. வானோர், மக்கள் கதி எழுத்துக்கள் முதன்மொழிக்கு ஆம்; ஏனைய ஆகா. |
| 10. | கணம் | நற்கணம்: இயமானன், மதி, நிலம், நீர். தீக்கணம்: வான், பரிதி, காற்று, தீ. நற்கண எழுத்துக்கள் ஆம்; தீக்கணம வரலாகா. (பட்டிகை பார்க்க. இதில் ந, ப முதலிய கணங்கள் வடமொழி வழக்குப் பற்றியன). |

## நட்சத்திரப் பொருத்தம்

| | |
|---|---|
| அ, ஆ, இ, ஈ | கார்த்திகை |
| உ, ஊ, எ, ஏ, ஐ | பூராடம் |
| ஒ, ஓ, ஔ | உத்திராடம் |
| க, கா, கி, கீ | ஓணம் |
| கு, கூ | திருவாதிரை |
| கெ, கே, கை | புனர்பூசம் |
| கொ, கோ, கௌ | பூசம் |
| ச, சா, சி, சீ | இரேவதி |
| சு, சூ, செ, சே, சை | அச்சுவினி |
| சொ, சோ, சௌ | பரணி |
| ஞா, ஞெ, ஞொ | அவிட்டம் |
| த, தா | சுவாதி |
| தி, தீ, து, தூ, தெ, தே, தை | விசாகம் |
| தொ, தோ, தௌ | சதையம் |
| ந, நா, நி, நீ, நு, நூ | அநுடம் |
| நெ, நே, நை | கேட்டை |
| நொ, நோ, நௌ | பூரட்டாதி |
| ப, பா, பி, பீ | உத்திரம் |
| பு, பூ | அஸ்தம் |
| பெ, பே, பை, பொ, போ, பௌ | சித்திரை |
| ம, மா, மி, மீ, மு, மூ | மகம் |
| மெ, மே, மை | ஆயில்யம் |
| மொ, மோ, மௌ | பூரம் |
| யா | உத்திரட்டாதி |
| யூ, யோ | மூலம் |
| வ, வா, வி, வீ | ரோகணி |
| வெ, வே, வை, வௌ | மகசிரம் |

பெயர் நாள் அல்லது உற்பவநாள் தொடங்கி 27-நாட்களையும் மூன்று கூறு செய்க, ஒவ்வொன்றிலும் 1, 3, 5, 7-ம் நாட்களுக்குரிய எழுத்துக்களும் அட்டமராசி, வயினாசிக எழுத்துக்களும் இழிந்தன; எனவே ஆகா. ஏனைய எழுத்துக்கள் வரின் நன்று.

# கணவிவரப் பட்டிகை

| சீர் | கணம் | கணம் (சிதம்.) | சிறப்புப் பெயர் | நாள் | பலன் | இலக். - விளக். மாமூலர் |
|---|---|---|---|---|---|---|
| நேர் நேர் நேர் தேமாங்காய் | இயமானன் துறக்கம் | ந | அயன் | பரணி | வாழ் நாள் | பெருக்கம் செய்யும் |
| நிரை நேர் நேர் புளிமாங்காய் | மதி | ப | திரு | மிருகசீரிடம் | புகழ் | வாழ்நாள் தரும் |
| நிரை நிரை நேர் கருவிளங்காய் | வான் | த | | புனர்பூசம் (ஓணம்- பன்னிரு) | சூனியம் (கேடு பன்னிரு) | வாணாளகற்றும் |
| நேர் நிரை நேர் கூவிளங்காய் | பரிதி | செ(ஜ) | | பூசம் (புனர் பூசம் பன்னிரு) | நோய் | வீரியம் போக்கும் |
| நேர் நேர் நிரை தேமாங்கனி | காற்று | ச(ஸ) | | சுவாதி | கேடு (நாட்டறை போக்கும் பன்னிரு) | சீர், சிறப்பு அகற்றும் |
| நிரை நேர் நிரை புளிமாங்கனி | தீ | ர | | கார்த்திகை | சாவு (இடுக்கண் பன்னிரு) | நோயது சேரும் |
| நிரைநிரைநிரை கருவிளங்கனி | நிலம் | ம | கோ | கேட்டை | திரு | திருவிளங்கும் |
| நேர் நிரை நிரை கூவிளங்கனி | நீர் | ய | கருடன் | சதயம் | மகிழ்ச்சி (பெருக்கம் பன்னிரு) | சீர், சிறப்பு எய்தும் |

## II. செய்யுள் மொழியியல்

### பிள்ளைக்கவி

25. பூவிற் றிருவைப் புணர்தலிற் பொன்முடிப் பூண்கடகம்
மேவப் படுதலின் வெண்சங்கம் ஆழி விரும்புதலிற்
காவற் கடவுளைக் கார்முகில் வண்ணனைக் காசினியோர்
பாவுக்கு முன்னே பகர்வர்காப் பாகப் பணிமொழியே.

செய்யுட்களின் இலக்கணத்தைச் சொல்லும் இயல் செயயுட்கள் என்று இங்குக் குறிப்பிடுவன தனிச் செய்யுளல்ல ; தொடர்நிலைச் செய்யுட்களாம். 'சூழ்வினைச் சிலம்பு காரணமாகச், சிலபபதிகார மென்னும் பெயரால், நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' (சிலப்-பதிகம் 58-60) என்ற சிலப்பதிகார அடிகளாலும் இது விளங்கும்.

பிள்ளைக் கவிக்குக் காப்பாக முதலில் காவற் கடவுளாகிய திருமாலைக் காசினியோர் சொல்லுவர். அவனை முதலாகக் கூறு தற்குக் காரணம அவன் இலக்குமியோடு சேர்ந்திருத்தலும், முடியும், ஆபரணமும், கடகமும் அணிதலும், வெண்சங்கினையுப, சக்கரத்தினையும ஏந்துதலும் ஆம்.

பன்னிரு பாட்டியலிலும, பிங்கலந்தையிலும் அவன் அணியும் பொருள்களுள் முடி, கடகம், பூணுடன், தார், குழை, நூல் என்ற மூன்றும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆறல் அந் நூல்கள் திருமால் வெண்சங்கும், ஆழியும் ஏந்துதலை ஒரு காரணமாகக் கூறவில்லை. பிங்கலந்தை அச்சுப பிரதி 'மன்னு பிரமனைத் தருதலானும' (அநுபோக வகை-266) என்ற ஒரு காரணமும் தருகிறது. கைலாச நிகண்டு 'தண்டது மற்றவன் தாங்கலானும்' என்று கதை தாங்குதலையும் ஒரு காரணமாகக் கூறும்.

26. விரிசடைப் பிஞ்ஞகன் வேய்த்தோ ளெழுவர்முன் காக்கவெனா
அருள்பெறக் கூறின் அவரவர் செய்யுங் கொலையகற்றி
உரியநற் கங்கை உமையாள் மதியூர் விடைகடுக்கை
விரைமலர்த் தார்மற்று மங்கலமாக விளம்புவரே.

---

**25.** 18-19 பகர்வன காப்பாய்ப்; 20 பணிமொழியே.
**26.** 17 தாரிவை; 20 வியம்பனரே.

சிவபெருமானும், சத்த மாதாக்களும் பாட்டுடைத்தலைவனைக் காக்க என்று அவர்தம் அருள்பெறக் கூறுமிடத்து, அவர்களுடைய கொலைத்தொழில் பற்றிய செய்திகளை அகற்றி, பின்னுகனுக்குரிய கங்கை, உமையாள், மதி, விடை, கொன்றைத்தார் முதலியவற்றை மங்கலமாகப் புலவர் சொல்லுவர்.

27\. பதினொரு மூவரும் பங்கயத் தோனும் பகவதியும்
நிதிமுத லோனும் பரிதியும் சாத்தனும் நீள்அமரர்க்
கதிபதி தானும் அறுமுகன் ஐங்கரத் தற்புதனும்
மதிபுனை வேணி வடுகனும் காவல்செய் வானவரே.

பதினொருமூவர், பிரமன், பகவதி, குபேரன், சூரியன், சாத்தன், இந்திரன், முருகன், கணபதி, வடுகன் என்ற இவர் காக்கின்ற தேவர்களாம். இவர்களைக் காப்பினுள் கூறுவர்.

இவருடன் ஏழு மங்கையரும், அரனும் காப்பினுள் வரும் கடவுளர் என்பது பன்னிருபாட்டியல். இந்நவநீதப் பாட்டியலின் ஆசிரியர் முன் செய்யுளில் இவ்விருவரையும் சேர்த்துள்ளமையால், இதனுள் கூறாது விட்டனர் போலும். பதினொருமூவர்: பன்னிருவர் ஆதித்தர், பதினொருவர் உருத்திரர், எண்மர்வசுக்கள், இருவர் மருத்துவர் ஆகிய முப்பத்து மூவர். 'நால்வேறியற்கைப் பதினொரு மூவரொடு' என்றார் திருமுருகாற்றுப் படையிலும். பன்னிரண்டு ஆதித்தரின் வேறாகப் பரிதியை இப்பாட்டியல் எண்ணுவதுபோல, பன்னிருபாட்டியலும் எண்ணுகின்றது. திருமாலைக் காப்பில் புகழவேண்டும் என்பதும், இன்னமுறையில் பாடவேண்டும என்பதும், காப்பில் வரும் தேவர் இவர் என்பதும் இப்பாட்டியல்போலப் பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கப்பாடடியல் என்ற இரண்டும் விளக்குகின்றன. வெண்பாப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல்களில் இச்செய்திகள் விரிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால் இவை காப்பிற் கொலைச் செய்தி வரக்கூடாது என்று மட்டும் தெரிவிக்கின்றன.

28\. முற்றந்த காப்புச்செங் கீரைதால் சப்பாணி முத்தத்தொடு
மற்றந்த வாரானை அம்புலி வாய்ந்த சிறுபறையே

---

**27.** 10 நீள் வானவருக்.
**28.** 1 முற்றிங்கள்; 3-5 கீரைதாலாட்டுச் சப்பாணிமுத்தம்; 9 வாய்த்த.

சிற்றில் சிதைத்தல் சிறுதேர் உருட்டுதல் சேர்ந்தபத்தும்
சுற்றத் தளவுங் கவிக்கெல்லை யாய்க்கொண்டு சொல்லுவரே.

முன்தரப்பட்ட காப்புடனே செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில் சிதைத்தல், சிறுதேருருட்டுதல் என்ற பத்தும் சொல்லுவர். கிளைஞர் தொகுதியினளவும் கவிக்கு எல்லையாகும்.

சுற்றத்தளவும் கவிக்கு எல்லையாதலாவது அவரையும் உளப்படுத்திக் காப்பு முதலியன பாடுதல். செங்கீரை-தலையெடுத்து முகமசைத்தல்; சப்பாணி-குழந்தை தன் இருகைகளையும் சேர்த்துக் கொட்டுதல்; வாரானை - வருகை, குழந்தையை வா என்று அழைத்தல்; அம்புலி - சந்திரனைக் குழந்தையுடன் விளையாட அழைத்தல். பிற வெளிப்படை.

29. மூன்று முதலிரு பத்தொரு திங்கள் முடிவளவாய்த்
தோன்று நிலைபத்துஞ் சொல்லுவர் தோகையர் தங்களுக்கும்
ஆன்ற புகற்சிக்கண் அவ்வகை யாமென்பர் ஐந்தேழென
ஏன்றநல் யாண்டி னகவரை தானும் இயம்புவரே.

மூன்றுமுதல் இருபத்தொரு திங்களுக்குள்ளாகப் பிள்ளைக் கவியில் வரும் பத்துப் பருவங்களையும் சொல்லுவர். ஆடவரையன்றிப் பெண்களையும் பிள்ளைக் கவியால் பாடுமிடத்தும் அவ்வாறே மூன்று முதல் இருபத்தொரு திங்கள் வரையில் கூறுவர். ஐந்தாண்டு முதல் ஏழாண்டு வரையிலும் பிராயமுள்ளவரைப் பிள்ளைக் கவி பாடுதலும் உண்டு.

ஐந்தினும் ஏழினும் பாடுதலுண்டு என்பது வெண்பாப் பாட்டியல். இலக்கண விளக்கப் பாட்டியலில் 'மூன்றைந் தேழாண்டினும் ஆகும்' என மூன்று, ஐந்து, ஏழு என்ற வரையறையுள்ளது. இருபத்தொரு திங்களிலும், ஒற்றைப்பட்ட திங்களில் பிள்ளைக் கவி பாடுதல் நன்றென்பர். இவ்வரையறை சிதம்பரப் பாட்டியலிலும், கைலாச நிகண்டிலும் தெளிவாகக் கொடுக்

---

**28**. 18-19 கவிக்கேது வாய்க்கொண்டு.

**29**. 4-5 திங்களின் முன்பியலத்; 12 புகழ்ச்சிக்கும்; 12-13 புகற்சிக் கணிவகை; 16-19 என்றகு கண்ணி நல்லாண்டின் கவிதான்.

கப்பட்டுள்ளது. 'மூன்று முதல் இருபத்தொன்றுள் ஒற்றைப், பெறு திங்கள் தனிற் பிள்ளைக் கவியைக் கொள்ளே' என்பது சிதம்பரப் பாட்டியல். பதினாறு ஆண்டு வரையில் ஆண்பாற்குப் பிள்ளைக் கவிபாடலாம்; பெண்பாற்குப் பூப்பு நிகழ்வளவும் பாடலாம்: என்ற செய்தி பன்னிரு பாட்டியலில் இந்திர காளியார் கூற்றாகக் காணப்படுகிறது. ஆண்பாற்கும், பெண்பாற்கும் உரிய உவமைப் பொருள்கள் இன்னவென்ற செய்தியும் பன்னிரு பாட்டியலிற் காணலாம். இவ்வுவமைகள் இப் பாட்டியலில் 83, 84-ம் செய்யுட்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

30. சொன்ன சிறுபறை யேமுதல் மூன்றுஞ் சுருங்கிவரும்
வன்ன விருத்தம் வகுப்பேயீ ரெண்கலை வண்ணச் செய்யுள்
அன்னவை ஈரைம் பஃதி னெலையென் றறைவர்கற்றோர்
பொன்னு மணியும்நற் போகமும் ஈன்ற புணர்முலையே.

சிறுபறை, சிற்றில் சிதைத்தல், சிறுதேர் உருட்டல் என்னும் மூன்றும் ஆடவர்க்குச் சுருங்கிவரப் பாடுதலும் உண்டு என்னும் இந்நூல். ஏனைய பாட்டியல்களில் இது காணப்படவில்லை. அழகிய ஆசிரிய விருத்தமும், வகுப்பும், ஈரெண்கலைவண்ணமும் என்றிவற்றுள் ஒன்றால் நூறுபாடல் வருதலை அதற்கு எல்லையென்பர் கற்றோர்.

ஈரெண்கலைவண்ணம் – வகுப்பில் ஒருவகை; 'ஓரடிக்குப் பதினாறுகலை தொடுத்த பல்சந்த வகுப்புக்கள் (செய். 13) என்பது வெண்பாப் பாட்டியல் உரை. கலிவிருத்தத்தையும் உடன் கூட்டும் பன்னிரு பாட்டியல் (188).

31. சிறுபறை யேமுதல் மூன்றுந் தெரியில்அப் பேதையர்க்குப்
பெறுவன வல்ல இளையனே யாயினும் வேந்தன்பெருந்
மறுவில் முடிசூட்டிப் பிள்ளைக் கவிகாப்பு மாலைமுன்னே
அறிபவர் ஒன்பதும் பன்னொன்று மாக அறைவர்களே.

சிறுபறை முதல் மூன்றும் பெண்களுக்குக் கூறார். வேந்தன் இளையனாயிருப்பினும் குற்றமற்ற முடிசூடியபின் பிள்ளைக்கவி

30. 6 மன்னும்; 11 அன்னவையன்ப; 11-15 அன்னவை யீரன்பதிலஃதெல்லை யறைவர் கற்றோர்; 14 னிலையென்.

31. 9 யாகிலும்; 10 வேந்தனன்றோ; 12-14 முடிக்கிற் பிள்ளைக்கவி காப்புடன்.

பெருன். பிள்ளைக்கவியின் முதலில் வரும் காப்புமாலையை ஒன்பது பாட்டானும், பதினொரு பாட்டானும் பாடுவர்.

பெண்களுக்கு இந்நூலிற்போலச் சிறுபறை முதலிய மூன்றும் ஒழித்து ஏழுநிலமே வெண்பாப் பாட்டியலில் உள்ளன. ஏனைய பாடடியல்கள் இம்மூன்றிறகுப்பதிலாகக் கழங்கு, அம்மனை, ஊசல், என்ற மூன்றினைக் கொள்ளுகின்றன. ஆனால் பன்னிரு பாட்டியலில் சிற்றிலிழைத்தல், சிறு சோருக்கல், ஊசல் என்ற மூன்றும் பிங் கலந்தையில் குழமணம், நோன்பு, நீராடல், பாவையாடல், அம் மனை, கழங்கு, பந்தடித்தல், சிறுசோறடுதல், சிற்றிலிழைத்தல், ஊச லாடல் என்ற பத்தும் உடன்கூட்டி எண்ணப்படுகின்றன. காப்பு மாலை எனபது ஒரு தனிப் பிரபந்தம் எனக்கொண்டு 'காப்பு மூன் றைந்தேழ் காப்பு மாலையாம்' என இலக்கணவிளக்கப் பாட்டியல் உணர்த்தும்.

அரசன் முடிசூடியபின் பிள்ளைக்கவிகொள்ளான் என்பதை 'தொன்னிலை வேந்தர் சுடர்முடி சூடிய பின்னர்ப் பெருஅர் பிள்ளைப் பாடடே' (177) என்ற பன்னிரு பாட்டியற் பரணர் சூத்திரத்தா னும் உணர்க.

உதாரணம்: குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ், மீனுட்சி யம்மை பிள்ளைத்தமிழ், அழகர் பிள்ளைத்தமிழ்.

### கலம்பகம்

32. மூலம் ஒருபோகு வெண்பாக் கலித்துறை முன்னுறுப்பாம்
ஏனும் புயத்தோடம் மானைகார் ஊசல் இரங்கல்மறம்
கோலந் தழைதவஞ் சித்துப்பாண் கைக்கிளை தூதுகுறம்
காலம் மதங்கி களிசம் பிரதங் கலம்பகமே.

ஒருபோகு, வெண்பா, கலித்துறை என்ற மூன்றையும் நூலின் முதலில் வரும் உறுப்பாகக்கொண்டு, அதன்மேல் புயம், அம் மானை, கார், ஊசல், இரங்கல், மறம், தழை, தவம், சித்து, பாண், கைக்கிளை, தூது, குறம், காலம், மதங்கி, களி, சம்பிரதம் என்றிவை வருவது கலம்பகமாகும்.

---

**32.** 6-15 எலம் புயத்தொடம்யானை பொன்னூசலியம்பியப்பாற்-கோல மறக்குறஞ்சித்தூநற்கைக்கிளை கொண்டற்றூது.

ஒருபோகு, வெண்பா, கலித்துறை என்ற மூன்றையும் 'முதலுறுப்பு' என வெண்பாப் பாட்டியலும் 'முதற்கலியுறுப்பு' என இலக்கண விளக்கப் பாட்டியலுரையும் குறிக்கும்.

இச்செய்யுளில் பதினேழு உறுப்புக்கள் வந்துள்ளன. குறம் என்பதனை நீக்கி ஏனையவற்றோடு வண்டு, மடக்கு, என்ற இரண்டினையும் சேர்த்து வெண்பாப்பாட்டியல் பதினெட்டு உறுப்புக்கள் கொள்ளும். இலக்கண விளக்கப்பாட்டியலாரும் பதினெட்டு உறுப்புக் கூறுவர். ஆனால் அவர் குறம் என்ற உறுப்பைக் கூட்டி, வெண்பாப்பாட்டியலார் கொண்ட மடக்கு என்ற உறுப்பை உட்படுத்தாது அதனைக் கலம்பகத்திற்குரிய செய்யுள் வகையில் ஒன்றாகக் கொள்வர். பிச்சியார், கொற்றியார், இடைச்சியார், வலைச்சியார் முதலிய உறுப்புக்களும் மதுரைக் கலம்பக முதலிய பிற்கால நூல்களில் காணப்படுகின்றன. கீரையார் என்ற புதிய வுறுப்பொன்று பாடியவரும் உளர்.

33. சொன்ன கலம்பகந் தொக்கவச் செய்யுள் துடியைவென்ற
மின்னிடை வெண்டுறை வெண்பா அகவல் விருத்தமுடன்
இன்னிசை யெண்ணிய வண்ணம் கலியொடு தாழிசையும்
மன்னு மருட்பாவஞ் சித்துறை வஞ்சி விருத்தமென்னே.

கலம்பகத்துள் பொருந்திய செய்யுட்கள் வெண்டுறை, வெண்பா, அகவல், ஆசிரிய விருத்தம், இன்னிசையையுடைய வண்ணம், கலித்துறை, கலிவிருத்தம், கலித்தாழிசை, மருட்பா, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் என்று சொல்லுவர். இப்பிரபந்தம் அந்தாதியாகப்பாடுதல் வேண்டும் என்பது ஏனைய நூல்களிற் காணப்படும்

(உ - ம்) திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், தில்லைக்கலம்பகம், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், மதுரைக் கலம்பகம்.

34. தேவர்க்கு நூறு முனிவர்க் கிழிபைந்து சேணிலத்தைக்
காவற் குரிய அரசர்க்குத் தொண்ணூறு காவலரால்
ஏவற் றொழில்பெற்ற மாந்தர்க் கெழுப திருநிதியம்
மேவப் படுமவர்க் கைம்பது முப்பது மிக்கவர்க்கே.

---

33. 3 தொக்கவாஞ்; 9-15 வகுப்பாங் கலிவிருத்தம இன்னிசையாசிரியமாகிய விருத்தங்களெல்லாம்.

தேவர்களுக்கு நூறும், முனிவர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அரசனால் ஏவல் பெற்றவர்களுக்கு எழுபதும், நிதியம் பொருந்திய வணிகர்க்கு ஐம்பதும், வேளாளருக்கு முப்பதும் என்ற அளவில் கலம்பகச் செய்யுள் பாடப்பெறும் என்பர்.

மிக்கவர் - எஞ்சியவராகிய வேளாளர்.

இவ்வரையறை தவிர்ந்து வருதலும் காணப்படுகிறது. உதாரணமாக, ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகத்துள் நாற்பத்தொன்பது செய்யுட்களே உள்ளன.

அரசனால் ஏவல் பெற்ற மாந்தர் எனப் பொதுவாகக் கூறாது, 'அமைச்சன்' என ஏனைய நூல்கள் வரையறுக்கின்றன. குறுநில மன்னரை அரசரைப் போலவும், முனிவரைத் தேவரைப் போலவும் பாடுதலும் உண்டு. இவ்வழக்காறு இலக்கண விளக்கப் பாட்டியல், வெண்பாப் பாட்டியல் உரைகளால் தெரியவரும்.

### மும்மணிக்கோவை, மும்மணி மாலை, நான்மணி மாலை

35\. முன்னா சிரியம்பின் வெண்பாக் கலித்துறை முப்பதென்று
சொன்னார்கள் மும்மணிக் கோவைக்கு மும்மணி மாலைசொல்
அந்நான் மறைப்பாக் கலித்துறை யாசிரி யம்விருத்தம் [லின்
இந்நால் வகைச்செய்யுள் நாற்பது நான்மணி மாலையென்னே.

முதலில் ஆசிரியமும், பின், முறையே வெண்பா, கலித்துறை, என முப்பது செய்யுட்கள் மும்மணிக் கோவைக்கு வரும் என்று சொல்லினர் புலவர். வெண்பா, கலித்துறை, ஆசிரியம் என்ற மூன்றும் முப்பது பாடின் மும்மணிமாலை. வெண்பா, கலித்துறை, ஆசிரியம், ஆசிரிய விருத்தம் என்ற நான்கினும் நாற்பது கொண்டது நான்மணிமாலை. இப்பிரபந்தங்கள் மூன்றும் அந்தாதியாகப் பாடுதல் வேண்டும் என்னும் ஏனைய நூல்கள்.

நான் மறைப்பா - நான்மறைக் குரிய அந்தணர்பா; அதாவது, வெண்பா.

(உ-ம்) சிவபெருமான் திருமும்மணிக்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை, கோயில் நான்மணிமாலை, நால்வர் நான்மணிமாலை.

---

**35.** 8-12 கோவையா நான்மணி மாலைசொல்லு நன்னூன் முதற்பாக்; 20 மாலை யென்றே.

### இருபாவிருபது, இரட்டைமணி மாலை, இணைமணி மாலை

36. இருபா விருபது வெண்பா அகவல் இரட்டைமணி
தருபா இருபது வெண்பாக் கலித்துறை தாமிவையாம்
வருபா இரண்டிரண் டாய்த்தம்முள் மாறின்றி நூறுவரிற்
பொருமா விழியாய் இணைமணி மாலை புகல்வர்களே.

வெண்பா, அகவல் என்ற இரண்டினாலும் இருபதுபாடின் இருபா இருபஃது. வெண்பா, கலித்துறை இரண்டினாலும் இருபது பாடல் பாடின் இரட்டை மணிமாலை. வெண்பா, கலித் துறை என்ற இரண்டும் ஒன்றன்பின் ஒன்று மாறின்றி முறையாக நூறு பாட்டு வருமாயின் அதனை இணைமணிமாலை என்பர்.

வெண்பா, கலித்துறையே அன்றி ஆசிரிய விருத்தமும் வெண்பா வும் தம்முள் மாறி அந்தாதியாய் இருபது வருவதும் இரட்டை மணி மாலை என்று வெண்பாப் பாட்டியல் கூறும். வெண்பா, கலித் துறை இணைந்து நூறு வருவன வெண்பாக் கலித்துறை இணைமணி மாலை எனவும், வெண்பாவும் அகவலும் இணைந்து நூறு பாடல் வரின் அது வெண்பாவகவல் இணைமணி மாலை எனவும் இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலியன பெயரிடுகின் றன. பன்னிருபாட்டியலில் இந்நூலிலுள்ளவாறே காணப்படுகிறது. இவையும் மும்மணிக் கோவை முதலியனபோல அந்தாதியாகப் பாடப்படுவன என்னும் ஏனைய நூல்கள்.

(உ-ம்) சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை.

### பல்சந்த மாலை, வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி

•37. பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலைஅந் தாதிவெண்பா
வைத்தார்கள் நூறு கலித்துறை தன்னையும் மற்றவெண்பா
ஒத்தான தைம்ப தெழுபது தொண்ணூறு பேர்பெற்றதாய்
இத்தா ரணியிற் புலவோரெல் லாரும் இயம்புவரே.

பத்துக் கவி முதலாக நூறுகவி ஈருக எல்லை கொள்ளப்பட்டுச் சந்தம் பத்துக் கொண்டுவருவது பல்சந்தமாலை. வெண்பா நூறு அந்தாதியாக வருவன வெண்பா அந்தாதி என்பர்; கலித்

36. 10 தாமிறையா; 13-14 டாய்மாறி மாறியே; 16 பொருமான்

துறை நூறு அந்தாதியாக வருவன கலித்துறையந்தாதி யென்பர். வெண்பா ஐம்பது, எழுபது, தொண்ணூறு என்ற அளவில் அந்தாதியாகப் பாடினும் அந்தாதி என்று பெயர் பெறும்.

அந்தாதியில் நூற்றுக்குக் குறைவாகப் பாடல்கள் வரும் என்ற வழக்கு இந்நூலில் மட்டுந்தான் காணப்படுகிறது. சிதம்பரப் பாட்டியல் அகவல் விருத்தமாதல், வகுப்பாதல் பத்துமுதல் நூறு அளவும் வருவது பல்சந்தமாலை என்னும். கலம்பக உறுப்புக்களை நீக்கி ஏனையவற்றின்மேல் பத்துமுதல் நூறளவும் பாடுதல் பல்சந்த மாலை என்று பன்னிருபாட்டியலில் காணப்படுகிறது. களவியற் காரிகையுரையில் வரும் பல்சந்த மாலையில் கலித்துறைகள் வந்துள்ளன.

(உ-ம்) அற்புதத் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருநூற்றந்தாதி, இயற்பா அந்தாதிகள்.

### ஒலியந்தாதி, பன்மணி மாலை

38. ஈட்டிய ஈரெண் கலைவண்ணச் செய்யுள் இயைந்து முப்பான்
கூட்டிய நீடொலி யந்தாதி கூறுங் கலம்பகத்தின்
ஆட்டிய அம்மானை யூசல் ஒருபோகும் அற்றதிந்தப்
பாட்டியற் பன்மணி மாலையென் றோதுவர் பாவலரே.

ஈரெண்கலை வண்ணம் முப்பது அமைந்தது ஒலியந்தாதி. கலம்பகத்திற்குரிய இலக்கணத்துள் அம்மானை, ஊசல், ஒருபோகு என்ற மூன்று உறுப்பும் குறைந்து ஏனைய உறுப்புக்கள் பொருந்தி வருவன பன்மணிமாலை என்று பாவலர் சொல்லுவர்.

'ஆட்டிய' என்பது 'ஆடிய' என்பதன் விரித்தல்.

(உ-ம்.) கந்தர் ஒலியந்தாதி, திருவாரூர்ப் பன்மணிமாலை.

### சின்னப்பூ, தசாங்கம்

39. நேரும் தசாங்கத்தை நேரிசை வெண்பாவின் ஈரைம்பது [ல்
சேரவொர் தொண்ணூ றெழுபதொ டைம்பது செப்பிடுங்கா
ஆரியர் சின்னப்பூ என்றே யுரைப்பர் அவையொருபான்
சாரில் தசாங்கம் எனவுரை யாநிற்பர் சான்றவரே.

---

**38**. 11 வாட்டிய; 15 மற்றும் வந்தால்.

**39**. 6-15 சேருதன் மாறேவ்வொன்றிற் பத்து மெஞ்சியே யெய்திடுங்கால் வீரிய மன்னர் அது சின்னப்பூவென்பர் வேறொருபாற்.

மலை முதலாக எண்ணும் பத்துத் தசாங்கங்களையும் நேரிசை வெண்பாவினால் நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது என்ற அளவிற் பாடின், சிறந்தோர் அவற்றைச் சின்னப்பூ என்பர். தசாங்க உறுப்புப் பத்தினையும் பத்துச் செய்யுட்களால் பாடின் தசாங்கம் என்று சான்றவர் உரைப்பர். சேரவோர் - ஒருசேர.

முப்பது வருவனவும் சின்னப்பூ என்னும் வச்சணந்திமாலை முதலியன.

(உ-ம்) தத்துவராயர் சின்னப்பூ, திருத்தசாங்கம் (திருவாசகம்).

**யானை விருத்தம், குதிரை விருத்தம், வில் விருத்தம், வேல் விருத்தம், வாள் விருத்தம், குடைவிருத்தம், கோல் விருத்தம், நாட்டு விருத்தம், நகர விருத்தம், ஊர் வெண்பா**

40. யானை குதிரை யெழில்வில்வேல் வாள்குடை கோலிவற்றோ
டூனமில் நாடு நகரென ஒன்பா னிவற்றினிற் பப்
பானகவல் விருத்தம்வர அப்பால் விருத்தமதாம்
ஊனமில் வெள்ளைபத் தூர்வெண்பா வாக உரைப்பர்களே.

யானை, குதிரை, வில், வேல், வாள், குடை, செங்கோல், நாடு நகரம் என்ற ஒன்பதன் மேலும், ஆசிரிய விருத்தம் பத்தினால் சிறப்பித்துப் பாடின், அந்தந்தப் பெயர்ப் பகுதியால் யானை விருத்தம், குதிரை விருத்தம், வில் விருத்தம் முதலியனவாகப் பெயர்பெறும். ஊரைப் பற்றிப் பத்து நேரிசை வெண்பாவினால் பாடின், அதனை ஊர் வெண்பா என்று உரைப்பர்.

**அலங்கார பஞ்சகம், கைக்கிளை**

41. வெண்பா கலித்துறை வேறு சிரியம் விருத்தம் வண்ணம்
பண்பால் வருப அலங்கார பஞ்சக மாம்பகர்ந்த
நண்பால் ஒருதலைக் காமம் நவின்ற விருத்தமஐந்தாற்
பெண்பால் வரின்அவை கைக்கிளை யாமென்று பேசுவரே.

---

**40.** 3 யெழிலவேல்; 5 கோலிவற்றின், கோலவற்றின்; 6-15 எனவு நாடு நகரத்தினமென்ப மேவிலப்பாற்-றனை திறத்தாசிரிய விருத்த மீரைந் தும் வந்தால்; 14-15 விருத்த விலக்கணமாம்; 18-20 தூருரை யூர்வெண்பா வோதினரே.

**41.** 10 மாம்பயந்த; 13-14 காமத்தை யைந்து; 15 விருத்தம் வந் தால்; 17-20 வரும் கைக்கிளை முப்பானி ரண்டுமெஃதே.

வெண்பா, கலித்துறை, ஆசிரியம், ஆசிரிய விருத்தம், வண்ணம் என்ற ஐந்தும் முறையேவந்தால் அலங்கார பஞ்சகம் என்று பெயர் பெறும். அகப்பொருள் நூலுள் சொல்லப்படுகின்ற ஒரு தலைக் காமத்தைப் பற்றி ஐந்து விருத்தங்கள் பெண்பாலைக் குறித்து வரின், அது கைக்கிளை எனப்படும்.

இது போன்றே, கைக்கிளை ஐந்துவிருத்தம் கொண்டது என்னும் இலக்கண விளக்கப் பாட்டியல் ; விருத்தப்பா ஐயைந்து கொண்டது கைக்கிளை என்பது வச்சணந்தி மாலை.

### பாதாதி கேசம், கேசாதி பாதம், அங்கமாலை

42. கடிதலில் லாக்கலி வெண்பாப் பகரும் அவயவங்கள்
முடிவது கேசமும் கேச முதலடி யீறும் வந்தாற்
படிதிகழ் பாதாதி கேசமும் கேசாதி பாதமுமாம்
வடுவில வெண்பா விருத்தம் பலஅங்க மாலையென்னே.

கலி வெண்பாவினுல், அவயவங்கள் (அடிமுதல்) கேசம் ஈருகவும், கேசம் முதல் அடியீருகவும், வருவன முறையே பாதாதி கேசம், கேசாதி பாதம் எனப் பெயர்பெறும். வெளி விருத்தத்திஞல் அங்கங்களைச் சிறப்பித்துப் பாடின் அங்கமாலை என்பர்.

'நிறுத்த வெளி விருத்தம் நீடுறுப்பில் வந்தால், குறித்தங்க மாலையாக் கொள்க' என்பது வச்சணந்திமாலை.

43. அகங்கால் உகிர்விரல் மீக்கால் பரடங் கணைமுழந்தாள்
மிகுங்கால் துடையிடையல்குல்கொப்பூழ்வயின்வெம்முலையாய்
நகஞ்சார் விரலங்கை முன்கைதோள் கண்டம் முகம்நகைவாய்
தகுங்கா திதழ்மூக்குக் கண்புரு வம்நெற்றி தாழ்குழலே.

பாதாதிகேசம் வரையுள்ள உறுப்புக்கள் : உள்ளங்கால், உகிர், விரல், புறவடி, பரடு, கணைக்கால், முழந்தாள், முழந்தாளின் மேலுள்ள காலின் பகுதியான துடை, இடை, அல்குல், கொப்பூழ், வயிறு, முலை, நகம், விரல், உள்ளங்கை, முன்கை, தோள், கண்டம், முகம், பல், வாய், காது, உதடு, மூக்கு, கண், புருவம், நெற்றி,

42. 7 கேசமாக்; 9-11 முடிவு மடியிறுவாய்ப் படுவன; 16 மடிதலில்; 16-19 வடிவில் வெண்பாவி லீரைம்ப தவையங்க.

43. 7-10 ளிதம்பமுரோம மடிப்புந்தி வெம்முலையும்; 20 கார்குழலே.

தாழ்ந்த கூந்தல் என்பனவாம். இவ்வாறே பன்னிரு பாட்டியலிலும் அங்கங்கள் கூறப்பட்டுள்ளன. ஆய் - அடைமொழி, ஏ - ஈற்றசை, வயின் - வயிறு 'குக்கி துத்தம் உதரம் சடரம், ஒத்த மடிவயின் அகடு வயிரும்' என்பது திவாகரம்.

### உலா, குழமகன்

44. தெருவினிற் பேதை முதலெழு வோர்கள் திறத்துவமை
ஒருவனை யேத்துங் கலிவெண்பாத் தான்உலா ஒண்டொடியார்
மருமலர்க் கையிற் குழமகன் மேல்வைத்த மன்விருத்தந்
தருகலி வெண்பாக் குழமக னென்று சாற்றுகவே.

தெருவில் பேதை முதலிய ஏழு பருவத்துப் பெண்களிடையே பவனி வந்த, தனக்குத் தானே உவமையான, ஒருவனைக் கண்டு அவனை அவர்கள் ஏத்துவதாகக் கலி வெண்பாவினால் பாடுவது உலா. இதனை உலாப்புறம் எனவும் கூறுவர். மடந்தையருடைய மணமலர் போன்ற கையில் உள்ள குழமகனை ஆசிரிய விருத்தத்தினாலாவது, கலி வெண்பாவினாலாவது பாடுவது குழமகனும். வெண்பாப் பாட்டியல் குழமகனுக்குக் கலி வெண்பா ஒன்றே கூறும். குழமகனை இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் என்ற இரண்டும் தனிப்பிரபந்தமாகக் கொள்ளாது உலாவிலே சேர்த்துரைக்கும். உலாப்புறத்துமுன் குழமகனைப் பாடினும் இழுக்காது என்பர் வச்சணந்திமாலை யுரைகாரர். ஆடவர்க்கு நாற்பத்தெட்டு ஆண்டளவும் உலாப்புறம் உரித்து எனவும், நாலு வருணத்தாரும் உலாப்புறம் பாடற்கு உரியர் எனவும், கடவுளர், மறையவர் என்றிவர் கலி வெண்பாவிற்கு உரியர் எனவும் பன்னிரு பாட்டியல் விளக்கும். மன் விருத்தம் - அரசர்க்குரிய ஆசிரிய விருத்தம்,

(உ-ம்) திருக்கைலாய ஞானவுலா, மூவருலா.

45. பேதை முதலெழு வோர்க்குப் பிராயங்கள் பேசுமளா
வாதியைந் தேழுபன் னொன்றுபன் மூன்றுபத் தாறொன்பது

44. 7-10 யேத்தனுலாத் தூது போய்வரல் ஒன்றிணையிற்; 11 வருமகள்; 14-15 மேல்வைக்கு மன்பவர்க்கு; 20 சாற்றுவரே.

45. 2-5 முதலவர்க்கும் பிராயங்களைப் பேசியக்கால்; 6-7 வாதலைந் தேழ்பதி; 10 தொன்பதென.

மீதிரு பத்தைந்து முப்பத்தொன் ருமிகு நாற்பதென்றே
ஓதினர் தொன்னூற் பருணிதர் எல்லா முணர்ந்துகொண்டே.

பேதை முதலிய ஏழு பருவ மகளிர்க்கும் உரிய பிராயங்கள்: பேதை 5-7; பெதும்பை 8-11; மங்கை 12-13; மடந்தை 14-19; அரிவை 20-25; தெரிவை 26-31; பேரிளம் பெண் 32-40.

சூடாமணி நிகண்டு இங்ஙனமே மகளிர் பருவங்களுக்கு ஆண்டு வரையறை செய்கிறது. தெரிவை 26-முதல் 30-ஆண்டு வரையில் என்று சிதம்பரப் பாட்டியலிலும், 26 முதல் 32-ஆண்டு வரையில் என்று இலக்கண விளக்கப் பாட்டியலிலும் காணப்படுகிறது. பன்னிரு பாட்டியல் முற்றும் மாறுபட எல்லை வகுக்கின்றது; பேதை 5-8; பெதுமபை 9-10; மங்கை 11-14; மடந்தை 15-18; அரிவை 19-24; தெரிவை 25-29; பேரிளம் பெண் 30-36 எனக் கொள்ளும் அப்பாட்டியல் அன்றியும், ஆடவர்க்கும் பாலன், மீளி, மறவோன், திறலோன், காளை, விடலை, முதுமகன் என ஏழு பருவம் வகுத்து ஆண்டு வரையறையும் செய்கின்றது.

### மடல்

46. பொருளறம் வீடு பழித்தின்ப மேபொரு ளாக்கிநல்லார்
மருள்பெறு வேட்கை மடல்மிக ஊர்தலிற் பாட்டுடையோர்க்
குரிய வியற்பே ரெழுத்துக் கியைந்த எதுகையினல்
வருகலி வெண்பா வளமட லாக வகுத்தனரே.

பொருளினையும் அறத்தினையும் வீட்டினையும் பழித்து, இன்பம் ஒன்றினையே பொருளாகக் கொண்டு, பெண்கள்மீது மயக்கங் கொள்ளும் பெரிய காமவேட்கை பெருக மடலூர்தலிலே, பாட்டுடைத் தலைவர் இயற்பெயரின் எழுத்துக்களுக்குப் பொருந்திய எதுகையினல் பாடப்பெறும் கலி வெண்பாவினை மடல் என்பர்.

வச்சணந்திமாலை மூலம் மடல்எனறே சொல்லுகிறது. வளமடல் என்று இலக்கண விளக்கப் பாட்டியலும், வச்சணந்திமாலை யுரையும் பெயரிடுகின்றன. கலிமடல் எனப் பெயரிட்டனர் தத்துவ

**45.** 11 ஓதிந; 14 ராகிய; 18-19 பகுதிகளெல்லாம்.

**46.** 4 மெய்ப்பொரு; 6 உருள்பெறு; 10-14 பாட்டுடையோர் இரு பொருளாக வைர்பேருக் கேய்ந்த; 17-18 வெண்பாத் தனைமட.

ராயர். இக் கலிமடலில் பாட்டுடைத் தலைவரான சொருபானந்த ரது பெயர்க்கேற்ப எதுகை அமைந்திருத்தல் நோக்கத்தக்கது. உலா மடல் என மற்றொரு பிரபந்தமும் இலக்கண விளக்கப் பாட்டியலில் காணப்படுகிறது. மடலேறும் முறையை,

'......தனியிடத் தொருத்தியைக்
கண்டபின் அந்த ஒண்டொடி யேத்தல்
மற்றவள் வடிவை யுற்றகிழி எழுதிக்
காமங் கவற்றக் கரும்பனை மடன்மா
ஏறுவர் ஆடவர் என்றனர் புலவர்' என்று பன்னிரு பாட்டியல் விளக்குகிறது. மேலும் பெண்மக்கள் மடலேறார் என்றும், கடவுளர் தலைவராய் வருமிடத்து அவரும் மடலேறுதல் உண்டென்றும், அப் பாட்டியலில் உள்ளது. வள்ளுவரும்,

கடலன்ன காம முழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் (குறள்-1137) என்றனர்.

அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்மொழியிற் கேட்டறிவ துண்டுறுரை. (இயற்பா-38-39)
என்ற திருமங்கை மன்னன் வாக்கையும் நோக்குக.

(உ-ம்) திருமங்கைமன்னன் பெரிய திருமடல், சிறிய திருமடல்.

### நாமமாலை, புகழ்ச்சிமாலை, வஞ்சி

**47.** பாதம் பலமயங் கும்வஞ்சி ஆட வரைப்பரவி
ஓது மதுநாம மாலை உரைத்தஅச் செய்யுளினுன்
மாதரை யேத்திற் புகழ்ச்சிநன் மாலைமற் றெப்பொருளும்
நீதியி னுற்சொல்லின் அப்பெய ரால்வஞ்சி நேர்ந்தனவே.

அடிபல மயங்கிய வஞ்சிப்பாவால் ஆடவரைப் புகழ்வது நாம மாலை. இச்செய்யுள்வகையால் மாதரைப் புகழ்ந்தால், அது புகழ்ச்சி மாலை என்று பெயர் பெறும். எப்பொருளையாவது வஞ்சியினுல்

**47.** 1 - 4 பாதமயங்கும் வஞ்சிப் பாட்டிலாட; 6-7 ஓதலது நாம; 10 செய்யுளாற் பெண்; 11-20 ஓதிற் புகழ்ச்சிமாலைப் பேர்முநியோ றறிவில வர்க்; கோதலது முதுகாஞ்சி யென்றோதுவர் ஒண்ணுதலே.

பாடின், அந்தந்தப் பெயரால் வஞ்சியென்று வழங்கப்படும்.

வரலாற்று வஞ்சி, செருக்கள வஞ்சி என ஏனைய நூல்கள் கூறுவது நோக்கத்தக்கது.

நாமமாலை, புகழ்ச்சிமாலை இவ்விரண்டும் வஞ்சியினாலன்றி வண்ணப்பாவினாலும் பாடலாம் என்றும், வெள்ளடியியலால் வருவதும் புகழ்ச்சிமாலையாம் என்றும் பன்னிரு பாட்டியல் கூறும்.

## யானைத்தொழில்

48. பிறந்த நிலங்குலம் ஓக்கம் அளவு பிராயம்எழில்
சிறந்தமாக் கோபக் கிரமத்தில் விட்டாங்கு தீர்சினத்தால்
இறந்துயிர் கோடல் செயக்கண் டிறைகந் தினிற்பிணித்தல்
அறைந்திடும் வஞ்சி யுர னுடை யானை தனித்தொழிலே.

பிறந்த நிலம், குலம், உயரம், அளவு, பிராயம, அழகு என்றிவற்றிற் சிறந்த யானை எல்லைகடந்து மிகுந்த கோபத்தினால் நெறிகடந்து சென்று உயிர்களைக்கொல்லுதல் கண்டு அரசன் அதனைக் கட்டுத்தறியில் கொணர்ந்து கட்டுதலாகிய இச்செய்தி பற்றி வஞ்சிப்பாவாலான பிரபந்தம் யானைத்தொழில் எனப்படும்,

அகவற்பாவினாலும் இப்பிரபந்தம் பாடலாம் எனப் பன்னிரு பாட்டியல் கூறுகிறது. நிலம் முதலிய ஒவ்வொன்றையும் அப்பாட்டியல் விளக்குகின்றது. இதனை யானை வஞ்சி என்னும் வெண்பாப் பாட்டியல்.

## நயனவிருத்தம், பயோதரவிருத்தம், பொன்னூசல்

49. அரசர் விருத்தங் கலித்துறை யீரைந்து கண்முலைமேற்
பரசின் நயனம் பயோதரஞ் சேர்ந்த விருத்தமென்ப
வரன்முறை சுற்றத் தளவாய்ப்பொன் னூசல் வடிவுதுற்றே
உரைசெய் கலித்தாழிசையேபொன் னூசலென் றோதுவரே.

---

**48.** பிறந்த நிலங்குலங் கற்றோ னிலனள வும்பிராய
மறைந்தெழிற் கோப மடல்பிறச் சொன்மனு னைவிருத்தம்
துறந்த முந்நூறு முதற்பாப் புகலிற் றுடியிடையாய்
சிறந்திடு தண்டக மாலைப் புணர்ச்சிமா லைப்பெயரே.

ஆசிரிய விருத்தத்தினாலாவது, கலித்துறையினாலாவது கண்ணையும் முலையையும் புகழ்ந்து பத்துச்செய்யுள் பாடினால், அதனை முறையே நயனவிருத்தம், பயோதரவிருத்தம் என்பர். நயனப்பத்து, பயோதரப்பத்து என ஏனைய பாட்டியல்களில் பெயர் தரப்படுகின்றன. கலித்துறையை விருத்தம் என்று கூறும் மரபுபற்றி அவ்வினத்தால் இயன்ற நயனப்பத்தையும், பயோதரப்பத்தையும் நயனவிருத்தம், பயோதர விருத்தம் என இந்நூலாசிரியர் வழங்கினர்போலும். சுற்றத்தின் எல்லையாகப் பொலிகெனப் பொன்னூசலை அழகு செறிய உரைக்கின்ற கலித்தாழிசை பொன்னூசல் என்று ஓதுவர். ஆசிரிய விருத்தத்தினாலும், கலித்தாழிசையினாலும் சுற்றத்தாரோடும் பொலிக எனக் கூறுதல் ஊசல் என்று சிதம்பரப்பாட்டியலும், இலக்கண விளக்கப் பாட்டியலும் கூறும்.

### அட்டமங்கலம், நவமணிமாலை, தசப்பிராதுற்பவம்

50. இறைவனை யேத்திய எட்டா சிரிய விருத்தம்வண்ணம்
மறைமுத லோர்அட்ட மங்கல மென்பமற் றொன்பதவை
நறைவளர் கோதை நவமணி மாலைபத் தான்வரினே
குறைகில மால்பவங் கூறின் தசப்பிரா துற்பவமே.

பாட்டுடைத் தலைவனைக் காக்க என எட்டு ஆசிரியவிருத்தம் அல்லது எட்டு வண்ணம் வருதலை மறைமுதலோர் அட்டமங்கலம் என்பர். இவ்விருவகைப்பாவினாலும் ஒன்பது பாடல் புகழ்ந்து பாடின் அது நவமணிமாலை எனப்படும். திருமாலின் பிறப்புப் பத்தினையும்பற்றிப் புகழ்ந்து அவர் தலைவனைக் காக்க என இப்பாவால் ஒவ்வொரு பிறப்பிற்கும் பத்துப்பாடின், தசாப்பிராதுற்பவம் என்பர்.

அட்டமங்கலம், நவமணிமாலை, தசப்பிராதுற்பவம்: இவற்றிற்குவண்ணப்பாட்டும் வரும்என ஏனையபாட்டியல்கள் கூறவில்லை. ஆசிரிய விருத்தம் ஒன்றே அவற்றிற் காண்பது. வெண்பா முதலாக வேறுபட்ட பாவும், பாவினமும் அந்தாதியாகப் பாடுவது நவமணி மாலை என இலக்கண விளக்கப் பாடடியலும், பா, பாவினம் இரண்டும் மேவியது நவமணிமாலை எனப் பன்னிரு பாட்டியலும் உணர்த்து-

**50.** 6 முறைமுத; 10-11 றொன்பதுபா நறைவனக்; 15 தான்வரினோர்; 16-20 குறைவில் தசாங்கத் தயலது வாமென்று கூறுவரே.

கின்றன. திருமாலின் அவதாரங்களைச் சிறப்பித்துப் பாடுதலை அரிபிறப்பு எனப் பன்னிருபாட்டியலும், உற்பவமாலை என இலக்கண விளக்கப் பாட்டியலும் பெயர் அமைக்கின்றன. திருமாலின் பத்து அவதாரங்களையும்,

மச்சம் கூர்மம் வராகம் நரசிங்கம்
வாமன் பரசுராமன் இராமன்
பலபத்திரனே கண்ணன் கற்கியென்று
இவையொரு பத்தும் அரியவதாரம் (வானவர் வகை. 47) என்ற பிங்கலந்தைச் சூத்திரத்தான் உணர்க.

### மெய்க்கீர்த்தி, ஆற்றுப்படை

51. சிறந்தமெய்க் கீர்த்தி அரசர் செயல்சொற்ற வாமச்செய்யுள்
அறைந்திடு சொற்சீ ரடியாம் பரிசுபெறும் புலவன்
நிறைந்த பொருநரைப் பாணரைக் கூத்தரை நீணிதியம்
பெறும்படி யாற்றுப் படுப்பன ஆசிரி யம்பெறுமே.

சொற்சீரடிச் செய்யுளால் அரசர்கள் செய்த செயற்கருஞ் செயல்களைப்பற்றிக் கூறுவன மெய்க்கீர்த்தியாம். பரிசு பெற்ற புலவன் பொருநரையும், பாணரையும், கூத்தரையும் நிதியம் பெறும்படி பாட்டுடைத் தலைவனிடம் ஆற்றுப்படுப்பன ஆற்றுப் படைகள். இவை ஆசிரியம் பெறும்.

புலவர், விறலியர் என்றிவரை ஆற்றுப்படுத்தலும் சில நூல்களிற் காணப்படுகின்றன 'புலவராற்றுப்படை புத்தேட்குமுரித்தே' எனப் புலவரைத் தேவர்களிடத்தும் ஆற்றுப்படுத்தும் செய்தியைப் பன்னிருபாட்டியல் உணர்த்துகின்றது. இது முருகாற்றுப் படையை நோக்கிப்போலும். மெய்க்கீர்த்தியின் தன்மை பன்னிரு பாட்டியலில் பின்வருமாறு விளக்கப்படுகிறது:

சீர்நான் காதி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும்

---

**51.** 3-5 அரசாம் கொடை கொற்றமாறு செய்யுள்; 6-10 அறைந்து பரிசுபெறும் புலவன் நீயவரிடம் போய்; 9-10 புலவர்கள் வாழ்த்து நலம்; **11-15** திறந்தருதானைப் பொருநரைப் பாணரைக் கூத்தரையும்; **17-18** யாற்றுப்படையென.

அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி. (311)

நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியி னந்தம்
உரையாய் முடியு மென வுரைத்தனரே. (312)

இம் மெய்க்கீர்த்திகள் சாசனங்களிற் பயின்று வருவன. சிறுபாணாற்றுப் படை, முருகாற்றுப்படை முதலியன ஆற்றுப்படைக்கு உதாரணங்களாம்.

### நானூற்றுக் கோவை, கடிகை வெண்பா

52. பொருளதி காரத் திறத்தைப் புகன்று கலித்துறைகள்
வருவது நானூறும் கோவையென் றாகுமவ் வானவர்க்கும்
அரசர் தமக்கும் அறிய வுரைத்த கடிகைகளை
உரைசெய்யு முப்பத் திரண்டுவெண் பாவென ஓதுவரே.

பொருளதிகாரத்தில் உணர்த்தப்படும் அகப்பொருளின் திறத்தினைச் சிறப்பித்து, கலித்துறைச் செய்யுள் நானூறு வருகிற பிரபந்தம் கோவை என்று ஆகும். தேவர்களும், அரசர்களும் அறிய வேண்டுமென நூல்களில் நியமித்த கடிகைகளைச் சிறப்பித்து முப்பத்திரண்டு வெண்பாக்கள் வருமென்று சொல்லுவர். இந்நூல் கடிகைவெண்பா எனப்படும்.

கடிகை வெண்பாவை நாழிகைக் கவி எனப் பன்னிருப் பாட்டியலும், நாழிகை வெண்பா என வச்சணந்திமாலை முதலியனவும் சொல்லுகின்றன. பன்னிரு பாட்டியல் 'மன்னர் கடவுளர் முன்னிலையாக முப்பது நாழிகையையும் நான்கு யாமத்தும் பொருந்த முப்பது நேரிசை வெண்பாப் பாடுவது' என்றும், 'முதல் யாமம் ஏழளவும் பாடி எட்டாவதில் யாமம் ஒன்றென்றும், இரண்டாம் யாமம் ஆறளவும் பாடி ஏழில் யாமம் இரண்டென்றும், மூன்றும் யாமம் ஆறளவும்

---

**52.** நானூற்றுக் கோவையென்; 9 - 20 மன்வானவர்க்கு மருவுந் தலைவியழகு குணஞ் சிறப்பாக்கத் தினை உரைப்பதுபேரு மகிழ்ச்சிமாலைப் பெயரொண்ணுதலே.

பாடி ஏழில் யாமம் மூன்றென்றும், நான்காம் யாமம் ஏழளவும் பாடி எட்டில் யாமம் நான்கென்றும் பாடின் முப்பது வெண்பாவாம்" என்றும் விளக்குகின்றது.

## புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறாஉ, அகப்புறக் கைக்கிளை

53. புறநிலை வாயுறை வாழ்த்துப் புலமி லொருவன்செவி
யறிவே யுறுத்தல் அகப்புறக் கைக்கிளை யானஇந்த
நெறியிற் பொருள்களை அன்றி மருட்பா நிகழ்த்தலின்றால்
அறியும்இந் நாற்பொரு ளல்லாத பாவின மாமென்பரே.

புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அறிவில்லாத ஒருவனுக்கு உண்மைப் பொருளை அறிவுறுத்தும் செவியறி வுறாஉ, அகப்புறக் கைக்கிளை என்ற இந் நெறியான நான்கு பொருள்களையன்றி, பிறபொருள்களை மருட்பா நிகழ்த்தலில்லை. ஆதலால் இந் நாற் பொருள் அல்லாத பொருள்களையே பிற பாவும், இனமும் அறியும் என்பர்.

புறநிலை வாயுறை செவியறி வுறாஉ வெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்
வெண்பா வியலினும் ஆசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின மென்ப : (தொல்-பொருள். 463)

கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே (தொல்-பொருள். 424)

புறநிலை வாழ்த்து : வழிபடு தெய்வ நிற்புறங்காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ
(தொல்-பொருள். 415)

---

53. 2-10 வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் புவியோர்செவி, யறிவுறாஉ வாழ்த்தும் அகப்பொருள் கைக்கிளை வாழ்த்துமென்றிங்; 12-15 பொருளதனை மருட்பா விதனேர் செய்தலின்; 16-20 அறிவுறச் செய்யுளி னன்னூலாம் கைக்கிளை முன்னவையே.

வாயுறை வாழ்த்து : வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கரும்பும் போல வெஞ்சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே
(தொல்-பொருள். 417)

செவியறிவுறூஉ : செவியுறை தானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே
(தொல்-பொருள். 419)

அகப்புறக் கைக்கிளை : காமஞ் சாலா இளமை யோள்வயின்
குறிப்பறி வுறாது குறுகியாங் கவளோ
டிறப்பக் கூறுவது அகப்புறக் கைக்கிளை
(நம்பிஅகப்-241)

பரணி

54. புறநடை சேரக் கவைப்பொருள் மேவிங் கிருவர்மன்னர்
திறனுளும் யானைப் படைசெற்று வென்ற ஒருவன்செய்கை
நெறிபடு நேரடி யேமுதல் நீண்டன ஈரடியாய்ப்
பெறுவன தாழிசை யாற்பர ணிப்பெயர் பேசுவரே.

55. மற்றது வானவர் வாழ்த்துக் கடைவாழ்த்துப் பாலைநிலப்
பெற்றி பெருங்கா னகம்இறை யோன்பெருந் தேவிமகிழ்ந்
துற்றுறை கோயி லவளை யுரைத்தல் அலகைக்குழாஞ்
சுற்றிய வண்ணம் அவைதம் பசிப்பிணி சொல்லுதலே.

---

**54.** 2-3 சேர்குரவைப் பொருண்; 3 கவைபொரு; 6 திறனுறும், திற னுடை; 11-20 நெறிமருவுங் கொடியே யிதுநீண்டன பீரடியாய்ப் பெறுவ வெண்ணூறு பல்முழிசைப் பரணிப்பெயரே; 16 பெறுபயின்.

**55.** மற்றுமோர் நால்வகைப் பெண்கள் வரிசைக் கடைதிறப்பும்
பெற்றிய பாலை வனத்தின் குறிப்பும் பிறைமுடிசூ
டுற்றவன் கோயி லவளைப் பணிந்த வலகைக்குழாம்
சுற்றிய வண்ணம் வடகம் பொசிப்பென்னும் சொல்லுவதே.

56. ஆங்குக் கனுத்துன் னிமித்த வகையறி வித்திடலே
பாங்கிற் பணிமொழி பொன்முடி மன்னவர் தம்பகையால்
தீங்கிற் செருச்செய் தொருவர் திறல்வாகை சென்னிவைத்தல்
ஈங்கிற் செலவே ழெருபே யுவகை யிசைத்திடலே.

57. உண்டாம் உவகை தனையவள் தான்மகிழ்ந் தோலக்கத்திற்
கொண்டாடல் காளியப் பேயினைக்கூறல் கொலைக்களந்தான்
கண்டார்ப் புறல்களம் வாழ்த்துதல் கைம்மலை வெண்மருப்புத்
தண்டா லுலந்தவர் தம்பற் றரளந் தடுக்குதலே.

58. முடியடுப் பிற்றேல் வயிறு குழிசியில் மொய்குருதி
நெடியுலை யேற்றி நிணம்பெய்து கோப நெருப்பெரித்துத்
தொடியுடைத் தோட்டுடுப் பிற்றுழாயாக்கிப் பேயூட்டவம்மை
வடிவுற வுண்டாங் கடுதிறல் மன்னனை வாழ்த்துதலே.

59. இன்னுமப் பேய்கள் இயல்கூர் பசிதீர உண்டினிதாய்த்
துன்னிநின் றுடுதல் சூழுங் கவந்தங்கள் தாளுடுதல்
மன்னும் புறப்பொருள் நூலோ ருரைவழு வாவகையே
முன்னு மொழிந்த படியே புணர்த்திக்கொள் மொய்குழலே.

புறப் பொருளுக்குரிய ஒழுக்கம் பொருந்தக் கோட்டையை முற்றுகையிடும் பெரும் போரைப்பற்றிக் கூறி, இருவர் மன்னர் பக்கத்திலும் யானைப் படையைக் கொன்றழித்து வென்ற ஒருவனுடைய செய்கையை நாற்சீரும், மிக்கசீரும் பெற்று வரும் ஈரடிகள் பொருந்திய தாழிசையாகிய இனத்தால் பாடுவர். அவ்வாறு பாடப்பெறுவதற்குப் பரணி என்று பெயர் கூறுவர். கவை-கோட்டை.

---

56. 8-9 பைம்பொன் முடிமன்னர்; 11 தீங்குச்; 16-17 ஈங்கிற்சிலவே.

57. 1-5 உண்டான வோாலகை தான்மகிழ்ந்து லகத்தினிலே; 7-12 கூறிய பேயினைக் கூவிக் குலக்கணங்கள் கண்டாடல் போர்க்களம்; 18-20 தம்பத்திங்கட்டற் கேகுதலே; 18 தம்பாற்.

58. 4 குழிசியான்; 6 நெடுவுலை யேற்றி; 14-20 லம்மை யுண்டாங் கடுதிறல் மன்னனை மன்னூழி வாழ வருளுதலே.

பரணிக்குரியவன் ஆயிரம் யானைகளைக் கொன்றவன் என்று இலக்கண விளக்கப் பாட்டியல் முதலியனவும், எழுநூறு யானைகளைக் கொன்றவன் என்று பன்னிரு பாட்டியலும் தெரிவிக்கின்றன.

தேவரை வாழ்த்துதல், கடை திறப்பு, பாலை நிலத் தன்மை, பெருங்கானகத்திலே இறைவன் பெருந்தேவியான காடுகிழவோள் பொருந்தியுறையும் கோயில், அவளைப் பற்றி யுரைத்தல், பேய்க் கூட்டங்கள் அவளைச் சுற்றியிருக்கும் தன்மை, காளியிடம் அவை தம் பசிப்பிணியைச் சொல்லுதல்:

கனு, துன்னிமித்தம் முதலியவற்றை ஒரு பேய் சொல்லுதல், அப்பொழுது பக்கத்தில் நின்ற ஒரு பெண்பேய் பொன்முடியுடைய மன்னர் பகையினுல் இமையைத் தரும் போரைச் செய்து ஒருவன் வெற்றிபெற்று வாகைமாலை அணிந்து மீண்டு அவன் நாட்டிற்குச் சென்ற செய்தியைச் சொல்லுதல், வேறொரு பேய் உவகை செப்புதல்:

அப்பேய் கூறிய உவகைச் செய்தியை அவள் மகிழ்ந்து ஓலக்கத்தில் கொண்டாடுதல், காளி பேய்களைப் பார்த்துச் சொல்லுதல், கொலைக்களத்தைக் கண்டு எல்லாப் பேய்களும் ஆரவாரித்தல், களத்தை வாழ்த்துதல், வெண்மருப்புத் தண்டினுலே இறந்தவர்களுடைய பல்லாகிய தரளத்தைக் குத்தி அரிசி இட்டுதல்:

யானை மத்தகத்தை அடுப்பாகக் கூட்டி, யானை வயிற்றையே பானையாகக் கொண்டு, நிறைந்த குருதியையே உலையாக வைத்து, நிணத்தைப் பெய்து, இறந்துபட்டவர்களுடைய கண்ணிற் கனலும் நெருப்பை எரித்து, அவர்களுடைய தொடி பொருந்திய கையாகிய துடுப்பினுல் குருதியைத் துழாவிக் கூழட்டுப் பேய்களை ஊட்டுதல், காளி உண்டு, பின், அவ்விடத்திலே, கொல்லுந்தன்மை வாய்ந்த மன்னனை வாழ்த்துதல்; நெடி - நாற்றம்

பேய்கள் மிகுந்த பசிதீர உண்டு களத்தில் நின்று ஆடுதல், அப்பேய்களைச் சூழ்ந்து நின்று கவந்தங்கள் ஆடுதல்: இவை முதலிய செய்திகளை புறப்பொருள் நூலிற் சொல்லியவற்றின் வழுவாதபடியும், பரணி நூல்கள் முன்மொழிந்தபடியும் பாடுதல் பரணிக்கு இலக்கணமாகப் புணர்த்திக் கொள்ளுதல் வேண்டும்.

'இதுமுடி புனைந்த மன்னர்க் கல்லது
குறுநில மன்னர்க்கும் வரையா ராண்டே'

'இது பிறநூற் சூத்திரம்' எனப் பிரதியிற் காணப்படுகிறது. இதனால் பரணி குறுநிலமன்னரும் பெறுவர் என்பது தெரியவரும்.

இங்குக் கூறிய செய்திகளைக் கீழ்வரும் கலிங்கத்துப்பரணித் தாழிசைகளால் அறிக:

பொழிமதத்தால் நிலமெழுகிப் பொடிந்துதிர்ந்த
பொடித்தரளப் பிண்டிதீட்டி
அழிமதத்த மத்தகத்தை யடுப்பாகக்
கடுப்பாக் கொண்டடுமி னம்மா. (516)

கொற்றவாள் மறவ ரோச்சக் குடரொடு தலையுங்காலும்
அற்றுவீ மூளைப் பானை யடுப்பினி லேற்று மம்மா. (517)

வெண்டயிருஞ் செந்தயிரும் விராய்க்கிடந்த
கிழான்போல வீரர்மூளைத்
தண்டயிரு மிடைவித்த புளிதமுமாத்
தாழிதொறுந் தம்மி னம்மா. (518)

தனிவிசும் படையினும் படைஞர்கண் தவிர்கிலா
முனிவெனுங் கனலைநீர் மூளைவைத் திடுமினோ (521)

கல்லைக் கறித்துப் பல்முறிந்து
கவிழ்ந்து வீழ்ந்த கலிங்கர்தம்
பல்லைத் தகர்த்துப் பழவரிசி
ஆகப் பண்ணிக் கொள்ளீரே. (523)

இந்த வுரற்கண் இவ்வரிசி
எல்லாம் பெய்து கொல்யானைத்
தந்த வுலக்கை தனையோச்சிச்
சலுக்கு முலுக்கெனக் குற்றீரே. (525)

அழலைக் கையிற் கொள்ளாமே
அடுப்பை யவித்துக் கைத்துடுப்பாற்
சுழலச் சுழலப் புடையெங்குந்
துழாவித் துழாவிக் கொள்ளீரே. (548)

### பெருங்காப்பியம்

60. முன்னம் வணக்கம் அறமுதல் நான்கின் திறமுரைத்தல்
தன்னிக ரில்லாத் தலைவனைக் கூறல் தசாங்கங்களை
வன்னித்தல் வாழ்த்தல் பருவம் இருசுடர்த் தோற்றம்வளம்
இன்னன கூறல் பெருங்காப் பியத்துக் கிலக்கணமே.

முதலிலே வணக்கம்கூறி அறம் முதலிய நான்கின் தன்மை, ஒப்புமையில்லாத தலைவன், தசாங்கம், வாழ்த்துதல், பருவங்கள், இருசுடர்த் தோற்றங்கள், நாடு முதலியவற்றின் வளம், இவை போன்ற பிறவற்றைக் கூறுதல் பெருங்காப்பியத்துக்கு இலக்கணமாம்.

61. பொன்முடி சூடல் பொழில்விளை யாடல் புனலாடுதல்
நன்மணஞ் செய்தல் நறவூண் களிப்புக் கலவிதுனி
மன்மகப் பேறொடு மந்திரம் தூதுசெல விகலா
டின்ன வகைச்சந்தி கூட்டுதல் கூறல் இக் காப்பியமே.

பொன்முடி சூடுதல், பொழில் விளையாடுதல், புனலாடுதல், மணம்செய்தல், மது உண்டு களித்தல், கலவி, ஊடல், புதல்வர்ப் பெறுதல், மந்திரமிருத்தல், தூது, படையெடுத்துச் செல்லல், வெற்றி முதலியவற்றைச் சந்திபோலத் தொடர்பு வகையாகச் சொல்லுவது காப்பியமாகும்.

62. விருப்பந் தருஞ்சுவை பாவம் விளக்கி மிகுபாக்களால்
உரைத்த இனத்தால் உரையோ டுடன்படல் மேற்பரந்து
சருக்கம் இலம்பம் பரிச்சேதம் என்று தனதுபெயர்
தெரித்து வருவது செப்பிய காப்பியம் தேமொழியே.

---

**60.** 1-5 முன்னர் வணக்கஞ் செய்யப் படுபொரு ளறமுதனாற்; 11-12 மன்னர்த் தலைவற்; 15 தோற்றங்கடாம்.

**61.** 5-6 பொன்விளையாடன் மணம்; 9-10 களிகலவித் துணிதல்; 11-20 மன்னும் புதல்வர்ப் பெறுகுதல் மந்திரஞ் தூதுசெலல் கன்னிவென்றிச் சந்திபின்வகை கூறுதல் காவியமே.

**62.** 3 யார்வம்; 4 விளக்க; 8-9 னுரையுட னுட்படல்; 10 மெல்லவந்து; 12-15 யிலம்பக மாம்பரிச் சேத மெனும்பெயரால்; 19 காவியம்.

விருப்பம் தரும் சுவை, பாவம் முதலியவற்றை விளக்கி, மிகுந்த பாக்களாலும், அவற்றின் இனத்தாலும், உரைச் செய்யுளாலும் பொருந்தி விரிந்துசென்று, சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்று தனது உறுப்புப் பெயர் தெரித்து வருவது முன் செப்பிய காப்பிய மேயாம். இவற்றைச் சூளாமணி, சீவக சிந்தாமணி, இரு சமயவிளக்கம் என்ற நூல்களில் முறையே காண்க.

உறுப்புப் பெயர்கள் பருவம் (பாரத வெண்பா), காண்டம் (சிலப்பதிகாரம்), கந்தம் (பாகவதம்), காதை (மணிமேகலை), அத்தியாயம் (கடம்பவன புராணம்), படலம் (கம்ப ராமாயணம்) என்று வருவனவும் உள. திறம் என்ற உறுப்போடு பாடிய காப்பியமும் இக்காலத்துத் தோன்றியுளது. (உ - ம்.) பாரி காதை.

63. நெறியறிந் திவ்வா றியற்றிய வாறு நிலைநிற்றலும்
பெறுபெய ரென்பது பேசும்அறமுதல் நான்கினுந்தாம்
குறைய வரினுமுன் கூறிய காப்பியம் கோகனகச்
செறிமல ரல்லிப் பொகுட்டினில் வாழுந் திருந்திழையே.

அறம்முதல் நான்கினும் குறையவந்தாலும் முன் உணர்த்திய காப்பியமேயாகும்.

அறம் முதலிய நான்கினும் குறைவின்றி வருவது பெருங்காப்பியம் என்றும், குறைந்து வருவது காப்பியம் என்றும் ஏனைய நூல்கள் கூறும்.

**அகலக்கவிகள் பெயர்பெறுதல்**

64. பாட்டுப் பொருளிடங் காலந் தொழில்பாட் டளவுமெண்ணி
நாட்டித் தொகுப்பவுஞ் செய்தவுஞ் செய்வித்த வன்நற்பெயர்
மூட்டித் தொகுத்தவும் ஆசில் முதனூல் மொழிந்தநெறி
கேட்டுத் தெரிந்துகொள் கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழியே.

---

**63.** 5 நிறை திக்கினும்; 10 நான்கினுக்கும்; 12 வரினவை; **14** காவியம்.

**64.** 5 டளவினெண்ணி; 7-15 தொகுப்பது தேவர்க்கும் மானிடரானவர்க்குங் கூட்டித் தொகுப்பருஞ் செய்தொழிலாயவை கூட்டலாகா. 9-10. வந்தவன றுபெயர்.

பாட்டுக்களைப் பொருள், இடம், காலம், தொழில், பாட்டின் அளவு என்றிவற்றால் தொகுத்தனவும், செய்தவன், செய்வித்தவன் என்றிவர் பெயரால் தொகுத்தனவும், குற்றமற்ற முதல் நூல் மொழிந்த நெறிப்படியே கேட்டு, கிளிமொழி, நீ தெரிந்து கொள்.

பொருள் என்றது அகம், புறம் என்ற பாகுபாடும் பிறநூல்களுக்குரிய பொருள்களும்.

முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்
இடுகுறி யானும் நூற்கெய்தும் பெயரே (நன். பாயி. 48)

பொருளால் பெயர்பெற்றன - அகநானூறு, புறநானூறு

பாடப்படும் பொருளால் பெயர் பெற்றன - ஆசாரக்கோவை, கூர்மபுராணம்

இடத்தால் பெயர் பெற்றன - பட்டினப்பாலை, களவழி

காலத்தால் பெயர் பெற்றன - கார் நாற்பது, நெடுநல்வாடை

தொழிலாற் பெயர்பெற்றன - ஊசல், தாலாட்டு

பாட்டின் அளவாற் பெயர் பெற்றன - நாலடி நானூறு, நூற்றந்தாதி, குறுந்தொகை

செய்தானாற் பெயர் பெற்றன - அகத்தியம், தொல்காப்பியம்

செய்வித்தானாற் பெயர் பெற்றன - பாண்டிக் கோவை, வச்சணந்திமாலை

இவற்றைத்தவிர உறுப்பினால் பெயர்பெறும் நூலும் உண்டு என்று சொல்லும் வச்சணந்தி மாலையும், இலக்கணவிளக்கப் பாட்டியலும். அங்கமாலை, நயன விருத்தம் முதலிய காண்க.

நன்னூலில் முதனூல், மிகுதி, தன்மை, இடுகுறி என்றிவற்றாலும் நூற்பெயர் தோன்றும் என்று குறிக்கப்பட்டுள்ளது.

முதனூலால் பெயர்பெற்றன - இராமாயணம், பாரதம்

மிகுதியினால் பெயர் பெற்றன - களவியல்

தன்மையினால் பெயர்பெற்றன - நன்னூல், சிந்தாமணி, சூளாமணி

இடுகுறியாற் பெயர் பெற்றன - நிகண்டு

## புறனடை

65. சக்கர மேமுதற் சித்திரச் செய்யுள் தசாங்கங்களை
அக்கரக் கூறு படுப்பினும் ஆனந்தம் அல்லவற்றின்
இக்குண மில்லாமை யானவை சொன்ன இவையுமன்றி
மிக்குள யாவும் இமையோர்க் கிலக்கு விலக்கல்லவே.

சக்கரம் முதலிய சித்திரச் செய்யுட்களையும், தசாங்கங்களையும் அக்கரமாகக் கூறுபடுப்பின் ஆனந்தம் ஆம். (எனவே செய்யற்க.) அல்லாதவற்றில் இந்த ஆனந்தத் தன்மை இல்லாதவையும், சொன்ன இவையே அன்றி, பிற யாவும் தேவர்களுக்குக் குறிக்கப்படுவனவாம்; விலக்கல்ல.

ஆனந்தம் முதலியன மக்களுக்குப் பொருந்தச் செய்யுள் இயற்றப்படின் அவர்கள் நவை எய்துவர்; இமையோர்மீது பாடியவற்றில் இக்குற்றங்கள் வருமாயின் பாடினோர் நவையெய்துவர்: என்பது சிதம்பரப் பாட்டியல்

தொகைக்குற்றம் பாட்டுறில் செல்வம்போம் நோயாம்
சுற்றமறும் மரணமுறும் சோரும் காலும்
சகத்தவர்க்கீ தன்றியே தேவர்க்காகிற்
றப்பாதிப்பலன் கவிதைசாற்றினோர்க்கே.

(சிதம்-மரபி. 20)

66. பாவா னவையிவை தம்மிற் பயிற்றுமிப் பாவினத்தில்
தாவாத வெண்செந் துறைசந்த கந்தண் டகமனைத்தும்
மேவாத வல்ல வினைப்பாத் தமிழ்வெற்பின் வேதமுனி
நாவார் தமிழ்நடை யேபுணர்த் திக்கொள்க நன்னுதலே.

பாக்களும், பாவினத்தில் வெண்செந்துறை முதலானவை அனைத்தும், விரும்பிக்கொள்ளத்தகாதனவல்ல. இத்தகைய பாக்களை அகத்தியன் உணர்த்திய தமிழ் நடையினால் புணர்த்திக் கொள்க.

---

**65.** 7-8 கூறிப் பிடிப்பினும்; 10-11 அல்லவற்றினக்குண; 11-15 இக்குண மில்லவை யானவையான தெல்லாமறிந்து; 16 மிக்கன.

**செய்யுள் மொழியியல் முற்றும்.**

# III. பொது மொழி யியல்

## பொதுப்பாயிரம்

67. ஈவா ரியல்பவை ஈகை முறைமை யிவை யுணர்தல்
ஆவார் திறமவை கோளாய வாதியி னும்பகுதி
தாவா துரைத்தல் பொதுப்பா யிரம்தனி வானவரை
ஓவா திறைஞ்சி அதிகார முன்னர் உரைப்பர்களே.

பாட்டியற்குரிய பொதுப் பொருள்களைச் சொல்லும் இயல்.

ஆசிரியன் இயல்பு, ஆசிரியன் பாடம் சொல்லும் முறை, மாணாக்கன் இயல்பு, மாணாக்கன் பாடம் கொள்ளும் முறை என்பன வாக முதலில் வரும் பகுதியை நீங்காதுரைத்தல் பொதுப்பாயிரம். உணர்தலாவார் - ஆசிரியன் சொல்லுவனவற்றை உணர்வாராகிய மாணாக்கர். கோள் - கொள்ளுந்தன்மை. இப்பொதுப் பாயிரத்தின் முன்னர் வானவரை இறைஞ்சி அதிகாரம் உரைப்பர்.

வணக்கமும் அதிகாரமும் பொதுப் பாயிரத்தின் முன் உரைக்கப் படும் என்றும், அதுவும் ஒருவகை யான சிறப்புபபாயிரம் என்றும் மயிலை நாதர் கூறுவர். 'வணக்க மதிகாரம் என்றிரண்டும் சொல்ல, சிறப்பென்னும் பாயிரமாம்' என்பது அவர் காட்டும் மேற்கோள். இது இந்நூலின் முதலில் கூறப்பட்ட 'கார்கொண்ட மேனி' என்ற செய்யுளாலும் உணரலாகும்.

ஈவோன் தன்மை ஈத லியற்கை
கொள்வோன் தன்மை கோடன் மரபென
நாலியற் றென்ப பொதுவின் தொகையே

(இளம்-பாயிரவுரை)

பவணந்தி முனிவர் நூலையும் உடன்கூட்டிப் பொதுப்பாயிரம் ஐவகைத்து என்பர்.

---

**67.** 3 ஈயும் முறைமை; 6-10 ஆவாமொழிபவர் கொள்பவராதியினுற் பகுதி; 11-12 வொவுரைத்தல்; 14-15 யிரந்தன் னின்னவரை; 17 இறைஞ்சல்; 19 மன்ன.

### சிறப்புப்பாயிரம்

68. செய்தான் செயப்பட் டதுசெய் பொருளது செய்திறத்தோ
டெய்தும் பயனே இதன்வழி யெல்லை யெனவொரெட்டும்
ஐயமில் காலம் அவைகா ரணமாகப் பத்தொடொன்றும்
மெய்தெரி யிற்சிறப் புப்பா யிரமென்ன வேண்டுவரே.

69. நூற்பெயர் நூல்செய்த ஆசிரி யன்பெயர் நூல்விளங்கித்
தோற்றிடச் செய்தற்குக் காரணம் யாப்புத் தொன்னூலின்
பாற்படும் எல்லை யறிதல் பயனிவை யுஞ்சிறப்பின் [வழி
மேற்படு பாயிரம் என்று சிரியர்கள் வேண்டுவரே.

இவ்விரண்டு செய்யுட்களும் சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் கூறுகின்றன. இவற்றுள் முற்கூறப்பட்டது இந்நூலுக்குரியதாகவும், பிற்கூறப்பட்டது பிறநூல் மேற்கோளாகவும் இருக்கலாமெனத் தோற்றுகிறது. இந் நூலாசிரியர் பிறநூல் மேற்கோள்களை நூலகத்து எடுத்தாண்டுள்ளார் என்பது பரணி இலக்கணம் கூறும் இடத்துவரும் மேற்கோளால் அறியப்படும். இரண்டு செய்யுட்களிலும் கூறப்படும் கருத்துக்கள் ஒன்றாயிருத்தலும் இங்கே நோக்கத்தக்கது. ஆனால், பிற்செய்யுள் எந்நூலைச் சார்ந்தது என அறியக்கூடவில்லை.

சில பிரதிகளில் பிற்செய்யுள் இந்நூலின் பாயிரப் பகுதியிற் காணப்படுகிறது.

செய்தான் - ஆக்கியோன்; செயப்பட்டது - நூற்பெயர்; செய்பொருள் - நுதலியபொருள்; செய்திறம் - கேட்பேரும், யாப்பும்; இவை பயன், வழி, எல்லைஎனும் மூன்றுடன்கூடி எட்டாதல்காண்க. இவ்வெட்டனோடு காலம், அவையாகிய களம், காரணம் என்ற மூன்றினையும் உடன்கூட்டிச் சிறப்புப் பாயிரம் பதினொரு வகைப்படும் என்று கூறுவர். இரண்டாவது செய்யுள் காலம், களம், கேட்போர் என்ற மூன்றினையும் நீக்கி ஏனையவற்றை எண்ணுகின்றது.

ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனொ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே. (இளம்-பாயிரவுரை)

காலம் களனே காரணம் என்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே. (இளம்-பாயிரவுரை)

### நூலின் இயல்பு

**70.** முதல்வழி சார்பென மூவகைத் தந்திரம் சூத்திரமும்
உதவு விருத்தி யுயர்தரு மம்முதல் நான்கேழ்வரை
மதவிகற்பம் பத்துக் குற்றத்துத் தீர்ந்து பத்துக்குணத்தின்
நுதலும் பன்மூறுடன் முப்பத்தி ரண்டுள நூல்நெறியே.

முதல், வழி, சார்பு என நூல் மூவகைத்து. நூற்பாவாலாகிய நூல்கள் விருத்தி முதலிய உரை, தருமம் முதலிய நாற்பயன், ஏழாக வரையறுக்கப்பட்ட மதங்கள், பத்துக் குற்றங்களிற் றீர்தல், பத்துக் குணங்கள், பதின்மூன்று உரைத்திறங்கள் (யாப். வி. பக். 13): இவற்றோடு தந்திர உத்திகள் முப்பத்திரண்டும் கொண்டு நடைபெறும்.

நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றி யம்மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே. (நன் - 4)

### அந்தணர் இயல்பு

**71.** கோல்குடை கோவணம் நான்மறை முத்தீக் குசைதருப்பை
மால்கழல் வாழ்த்தல் இரண்டு பிறப்பு மணிசமிதை
தோல்ஐந்து வேள்வி கரகம் அரவிந்தந் தொல்கோத்திரம்
நூல்இரு மூன்றங்கம் அந்தணர்க் கோதுவர் நூலவரே.

**72.** ஈதலும் வேட்டலும் ஓதலும் ஆங்க தியற்றுவிப்பா
ராதலும் அங்கி யயனோ டுவமையும் வல்லவரெண்

---

**70.** 2 சார்பெதிர்; 7-10 விருத்தியொ டேதுவு மேற்கோளுரை நான் கேழாம்; 11 பதன்விகற்; 16 முதலும்; 17 பதின்றுள; 20 நூல்வகையே.

**71.** 1-2 கோல்கரகங் குடை; 8-15 ஒரு முப்பொழுதுங் கடன் கழித்த லேனும் பசுபதிக் குணவுகளீதல் யாகஞ்செய்தல்; 9 விதப்பு.

**72.** 4-5 வேதமியற்றி யேற்பார்; 10 அவ்வவரெண்;

மாதவர் பூசுர ரென்றலும் நான்மறை யோர்க்குரிய
போதினும் வெற்பினும் நாவினு மேவும் புனையிழையே.

கோல், குடை, கோவணம், நான்மறை, முத்தீ, குசை, தருப்பை, திருமாலின் கழலை வாழ்த்தல், இரண்டு பிறப்பு, மணை, சமிதை, தோல், ஐந்து வேள்வி, கமண்டலம், தாமரைமாலை, பழைய தாகிவரும் கோத்திரம், பூணூல், ஆறங்கம் என்றிவை அந்தணர்களுக் குரிய வென்று நூலவர் ஓதுவர். ஈதல், இரத்தல், வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்றிவற்றைச் செய்தலும், அக்கினி, பிரமன் என்றிவரோடு உவமிக்கப்படுதலும், வல்லவர்களால் மாதவர், பூசுரர் என்று வழங்கப்படுதலும் நான்மறையோர்க்குரியவாம். இலக்குமி, பார்வதி, நாமகள் மூவரும் விரும்புதற்குரிய அழகு முதலியன வாய்ந்த புனையிழையே என்பது விளி.

நான்மறை : 'நால்வகை வேதம் இருக்குத் தைத்திரியம் - சாம வேதம் அதர்வணந் தானே.' (திவா-12-40)

தைத்திரியம் என்பதற்குப் பிரதியாக எஜுர் வேதம் எனவும் நூல்கள் கூறுகின்றன.

முத்தீ : 'காருக பத்தியம் தென்றிசை யங்கி-ஆகவ நீயம் அந்தணர் முத்தீ.' (திவா-12-21)

குசை, தருப்பை என்றதனைப் புல் என்றடக்கியும், மால்கழல் என்பதற்குப் பிரதியாக அரன்கழல் என்றும் கூறுவர் குணவீர பண்டிதர். குசை, தருப்பை என்பன புல் வகைகள். பக்கத்தில் கிளைத்துள்ளது குசை என்றும் அங்ஙனம் கிளையாதது தருப்பை யென்றும் விருத்த ஹாரீதம் கூறும். பிங்கலந்தை 'தருப்பையும் முஞ்சியும்' (ஆடவர்-6) எனக் கூறுகிறது.

இரண்டு பிறப்பு : உபநயனத்தின்பின் இரண்டாம் பிறப்புடை யனைக் கொள்ளுதலாலே அந்தணன் இருபிறப்புடையன் ஆவான்.

மணை - ஆசனம், தோல் - மான்றோல் ; கிருஷ்ணாஜிநம்.

---

**72.** 7-11 அங்கயன் வன்னியொ டொப்பா யிணைத்தோதலும்; 12-13 பூசுரர் தானெனல்; 18 மாமின.

ஐவகை வேள்வி :

'தெய்வமே பிரமம் பூதந் தென்புலத்தோர் மனித்தர்
ஐவகையோரை யோம்பல் ஐவகை வேள்வியாமே'
(சூடா-பல்பெயர்த். 44)

அரவிந்தம் என்பது அவர்க்குரியமாலை ; 'மாலை கமலம் மறை கொடியாகும்.' (பிங்-ஆடவர். 5)

ஆறங்கம் : 'ஆறங்க மந்திரம் வியாகரணம் நிகண்டு - சந்தோ பிசிதி நிருத்தஞ் சோதிடம்.' (திவாகரம்-12-81)

நச்சினார்க்கினியர் அங்கங்களைச் சிறிது வேறுபடக் கூறுவர். 'உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராய்ந்த ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் பரமார்த்தம் பரமாத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வராகம் முதலிய கணிதமும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்' என்ற கலித்தொகை உரைப்பகுதியால் உணர்க.

இயற்றுவிப்பார் என்பதனை ஈதல் முதலிய மூன்றுடனும் கூட்டுக. ஈதலை இயற்றுவித்தலாவது ஏற்றல். எண்-எண்ணுதற் குரிய ; வேட்டல்-யாகம் செய்தல்.

### அரசர் இயல்பு

73. பூவை நிலைபக லோன்கழல் போற்றல் புனைதல்முடி
தேவ ருவமைசிங் காசனம் செங்கோல் குடைகவரி
காவல் நிகழ்த்தல் எரிவேட்டல் ஓதல் கலமுதல
மேவல் அடுகளம் வேட்டல்பண் பாயின வேந்தர்கட்கே.

74. விளங்கிய நூல்கற்றல் வேத நெறிநின் றறுசமயம்
உளங்கொண்டு போற்றல் அமைச்ச ருரைகொளல் ஓர்ந்துகுடி
தளர்ந்தன தாங்கல் முறைமை கோடாது தனம்பெருக்கல்
அளந்து பெரும்படை சேர்த்தல் அரசர்க் கடுத்தனவே.

பூவைநிலை, சூரியனுடைய கழலைத்துதித்தல், முடி அணிதல், தேவர்களை உவமையாகச் சொல்லுதல், சிங்காசனம், செங்

73. 7 ருரிமைசிங்; 15 கடலமுத.

74. 4-5 நெறிவிள் ளறுசமயம்; 14 கெடாது; 18 தாங்கல்; 20 கடுத்ததுவே.

கோல், குடை, கவரி, காவல் செய்தல், யாகம் செய்தல், ஓதல், படைக்கலம் முதலியன பயிலல், போர்க்களம் வேட்டல் என்ற இவை வேந்தர்கட்காயின பண்பாம். விளங்கிய நூல்களைக் கற்றல், வேதநெறி வழுவாமல் நின்று அறுவகைச் சமயங்களை மனத்துள் ஒன்றுபோலக் கொண்டு அவற்றைப் போற்றுதல், அமைச்சர் கூறும் சீரிய அறிவுரைகளை மேற்கொள்ளுதல், தளர்ந்தகுடி இவை என்றறிந்து அவைகளைத் தாங்குதல், முறைமையினின்றும் தவறாது பொருளீட்டுதல், காலம்பார்த்து வேண்டியஅளவு பெரும்படையைச் சேர்த்துவைத்தல் என்ற இவை அரசர்களுக்குப் பொருந்தியன.

இங்குக் கூறியனவன்றி, சதுரங்கம், வெற்றி, வாய்மை விளைத்தல் என்ற மூன்றினையும் வெண்பாப் பாட்டியல் கூறுகின்றது. ஏனைய நூல்கள் அரசர்க்குரித்தாகக் கூறும் ஈதல் என்பதனை குடி தளர்ந்தன தாங்கல் என்பதனுள் அடக்குக. பூவைநிலை : திருமாலை மன்னரோடு உவமித்துக் கூறுதல் 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின், தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்' (தொல். புறத்-5). 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரள விடல்' (குறள். 755) என்றதன் உரையில் 'அவற்றோடுகூடி வருத லாவது ஆறிலொன்றாய் வருதல்' என்றும் 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு, ஐம்புலத்தா றோம்பல் தலை.' (குறள் 43) என்றதன் உரையில் 'அரசனுக்கு இறைப்பொருள் ஆறாயிற்று; இவ் வைம்புலத்திற்கும் ஐந்துகூறு வேண்டுதலா னென்பதறிக' என்றும கூறுதலால், அரசனுக்குரிய பொருளை அறிக.

'ஆறினின் றறமென வருளி னல்லதொன், றூறுசெய் துலகினி னுவப்பதில்லையே' (சூளா.நகர-19) 'உறுபொருளுமுல்குபொருளுந் தன்ஒன்னார்த்-தெறுபொருளும் வேந்தன் பொருள்' (குறள் 756). என்பனவும் உணரத் தக்கன.

### வணிகர் இயல்பு

75. இருபிறப் போதல் எரிவேட்டல ஈதல் இருநிதியம்
வருதிறத் தான்நல்ல வாணிபஞ் செய்தல் நிரைவளர்த்தல்
பெருநிதிக் கேள்வனைப் பேணல் அவனென்று பேசநிற்றல்
உரிமைதப் பாவணி கர்க்கியல் பாமென்பர் ஒண்ணுதலே.

---

**75.** 2-4 பாளர்க்கு ரல்வேட்டலோத; 7 தாதல்நல்; 12 கோன்கழல்; 14-15 வருவன பேசிநிற்றல்; 16-19 உரிமையதாக வணிகர்க்கியல்பது.

76. உறுவது கோடல் வருபயன் தூக்கல் உழவின்றொழில்
இறுவதஞ் சாமை இடரிற் றெருளூறல் ஈட்டுதற்கு
நெறிபல போதல் முனிவில னாதல் நிரைவளையாய்
குறியென லாகும் குலவணி கர்க்குக் குவலயத்தே.

இருபிறப்பு, ஓதுதல், யாகம் செய்தல், ஈதல், பெருஞ்செல்வம் பெறுதற்குரிய நல்ல வாணிபத்தை மேற்கொள்ளுதல், பசுக் கூட்டங்களை வளர்த்தல், குபேரனை வணங்குதல், குபேரனென்று உவமை கூறிப் புகழும்படி நிற்றல், உரிமைகளில் குறைவில்லா வணிகர்க்கு இயல்பாம். பின் வருவனவற்றை முன் அறிதல், காரியம் செய்யுமிடத்து மேல்வரும் பயனை ஆராய்தல், உழவுத் தொழில், முடிவைப்பற்றி அஞ்சாதிருத்தல், இடர்வரும் காலத்துத் தெளிவுடையனாதல், பொருளீட்டுதற்குப் பல இடங்களுக்கும் செல்லுதல், கோபமில்லாதிருத்தல் என்ற இவை குலவணிகர்க்கு இப்பூமியில் குறியென்று சொல்லப்படும். குறி - இலக்கணம்.

வச்சணந்தி மாலை வணிகரைப் பூவைசியர், தனவைசியர் என்று இரு கூறுபடுத்து இலக்கணம் அமைக்கின்றது. பூவைசியருக்கு உழுதலும், நிரைவேட்டலும், தன வைசியர்க்கு வாணிபத்தால் பொருள் ஈட்டுதலும் சிறப்பாக அந்நூல் கூறுகின்றது.

தனிமைய னாதல் முனிவில னாதல்
இடனறிந் தொழுகல் பொழுதொடு புணர்தல்
உறுவது தெரிதல் இறுவ தஞ்சாமை
ஈட்டல் பகுத்தல் என்றிவை யெட்டும்
வாட்டமில்லா வணிகர தியற்குணம் (திவா-12-126)

என எட்டுவகைக் குணங்கள் திவாகரத்தில் வணிகர்க்குக் கூறப்பட்டுள்ளன.

## வேளாளர் இயல்பு

77. திருந்திய நல்லறம் தீராத செம்மை யொழுக்கமென்மை
வருந்திய சுற்றத்தை யாற்றுதல் மன்னர்க் கிறையிறுத்தல்

---

**76.** 6-17 இறுபதஞ் சார்தலதிதிக்கு மாலடி போற்றிமறை நெறிபல வோர்தல் முனிவிலனாதல் நிகழ்த்து பிறவுறுவனவாகும்.

**77.** 10 திறையிறுத்தல்.

பொருந்திய ஒற்றுமை கோடல் புகழும் வினைதொடங்கல்
விருந்து புறந்தரல் வேளாண் குடிக்கு விளம்புவரே.

78. வாணிபஞ் செய்தல் உபகாரம் ஆசாரம் வாய்ந்தசெயல்
பேணி யுழுதல் இருபிறப் பாளர் நெறிவழுவா
ஆணை வழிநிற்றல் ஆனிரை போற்றல் அகன்றஅல்குற்
பூண்முலை யாயிவை வேளாண் குடிக்குப் புகன்றனரே.

செப்பமான நல்ல அறம், ஒரு பொழுதும் நீங்காத நடுவு நிலைமை, நல்லொழுக்கம், இனிமைக் குணம், வருந்திய சுற்றத்தார்க்கு உதவி அவரைப் பாதுகாத்தல், மன்னர்க்குரிய இறைப் பொருளைக் கொடுத்தல், ஒற்றுமையைக் கொள்ளுதல், புகழ்ச்சிக் குரிய செயல்களைத் தொடங்கிச் செய்தல், விருந்தினரை உபசரித்தல் என்ற இத் தன்மைகள் வேளாண்குடிக்கு உரியவென்று கூறுவர். வியாபாரம் செய்தல், உபகாரம் செய்தல், ஆசாரமாயிருத்தல், நல்ல வாய்ப்புள்ள செய்கைகளைச் செய்தல், உழுதல், அந்தணர் முதலி இருபிறப்பாளருடைய ஆணைவழி நிற்றல், பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தல் என்ற இவற்றையும் வேளாண்குடிக்கு உரியனவாக ஆன்றோர் புகன்றனர்.

நான்கு வருணத்தையும் பற்றிய செய்திகள் வச்சணந்திமாலையிலும் காணப்படுகின்றன. சிதம்பரப்பாட்டியல், பன்னிருபாட்டியல்களில் இவை கூறப்படவில்லை. இலக்கணவிளக்கப் பாட்டியலார் தொல்காப்பியரைப் பின்பற்றி நான்கு வருணத்தின் தன்மைகளையுரைப்பர். தொல்காப்பியத்து நான்கு வருணத்தார்க்கும் உரியனவாகச் சொன்னவற்றைப் பின் வரும் சூத்திரங்களால் உணர்க.

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும். (தொல்-புறத். 20)
நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க்குரிய. (தொல்-மரபு-70)
படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்

77. 12-13 வேத நெறிக்கோள்; 17 புரந்திடல்; 20 விளம்பினரே.
78. 5 வாய்ந்து செயல்; 10-11 உரைவழு வாதாணை; 14 மேய்த்தல்.

தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோ லரசர்க்குரிய. (தொல்-மரபு-71)
வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை. (தொல்-மரபு-77)
மெய்தெரி வகையின் எண்வகை யுணவின்
செய்தியும் வரையார் அப்பாலான. (தொல்-மரபு-78)
வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி. (தொல்-மரபு-80)
வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன வென்ப அவர்பெறும் பொருளே. (தொல்-மரபு-81)

### செய்யுள் மொழியின் மரபு

79. தானைத் தலைவரை ஏவல்பெற் றோரைத் தனிவெண்குடைக்
கோனை யடுத்த பகைவரைக் கோறலக் கூற்றளவும்
ஏனைக் குறுநில மன்னவர் தங்களை மன்னரென்ன
மானப் புகழ்தலுஞ் செய்யுண் மொழியின் மரபென்பரே.

சேனாபதிகளையும், அரசனால் ஏவல் பெற்றோரையும், ஒப்பற்ற வெண் கொற்றக் குடையினையுடைய அரசனது பகைவரைக் கொல்லுந் தொழிலாற் கூறலும், குறுநில மன்னர்களையும் அரசரென்று புகழ்தலும் செய்யுள் மொழிதலின் மரபாம் என்பர். 'ஏவல் மரபின் ஏனோரும் உரியர், ஆகிய நிலைமை யவரு மன்னர்' என்ற அகத்திணையியற் சூத்திரத்தையும், 'பிறரை ஏவிக்கொள்ளும் தொழில் தமக்குளதாகிய தன்மையையுடைய அந்தணர் அரசர் வணிகரும், அம்மூவரைப்போலப் பிறரை ஏவிக்கொள்ளும் தன்மையராகிய குறுநில மன்னரும் அரசரால் சிறப்புப் பெற்றோரும், வேளாளரும், உரிப்பொருட் டலைவராதற்குரியர்' என்ற உரையினையும் ஈண்டு நோக்கிக் கொள்க.

80. வேதியன் வேந்தன் வணிகன்வே ளாளன் எனமுறையே
ஓதுவர் வெண்பா அகவல் கலிவஞ்சி ஓதவற்றின்
பேதமும் அவ்வகை யானே வருமென்பர் பெய்தகட்டாற்
றுதவி மூங்குழற் றுமரைச் செய்ய சரிவளையே.

---

**79.** 2 தனைவரை; 9-10 கோறலக்கூறறல், கூறுதற்குற்றனவும் 17-18 புகழ்தற் செயலான்

**80.** 15-17 பேதகட்டாற்றுதல் கருங்குழற்; 18-19 றுமரைக் கையில்.

வேதியன், வேந்தன், வணிகன், வேளாளன் என்ற நான்கு குலங்களையும் முறையே வெண்பா, அகவல், கலி, வஞ்சி என்ற நால் வகைப் பாக்களுக்கும் சொல்லுவர். அந்நான்கு பாக்களின் இனங் களையும் அவ்வாறே சொல்லுவர்.

சரிவளை - அன்மொழித் தொகை, தாமரை - தாமரைபோலும் கை, செய்ய - அழகிய. கருங்குழல்-கருங்குழலையுடைய. தாதவிழுங் குழலையும் தாமரைபோன்ற கையினையும் உடைய சரிவளை என்க.

**81.** சாற்றுந் தலைவன் இயற்பெயர் ஊர்க்குத் தகஎதுகை
தோற்றினும் அப்பெயர் சொல்லுமப் பாதங்கள் துன்றுமச்சீர்
ஏற்ற எழுத்து வரினும் இயைந்த தியற்பெயர்க்கே
ஆற்றும் பொருத்தம் அனைத்தும் பொருந்தினும் ஆஞ்சிறப்பே.

நூலுள் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தலைவனுடைய இயற்பெயர் ஊர்ப்பெயர் என்றிவற்றிற்குத் தக்க எதுகை பொருந் தினும், அப்பெயரைச் சொல்லுகின்ற அடிகளில் பொருந்திய அச்சீர் வழியெதுகையாமாறு ஏற்ற எழுத்துக்கள் வரினும், சிறப் பொடு பொருந்தியதாகும். இயற்பெயருக்குப் பொருத்தங்கள் எல் லாம் பொருந்தினும் சிறப்பு ஆகும். இதனைப்பின்வரும் வச்சணந்தி மாலைச் செய்யுளால் உணர்க:

பாட்டுடையோ னூர்ப்பே ரியற்பேர் படவெதுகை
நாட்டிடினு மப்பேர் நவிலடியின்—காட்டுமுதல்
சேர்ந்த அனுவாகச் சீர்மன் னியற்றிடினும்
வாய்ந்தசிறப் பென்கை வழக்கு.

**82.** தெற்ற வழக்கொடு தொன்றுணர் வார்க்கின்பஞ்செய்தலின்றி
பற்றல் வடநூ லெழுத்துக் களைப்பழை யோருரையின் [ப்
மற்றிவை யில்லையென் றோத லுடன்படல் மாவியலாற்
பெற்றி யுடைச்சொற் பழிச்சும் உறுப்பென்று பேசுவரே.

தெளிந்த வழக்குடனே, பழைய மரபும் உணர்வார்க்கு இன்பமும், வடநூல் எழுத்துக்களையின்றிச் செய்தலும், பழையோர் உரையில் இச்சொற்கள் இல்லை என்று குற்றங் கூறலையுடன் பட்டு அக்குற்றம் நீங்கிய தன்மையும்: ஆகிய பெரிய இயல்பினாலே

---

**81.** 4-5 ஊர்க்குத் தக்கவ் வெதுகை.

**82.** 3தேர்ந்துணர்; 4 விற்கின்றஞ்; 6 பற்றிவ்; 9 களேபழை; 18 பழித்த.

நல்ல தகுதியையுடைய சொற்களால் செய்தல் யாவரும் புகழும் உறுப்பு என்று சொல்லுவர். இவ்வுறுப்பினை வெண்பாப் பாட்டியல் பின் வருமாறு கூறும்:

வழக்கின் மரபியலின் நேர்ந்து வழுவா
திழுக்கி வடவெழுத்தை யின்பம்—வழுக்காது
முன்னையோர் பாட்டிற் பயின்ற மொழியன்றே
சொன்ன வுறுப்பின் றுணிபு.

83. மானின் இளங்கன்று மஞ்ஞையின் பிள்ளை மதிக்குழவி
தேன்இன் னமுதந் தெளிநற வஞ்செழுங் கற்பகப்பூங்
கானிற நீர்வல்லி கல்லாத கிள்ளை கரும்பின்முளை
ஊனிற வேற்கண் மடவார்க் கிசைந்த உவமைகளே.

மானின் இளங்கன்று, மயிலின்பிள்ளை, வளர்பிறைச் சந்திரன், தேன், இனிய அமுதம், தெளிந்த நறவம், செழுமையான கற்பகப் பூவின் மணம் பொருந்தியகொடி, பேசுதல் கல்லாத மழலையுடைய இளங்கிளி, கரும்பின் இளமுளை என்றிவை பெண் மகளிர்க் கிசைந்த உவமைகளாம்.

கற்பகத்தைச்சேர்ந்த கொடியைக் காமவல்லி என்பர். 'கற்பகம் சேர்கொடி காமவல்லி' என்பது திவாகரம். 'கானிமிர் கற்பகமுயிர்த்த கதிர்வல்லி' (ஆரணி. 257) என்ற கம்பராமாயணச் செய்யுளும் இதை விளக்குதல் காண்க.

பேதை முதலிய எழுவகைப் பருவப் பெண்களுக்கும் இன்னின்ன உவமைகள் என்ற வரையறை உசித சூடாமணி நிகண்டில் எழுவகைப் பெண்பருவத் தொகுப்பு என்ற பகுதியில் காணலாம்.

84. முருக னுவமைமுந் நான்கு முதல்எண் ணிரண்டுவரை
அரசர்க் குரித்தவர் தம்மோ டுவமையல் லார்க்குரித்து
திருவோ டுவமை அரிவை முதலிய சேயிழையார்
பருவத் துரித்தென்ன ஓதுவர் தொன்னூற் பருணிதரே.

83. 1-2 மானின மான்கன்று; 6-15 தேனறவின்பம் தெள்ளாவமுதுஞ் செழுங்கரும்பும் கானிறவல்லியுங் கல்லாத கிள்ளைகற் கண்டுபிடி; 16 ஊனுறு; 20 உறுப்புக்களே.

84. 4-20 முதலெட் டிரண்டரசர்க், கரியமதன் முப்பத்திரண்டாமதின் மிக்கமாலாம், திருவினனைய பெதும்பை முதலரிவைப்பருவத், துரிய பிறழினு மொக்குமென்றூர் நூல் உரைவலரே.

அரசர்க்குப் பன்னிரண்டு வயதுமுதல் பதினாறு வயது வரையில் முருகனை உவமையாகக் கூறுதல் உரித்து. அரசரல்லாதவர்களுக்கு அரசரை உவமையாகக் கூறுதல் உரித்து. திருவோடு உவமை அரிவை முதலிய பருவமுடைய பெண்களுக்குரித்து. பருணிதர் - புலமை முற்றியவர்.

**கவிஞர்வகை**

**85.** வாய்ந்த கவிகம கன்வாதி வாக்கி வகைவனப்பும்
ஆய்ந்தவல் ஆசு மதுரமுஞ் சித்ரவித் தாரமுமே
ஏய்ந்த கவிநான்குங் கள்ளக் கவிமுதல் ஈரிரண்டும்
தேய்ந்த பிறைநுதற் சேயிழை யாயிவை தேர்ந்துகொள்ளே.

பொருந்திய கவி, கமகன், வாதி, வாக்கி என்ற வகையின் அழகிய இயல்பும், பல நூல்களையும் ஆராய்ந்த ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நால்வகைப்பட்ட கவிஞரின் இயல்பும், கள்ளக்கவி, சார்த்துகவி, பிள்ளைக்கவி, வெள்ளைக்கவி என்ற நால்வகையும் சேயிழையே முன்னோர் நூலின் வழியே தெரிந்துகொள்.

இங்குக் கூறப்பட்ட பன்னிரண்டு வகைகளையும் பற்றி வச்சணந்திமாலை, இலக்கண விளக்கப் பாட்டியல் என்ற இரண்டும் கூறுகின்றன. திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளிலும் யாப்பருங்கல விருத்தியில் 'மாலை மாற்றே' என்று தொடங்கும் சூத்திர உரையிலும், வீரசோழிய வுரையிலும் (179, உரை) கவிஞர்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கள்ளக்கவியைச் சோர கவி என்றும் கூறுவர்.

கவியே கமகன் வாதி வாக்கியென
இவையொரு நான்கே புலமைக் கியல்பே.

(திவா - 12 - 43)

கவி : 'ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னும் நால்வகைக் கவிகளையும் யாவரும் வியக்கும்படி பாடுவோன்.'

ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமெனும்
பாவகை பாடுவோன் கவியெனப் படுமே.

(திவா - 12 - 44)

---

**85.** 5 வனப்புஞ் சிறந்தும்; 6 ஆய்ந்தவன்; 8 - 10 மதுரமொடுஞ் சித்திரவித்தாரம்; 12 வகைநான்கும்; 18 கொள்ளும்; 19 யாப்பினும்.

கமகன் : 'அரும்பொருள்களைச் செம்பொருள் நடையினவாகக் காட்டி விவகரிப்போன்.'

ஞாபகம் செம்பொருள் நடையினெப் பொருளும்
காசின் றுரைப்போன் கமகனுகும். (திவா-12-45)

வாதி : 'ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டி வாதித்துப் பிறன் கொள்கையை மறுப்பவன்.'

ஏதுவு மேற்கோளும் எடுத்துக் காட்டி
ஏதினளவும் செய்துதன் கோள்நிறீஇ
வாதிற் பிறர்கோள் மறுப்பான் வாதி. (திவா-12-46)

வாக்கி : 'அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகைப் பொருளையும் யாரும் விரும்பிக் கேட்குமாறு குற்றமறக் கூறுவோன்.'

அறம்பொரு ளின்பம் வீடெனுந் திறங்கள்
கேட்க வேட்க இனியன கூறும்
ஆற்ற லுடையோன் வாக்கி யாகும். (திவா-12-47)

ஆசுகவி : 'தொடுத்த பொருளும், தொடுத்த சூழலும், அடுத்த தொடையும் வழுவாமல் கடுத்துப் பாடுவோன்.'

கொடுத்த பொருளில் தொடுத்த வினத்தில்
அடுத்த பொழுதிற் பாடுவ தாசுகவி. (திவா-12-48)

மதுரகவி : 'சொற் செல்வமும் பொருட் பெருமையும் உடைத்தாய்த் தொடையும் தொடை விகற்பமுந் துதைந்து உருவக முதலிய அலங்காரங்களை உட்கொண்டு ஓசைப் பொலிவுடைத்தாய் உய்த்துணரும் புலவர்கட்கு ஒலிகடலமிழ்தம் போன்று இன்பம் பயக்கப் பாடுவான்.'

பொருளின் பொலிவும் சொல்லின் செல்வமும்
தொடையுந் தொடைக்கண் விகற்பமுந் துதைந்து
உருவக முதலாம் அலங்காரம் உட்கொண்டு
ஓசைப் பொலிவுற் றுணர்வோ ருளங்கட்கு
மாகட லமிழ்தம்போல் பாடுதல் மதுரகவி.

(திவா-12-49)

சித்திரக்கவி : 'மாலைமாற்று முதலிய அருங்கவி பாடும் தன்மை யுடையான்.'

மாலைமாற்றே சக்கரம் சுழிகுளம்
ஏகபாதம் எழுகூற் றிருக்கை
காதை கரப்பே கரந்துறை பாட்டே
பாத மயக்கே பாவின் புணர்ப்பே
கூட சதுக்கம் கோமூத்திரியே
ஓரினத் தெழுத்தால் உயர்ந்த பாட்டே
ஒற்றுப் பெயர்த்தல் ஒருபொருட் பாட்டே
சித்திரப் பாவே விசித்திரப் பாவே
விகற்ப நடையே வினு வுத்தரமே
சருப்பதோ பத்திரம் சார்ந்த வெழுத்தே
வருக்கமு மற்றும் வடநூற் கடலுள்
ஒருக்குடன் வைத்த வுதாரணம் நோக்கி
விரித்தும் மறைத்தும் மிறைக்கவிப் பாட்டுத்
தெரித்துப் பாடுவது சித்திரக் கவியே.

(திவா-12-50)

**வித்தாரகவி:** 'மும்மணிக் கோவையும், பன்மணி மாலையும், மறமும், கலிவெண்பாவும், மடலூர்ச்சியும் முதலாகிய நெடும்பாட்டும், கோவையும், பாசண்டமும், கூத்தும், விருத்தமும் கதை முதலாகிய செய்யுளும், இயலிசை நாடகங்களோடும் கலை நூல்களோடும் பொருந்தப்பாடும் பெருங்கவி.' வித்தார கவியினுல் செய்யப்படும் நூலை அகலக் கவியென உரைத்தலும் உண்டு.

மும்மணிக் கோவையும் பன்மணி மாலையும்
மறமும் கலிவெண் பாட்டும் மடலூர்ச்சியும்
பாசண்டத் துறையும் கிரீடையும் கூத்தும்
விருத்தக் கவிதையும் இயலிசை நாடகத்தொடு
விரித்துப் பாடுவது வித்தார கவியே.

(திவா-12-51)

**கள்ளக்கவி:** 'ஒருவன் பாட்டை மற்ருெருவனுக்குக் கொடுப்போன்.'

**சார்த்துகவி:** 'ஒருவன் கவியிசையில் வேருெரு செய்யுட் புணர்ப்போன்.'

**பிள்ளைக்கவி:** 'தனக்கென வொன்றின்றி முன்னோர் மொழிந்த சொன்னடை பொருணடை கண்டு கவிபாடுவோன்.'

வெள்ளைக்கவி : 'புன்மொழி புணர்த்துக் கவிபாடுவோன்.'

ஒருவன் பாவே ஒருவற் குரைத்து
வருமவன் சோரகவி மற்றொருவன்
பாவிசைக் கொப்ப மேவி யுரைப்போன்
சாத்துக் கவியெனப் பாத்தனர் புலவர்.

(இலக்-பாட். 562)

முன்னோர் பாடிய யாப்பினுட் கிடந்த
சின்மொழி கொண்டு செய்யுட் செய்யுந்
தன்மையன் பிள்ளைக் கவிபுன் மொழியாற்
கரைவோன் வெள்ளைக் கவியா மென்க.

(இலக்-பாட். 563)

**நல்லவை**

86. அறந்திறம் பாமல் அறிவோர் அறுபத்து நாற்கலையுந் [தம்
திறந்தெரிந் தோர்சினஞ் செற்றம்பொய் காமஞ்சிதைந்து சித்
மறந்தொரு காலும் ஒருபாற் படாதவர் மற்றுங்குற்றந்
துறந்துநின் றோர்குழு நல்லவை யாமென்று சொல்லுவரே.

தருமநெறி வழுவாமல், அறிவோர்கள் உரைத்த அறுபத்து நான்கு கலைகளின் தன்மையையும் உணர்ந்தவர், கோபம் உட்பகை பொய் காமம் என்றிவற்றைக் கெடுத்துச் சித்தத்தினால் மறந்துகூட ஒரு சமயத்திலும் ஒரு பக்கம் சேராது நடுநிலையில் நிற்பவர், ஏனைய குற்றங்கள் எல்லாவற்றினும் நீங்கிநிற்பவர்: இவர்கள் கூட்டத்தை நல்லவை என்று சொல்லுவர்.

நல்லவை, நிறையவை, தீயவை, குறையவை என்ற நான்கினும் முதன் மூன்று அவையைப்பற்றி வச்சணந்திமாலையும், முதல் இரண்டினைப் பற்றி இலக்கண விளக்கப் பாட்டியலும் கூறுகின்றன. யாப்பருங்கல விருத்தியில் நால்வகை அவையையும்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

அவையெனப் படுமவை அரில்தபத் தெரியின்
நல்லவை தீயவை குறையவை நிறையவையெனச்
சொல்லுப வென்ப தொல்லை யோரே.

(யாப்-விருத். பக். 514)

86. 10 சிதைக்குஞ் சித்தம்; 15 மற்றக்குற்றந்; 16 - 17 துறந்தவர் தாங்களும்.

அவற்றுள்,

நல்லவை யென்பது நாடுங் காலை
எத்துறை யானு மிருவரு மியம்பும்
அத்துறை வல்லோர் அறனொடு புணர்ந்தோர்
மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை யோர்ப்போர்
கற்றவர் கல்விக் கடாவிடை யறிவோர்
செற்றமும் சினமும் சேரா மனத்தோர்
முனிவொன் றில்லோர் மூர்க்க ரல்லோர்
இனிய முகத்தோர் இருந்துரை கேட்போர்
வேந்த னொருவற்குப் பாங்கு படினும்
தாந்தா மொருவர்கட் பாங்கு படாதோர்
அன்னோர் முன்னரக் கூறிய பொழுதில்
தொலையு மாயினுந் தொலைவெனப் படாது
வெல்லு மாயினு மிகச்சிறப் புடைத்தே.

(யாப்-விருத். பக் 514-515)

## நிறையவை

87. பாங்கா யொருதிறம் பற்றா தவர்பல் கலைப்பொருளும்
ஆங்கே யுணர்ந்தோர் அடக்க முடையார் அவரவர்கள்
தாங்கா தலித்து மொழிவன கேட்போர் தருமநெறி
நீங்காத நாவர் உறைந்தவக் கூட்டம் நிறையவையே.

ஒரு பக்கம் சேராது நடுவுநிலையில் நிற்பவர், பலவகையான கலைப்பொருள்களையும் உணர்ந்தவர், அடக்கம் உடையவர், ஒவ்வொருவரும் தாம்தாம் விரும்பிச் சொல்லுகின்றவற்றைக் கேட்பவர், தருமநெறியிலிருந்து நீங்காதவர், நாவன்மை படைத்தவர்: என்ற இத்தன்மையுடையார் இருக்கும் சபை நிறையவை எனப்படும்.

நிறையவை யென்பது நினையுங் காலை
எல்லாப் பொருளுந் தன்னகத் தடக்கி
எதிர்வரு மொழிகளை யெடுத்துரைப் பதுவே.

(யாப் - விருத். பக் 515)

---

87. 17 நாவல. 17-18 நால்வருரைத்தவை.

### தீயவை

88. சொற்ற வடிசொற்றும் பொய்ப்பவர் சொல்லுநற் சொல்லினை
குற்றமி தென்று குலாவி யுரைப்பவர் கூறும்பரி [யுங்
சுற்ற துணர்ந்தோ ரொருபாற் படுபவர் பொய்யுரையோர்
செற்றஞ் சினத்தொடு சேர்ந்தா ரிருப்பது தீயவையே.

தாம் கட்டுரைச் சுவைபடச் சொல்லிய சொற்களைத் தாமே பொய்ப்பவர், பிறர் சொல்லுகின்ற நல்ல சொற்களையும் குற்றம் என்றுரைப்பவர், சொல்லுகின்ற தன்மையினுல் நடந்தன வற்றை அறிந்தும் நெறிதவறி ஒரு பக்கம் சேர்பவர், கோபம் உட்பகை பொய் என்றிவற்ருெடு பொருந்தியவர்கள்: இவர்கள் இருக்கும் சபை தீயவையாகும்.

தீயவை யென்பது தெரியுங் காலை
சுலாவுஞ் சுண்டுந் தாமேற் கொண்டு
நிலவாப் பொருள்களைக் குலவி யெடுத்தாங்
குரைத்த வொருவற்காய்ச் செருவென மொழிந்து
சொல்லிய துணரா தல்லவை யுணர்ந்து
வாரம் படுவது தீயவை யாகும்.

(யாப் - விருத். பக் 515)

### குறையவை

89. பாடவம் பேசிப் பலகால் நகைசெய்து பாங்குரைத்து
நாடகங் காட்டியொர் நாயக மின்றி நவிலு நன்னூல்
ஏடகம் நோக்கா திகலே பெருக்கி அறத்தைவிட்டுக்
கூடகஞ் செய்துபொய் கூருவிருக்குங் குறையவையே.

தங்கள் வல்லமையைத் தாங்களே புகழ்ந்து சொல்லி, பிறரைக் குறித்துப் பலகாலும் நகைத்தலைச் செய்து, ஒரு பக்கமாகப் பேசி, காரியங்களை ஓர் நாடகம்போலக் காட்டி, ஒரு தலைமையின்றி, நல்ல நூற்பொருளைச் சொல்லும் ஏட்டினைப்பாராது. மாறுபாட்டை மிகுவித்து, தருமத்தைவிட்டு, தமக்குள்ளே சங்கேதச செயல்களைச் செய்து, பொய் முதலியவற்றைச் சொல்லியிருக்கும் கூட்டம் குறையவையாகும்.

---

88. 2-3படிசொற்றும் பெய்பவர்; 14-15 படுப்பவர் பொய்யுரைப்போர்.

குறையவை யென்பது கூறுங்காலை
நிறைவில் சொல்லே நினைந்தவை யெடுப்ப
அறையு மென்ப ஆணையி னிகந்தே.

(யாப் - விருத். பக். 515)

**வாதியியல்பு**

90. கதம்பட லின்றிக் கருதிய மேற்கோளும் ஏதுவுந்தம்
மதம்படக் கூறி யெடுத்துக்காட் டேற்றி அளவினெறி
விதண்டைவா தஞ்சற்ப மென்னு மிவற்றின்மே லோருரைத்த
மதங்க நெறிசெல்ல வல்லவர் வாதினில் வல்லவரே.

கோபம் கொள்ளுதலில்லாமல், பொருந்திய மேற்கோளும் ஏதுவும் தம்முடைய மதத்தையும் தோன்றக்கூறி, உதாரணமும்காட்டி, விதண்டை வாதம் சல்பம் என்னும் இவற்றினையும் மேற்கொண்டு, யானை செல்வதுபோன்ற ஒரு பெருமித நெறியிற் செல்லுதல் வல்லவர் வாதினில் வல்லவராவர். சற்பம் - ஜல்பம்.

வாதம், ஜல்பம், விதண்டை, சலம் என்ற நால்வகையினுள், உண்மை தெளிவிக்குங் கருத்தோடு நிகழ்வது வாதம்; தத்தம் கொள்கையை நிலையிடுங் கருத்தோடு நிகழ்வது ஜல்பம் ( - சல்பம் - சற்பம்); தமது கொள்கையை நிலையிடுங் கருத்தும் திறமையுமின்றி எவ்வகையானும் வெற்றி கொள்ளுங் கருத்தோடு நிகழ்வது விதண்டை; மறுகக்ஷியின் கருத்தை மாறுபடக்கொண்டு அதனை நிந்திப்பது சலம்.

வாதியின் இலக்கணத்தில் எடுத்துக்காட்டை ஒன்றாகத் திவாகரம் கொள்ளவில்லை. அது கூறும் இலக்கணத்தை 85-வது செய்யுளின் உரையிற் காண்க. யாப்பருங்கலவிருத்தியில் (பக். 514) இந்நூற்கருத்துக்கு ஒப்ப இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது.

வாதியாவான்: "மேற்கோளும் ஏதுவும் எடுத்துக் காட்டும் நாட்டி, அளவை செய்து, தன் கோள்நிறீஇப் பிறன்கோள் மறுப்பான் எனக் கொள்க. வரலாறு:—

'நிலைபேறில்லை சொல், செயப்படுதலால்; குடம்போல' என்பது நிரலே மேற்கோளும் ஏதுவும் எடுத்துக் காட்டும் ஆயின. 'நிலை

90. 5 எய்துவிக்கும்; 9 டேற்ற; 15 மேலொத்த; 17 நெறிசொல்ல.

பேறில்லை சொல்' என்பது மேற்கோள் ; 'செயப்படுதலால்' என்பது ஏது ; 'குடம் போல' என்பது எடுத்துக்காட்டு. 'நிலைபேறுடைத்துச் சொல், செயப்படாமையால் ; ஆகாயம் போலும்' என்பதும் ஓரளவை. அளவை யெனினும் பிரமாணம் எனினும் ஒக்கும். இனி வாதம் என்பது, சலவாதமும், விதண்டா வாதமு முதலாகப் பல வென்று எடுத்தோதுவாருமுளர்."

### தொலைவு

91. பொருளில கூறல் புனருத்தி தோன்றுதல் புன்சொற்களால்
மருள வழங்கல் வழுப்படச் சொல்லுதல் மற்றொன்றினைத்
தெருளவுரைத்தல் பயனில்லசொல்லுகைசெய்யின்தொன்னூல்
தெரிபவ ரெல்லாம் அவன்றொலைந் தானென்று செப்புவரே.

பொருளில்லாதனவாகிய சொற்களைச் சொல்லுதல், கூறியது கூறல், புன்சொற்களால் மயங்கக் கூறுதல், குற்றம்படச் சொல்லுதல், எடுத்த பொருளைவிட்டு வேறொன்றினைத் தெளியச் சொல்லுதல், பயனில்லனவற்றைச் சொல்லுதல்: என்றிவற்றைச் செய்வானாயின், தொன்னூல் உணர்ந்தவர் அவன் வாதத்தில் அழிந்தான் என்று சொல்லுவர். இது,

தொலைவெனப் படுபவை சொல்லுங் காலை
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
பொருளல கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாகிப்
பழித்த மொழியா னிழித்துக் கூறல்
தன்னா னொருபொருள் கருதிக் கூறல்
இன்னா வகையின் மனங்கோ ளின்மை
அன்னவை பிறவும் அவற்றினெறி யாகும் (பக்-515)

என்ற யாப்பருங்கல விருத்தி மேற்கோளாலும் தெரியவரும்.

### தோல்வி

92. கோணித் திருப்பினுங் கோபம் பெருகினுங் குற்றமென்று
நாணத் தருமறை நாவிற் பயிலினும் நாமநன்னூல்

ஆணைப் படியன்றி யல்லவை சொல்லினும் ஆங்கிருந்தோன்
காணப்பொய் கூறினுந் தோல்வியென் றேதுவர் கற்றவரே.

தான் நிறுவுதற்கு எடுத்த மேற்கோளைக் கைவிட்டிருந்தாலும், கோபத்தை மிகுவித்தாலும், பெருமை பொருந்திய நல்ல நூல்களின் ஆணைப்படி அல்லாமல் அவற்றிற்கு மாறானவற்றைச் சொன்னாலும், சபையில் எதிரியாக இருப்பவன் அறியப் பொய் சொன்னாலும், தோல்வியாம் என்று கற்றவர் சொல்லுவர்.

### செய்யுள் இயற்றுபவர்

93. இயலிசை நாடக மெய்யே யுணர்ந்தோர்கள் எப்பொருளும்
மயலற ஆய்ந்தோர் வருணங்கள் நான்கினும் வந்துதித்தோர்
உயர்நெறி நின்றோர் அவையையுற் றோர்ஒரு தெய்வத்தையே
முயல்தரு சித்தத்தர் செய்யுள்முன் பாட மொழிந்தனரே.

94. இருபதிற் றுண்டினில் ஏறி எழுபதில் ஏறலின்றி
வருபரு வத்தவர் வன்பிணி யில்லவர் மற்றுறுப்பில்
ஒருகுறை வற்றவர் நாற்கவி வல்லவர் ஓங்கறத்தின்
பரிவுடை யாளர்கள் செய்யுளின் பாடல் பகர்ந்தவரே.

இயல் இசை நாடகம் என்ற மூன்றினையும் ஐயந் திரிபற உணர்ந்தவர்கள், எவ்வகைப்பட்ட பொருளையும் மயக்கம் அற ஆராய்ந்தவர்கள், நான்கு வருணங்களுள் ஒன்றிற் பிறந்தவர்கள், உயர் நெறியில் நின்றவர்கள், சபையிலே பொருந்தியவர்கள், ஒரு தெய்வத்தையே தம் சிந்தையில் கொண்டவர்கள் என்றிவரைச் செய்யுள் பாடுதற்குரியவராக முன்னையோர் மொழிந்தனர். இருபது வயதிற்குமேற்பட்டு எழுபது வயதிற்கு மேற்படுதலின்றிப் பொருந்திய பருவத்தினை யுடையவர், கொடிய நோய் இல்லாதவர், அங்கவீனம் இல்லாதவர், ஆசு, மதுரம், சித்திரம் வித்தாரம் என்னப்பட்ட நால்வகைக் கவிகளினும் வல்லவர், சிறந்த தருமத்தில் விருப்பமுடையவர்கள்: இவர்கள் செய்யுளாகிய பாடலைக் கூறுதற்குரியராவர்.

பாடற்குரியவர் இலக்கணம் வெண்பாப் பாட்டியல் முதலியனவும் கூறுகிறது. சிதம்பரப் பாட்டியல் முப்பது வயதிற்கு மேற்பட்டவர் என்று கூறும்.

### பாடல் செய்யத் தகாதவர்

95. மூன்று தமிழின் முறையுண ராதவர் நாற்குலத்திற்
சான்றவ ரல்லவர் தாழ்ந்த உறுப்பினர் தாம்பிணியில்
தோன்றுந் துயரத்தர் தெய்வந்தொழாதவர் தூய்மையில்லோர்
ஆன்றவர் பாடிடில் ஆனந்த மாமென் றறைவர்களே.

மூன்று தமிழின் முறையை உணராதவர், நான்கு வருணத்திலும் பிறவாதவர், சான்றவரல்லாதவர், உறுப்புக்குறைவுடையவர், பிணியினால் மிகுகின்ற துன்பத்தினையுடையவர், தெய்வந் தொழாதவர், தூய்மையில்லாதவர் என்றித் தன்மையுடைய கல்வியாளர்கள் பாடின் ஆனந்தக் குற்றம் ஆகுமென்று கூறுவர்.

### பாட்டின் நலன்

96. இறப்பு நிகழ்வெதி ரானமுக் காலத்தில் எப்பொருளுந்
திறத்துணர்ந் தோர்சாவும் வாழ்வும் உரைக்குஞ்செந் நாப்புல
அறத்துறை நீங்கா அருளினர் நான்கு வருணத்தினும் [வர்
பிறப்பிழிந் தோரெனி னும்அவர் பாட்டிற் பெருநலனே.

இறப்பு, நிகழ்வு, எதிர்வென்னும் மூன்று காலத்திலும் உளவாகிய எவ்வகைப்பட்ட பொருள்களின் தன்மையையும் அறிந்தவர்கள், ஒருவனைச் சாவவும் வாழவும் உரைக்கும் ஆற்றல் வாய்ந்த செந்நாப்புலவர்கள், தருமநெறி நீங்கா அருளுடையவர்கள், பிறப்பால் நான்கு வருணத்தினும் இழிந்தவராயினும் இவர்கள் பாட்டினால் மிகுந்த நலன் உண்டாகும்.

### நூல் அரங்கேற்றும் நாள்

97. புகழ்ந்தநன் னாளிற் புகன்ற முகூர்த்தத்திற் புட்பொருந்தில்
திகழ்ந்தநன் மங்கலஞ் சொல்லுதல் யாவுந் தெரிந்துகொண்டு
பகர்ந்தவர் செய்யுளைப் பல்கலை வாணர் தமக்குணர்த்தி
இகழ்ந்தன நீக்கி முறையே யுரைத்தல் இயல்பென்பரே.

நூல்கள் புகழ்ந்த நல்ல நாளில், நல்ல முகூர்த்தத்தில், நற்சகுனம் பொருந்தினால், அப்பொழுது விளங்கிய நல்ல மங்கலமாகச்

---

**95.** 3-4 முறையறியாதவன்; 10 வெம்பிணியார்.

சொல்லுதல் முதலிய எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு சொன்ன ஒருவர், தம் செய்யுளைப் பல்கலை நிறைந்தவர் தமக்கு உணர்த்தி, அவர்கள் இகழ்ந்தனவற்றை நீக்கி, முறை பிறழாது சொல்லுதல் இயல்பு என்றுரைப்பர்.

வச்சணந்திமாலை 'அ, ஆ; இ, ஈ, ஐ; உ, ஊ, ஔ; எ, ஏ; ஒ, ஓ என்ற இவை முறையே உதயாதி அவ்வாறு நாழிகை யுதிக்கும். இவற்றுள் முதல் மூன்று நாழிகையும் உத்தமம்; பின் மூன்று நாழிகையுமாகா. இவ்வைந்து குற்றெழுத்துக்களை முதலிலுடைய பாக்களுக்குச் சொன்னகாலத்தின் முற்கூற்றில் அரங்கேற்றுக' என்று கூறுகின்றது. இலக்கணவிளக்கப் பாட்டியல் இதைப் பின்பற்றியுள்ளது. பன்னிரு பாட்டியலில் கன்னல் என்று கூறும் செய்தி இதனை ஒத்துள்ளது.

### நூல் அரங்கேற்றும் இடம்

98. நல்ல மெழுகி யிடம் விளக் கேற்றி நறுமலர் தூய்
நெல்லும் பரப்பி யதன்மேல் விதான நிறைகுடமும்
பல்வகை யான பிரப்புங் கொணர்ந்து பயனறிய
வல்லவர் கூடிக் கலைமங்கை பாதம் வணங்குவரே.

நன்றாக மெழுகி, அவ்விடத்தில் விளக்கேற்றி, வாசனை பொருந்திய மலர்களைத் தூவி, நெல்லைப்பரப்பி அதன்மேல் விதானம் கட்டி, நிறைகுடம் வைத்து, பலவகையான பிரப்பும் கொண்டுவந்து வைத்து, கலைமங்கையின் பாதத்தை வணங்குவர்.

அரங்கேற்றும் முறை, பரிசில் நல்கல், பரிசில் நல்காமைக் குற்றம் முதலிய செய்திகள் பன்னிருபாட்டியலில் இல்லை. வச்சணந்திமாலை முதலியவற்றில் இவை காணப்படுகின்றன.

### பரிசில் நல்காமைக் குற்றம்

99. பரவிய பாவலர் பாக்கொண் டிறைஞ்சிப் பரிசிற்றெழில்
வரிசையின் நல்கா தொழியின் ஆனந்தமாம் மற்றவர்கள்
உரைசெய்த எல்லாம் வசையுணர்ந்தோர்கள் விரும்ப லின்றித்
தரையினில் நிற்கும் பெரும்பழி யாமென்று சாற்றுவரே.

---

98. 2-3 இடமெழுகி விளக்; 11 கரைசெய்த.

ஒருவன் தன்னைப் புகழ்ந்த புலவர்களுடைய பாவை ஏற்று, அவரை வணங்கி, அவர் தமக்குப் பரிசில் கொடுக்கும் தொழிலை முறைமையாகச் செய்யாது ஒழிந்தால் குற்றமாம். அவர்கள் கூறிய எல்லாம் வசையாய் முடியும். உணர்ந்தவர்கள் அவனை விரும்புதலே யின்றி, இப்பூமியில் அவனுக்கு நிலைத்தபழி உண்டாகும்.

சிதம்பரப் பாட்டியல் இங்குக் கூறியதிலும் மிக்கதான குற்றம் வரும் என்று கூறும்.

உடம்படச் செய்யான் செய்யுள் பிறர்பாற் கூறி
 லுற்றதிரு அவனிடைப்போ யொதுங்கு மன்றித்
திடம்படச் செய்யுள் வரைந்து செம்பூச் சூட்டித்
 தெருவு மயானம் புற்றுக் காளி கோட்டத்
திடந்தனி லங்கவனை நினைந்து சுட்டால்
 ஈராறு திங்கள்தனில் இறுதியாவன்
தொடர்ந்து செயா துளநொந்தாற் சுற்றத்தோடும்
 தொலைவ னிஃதுண்மை யகத்தியன்றன் சொல்லே.

(சிதம். மரபி 19)

### பரிசில் நல்கல்

100. ஆங்குத் தலைவன் பலபடி யானும் அலங்கரித்துப்
பாங்கிற் பொருந்தஅப் பாட்டியற் பாட்டினை நன்குணர்ந்து
பூங்கற் பகம்போல் நவமணி யாடைகள் பொன்பொழிந்து
வாங்கிக் கவிமுறை வந்தனை செய்தல் மரபென்பரே.

பாட்டிற்குரிய தலைவன் பலவகையாலும் சபையை அலங்கரித்துக் கவிஞன் பக்கத்தில் பொருந்த இருந்து, அப்பாட்டின் தன்மையை நன்ருக உணர்ந்து, கற்பகத் தருப்போல நவமணிகளும், ஆடைகளும், பொன்னும் பொழிந்து, கவிஞன் பாடிய பாடலைக் கையிற் பெற்று அவனை வணங்குதல் முறை என்று கூறுவர்.

### பொருளானந்தம்

101. இறப்ப வுயர இறப்ப விழிய இசைக்குஞ் செய்யுட்
டிறத்தன யாவையுந் தீதென் றுரைப்பர்செய் யாதொழிந்த
புறத்துள வாயினுந் தொன்னூன் முறைமை பிறழுப்படும்
நிறத்திற் குவளையுங் காவியும் போன்ற நெடுங்கண்ணியே.

மிகுதியாக உயர்த்தியும் மிகுதியாக இழித்தும் சொல்லும் செய்யுள் தீமையுடைய தென்பர். இதனைப் பொருளானந்தம் என்று கூறுவர். இது யாப்பருங்கல விருத்தியுரையில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அங்குக் கூறியன பின் வருமாறு:

வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி யிரிந்தாற்போ லெவ்வழியும்—வள்ளற்கு
மாலார் கடலன்ன மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து

இதனுட் புலியோடு உவமிக்கப்படுகின்ற தலைமகனாகிய வீரனோடு நாயை உவமித்தமையால் இறப்ப இழிந்த ஆனந்த வுவமை.

இந்திரனே போலு மிளஞ்சாத்தன் சாத்தற்கு
மந்தரமே போன்றிலங்கு மல்லாகம்—மந்தரத்துத்
தாழருவி போன்றுளது தார்மாலை யம்மாலை
யேழுலகு நாறு மிணர்

இதனுட் கீழ்மகனாகிய சாத்தனைக் குலமன்னரை உவமிக்கற்பாலனவற்றோடு அவனுக்குப் பரிக்கலாமை யுவமித்தலின் இறப்பவுயர்ந்த ஆனந்த வுவமை.

### ஆக்கியோன்

102. ஈட்டிய எண்ணெண் கலையோ டியலிசை நாடகமும்
காட்டிய போதக் குறுமுனி யாதிக் கலைஞர்கண்ட
பாட்டிய லானவை யெல்லாந் தொகுத்தான் பயன்பெறவே
நாட்டிய வேதத் தவனவ நாட்டு நவ நீதனே.

தொக்க அறுபத்துநான்கு கலைகளோடு இயல், இசை, நாடகம் என்றிவற்றைக் காட்டிய குறுமுனி முதலிய கலைஞர் கண்ட பாட்டியல் முதலானவை எல்லாவற்றையும் நாட்டிய வேதமாகிய பரத சாஸ்திரத்தை நன்குணர்ந்தவன், நவநாட்டு நவநீதன் என்பவன் பயன்படத் தொகுத்துரைத்தான்.

நவநீதப் பாட்டியல் முற்றும்.

---

**102.** 14 தொகுத்துப். 19-20 ²தடனென்பவே.

# பிற்சேர்வு I

## மிகைச் செய்யுட்கள்

### அரசன் விருத்தம்

1. அரசன் கலித்துறை யீரைந்து முப்பான் விருத்தமலே
பரவையு நாடு நகரஞ் சிறப்பாய் விருத்த முப்பான்
உரைசெய் கலித்தா ழிசையும்வாண் மங்கலந் தோண்மங்கலம்
புரவலர் யாவர்க்கு மாமென் றுரைப்பர் புலவர்களே.

### பறந்தலைச் சிறப்புப்பாட்டு

2. போர்க்களம் பட்ட மனிதர் புழைக்கைப் புரவியுடற்
கூக்குரல் ஞாளி குறுநரி பேய்குற ளுங்கழுகுங்
காக்கை பருந்துடன் தின்று களித்துக் கழுதுகுறள்
ஆக்க முடன்பாடி யாடல் பறந்தலைப் பாட்டதுவே.

### ஐந்திணைச் செய்யுள், வருக்கக் கோவை

3. கூடல் முதலைந் துரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி
யோடைந் திணையினைக் கூறுப ஐந்திணைச் செய்யுளென்பர்
பாடு மொழிக்கு முதலா மெழுத்தம் முறைபிறழாக்
கோடல்வரக் காரிகை வருக்கக் கோவை கோல்வளையே.

### அனுராகமாலை, வசந்தமாலை

4. கனவிற் றலைவ னொருத்தியைக் கண்டுகேட் டுண்டுயிர்த்தும்
இனிமை யுறச்சேர்ந் ததைத்தன் னுயிர்ப்பாங்க னுக்குரைத்த
தெனநே ரிசைக்கலி வெண்பா அனுராக மாலை வசந்
தனைவரு ணித்தல் வசந்தமாலை புகலல் தையலே.

---

1-வது செய்யுள் நூலுள்வரும் 47-வது செய்யுளின் பின்னும், 2 முதல் 26-வரையுள்ள செய்யுட்கள் நூலுள் 58-வது செய்யுளின் பின்னும், 27-வது செய்யுள் நூலுள் 65-வது செய்யுளின் பின்னும் தமிழ்ச்சங்கத்து எட்டுப்பிரதியில் காணப்படுகின்றன.

2, 4 புகழைப்; 17-18 முடன்படித்தாடப்.

### மணிமாலை, வருக்கமாலை

5. இருபது வெண்பா கலித்துறை நாற்பான் விரவவேயெப்
பொருள்மேல் வரினும் மணிமாலை பப்பத்தோர் சந்தமதாய்
வரும்நூறு செய்யுள் பலசந்த மாலை மொழிமுதலாம்
வருக்க வெழுத்திற்கோர் தூக்கு வருக்கமா லைப்பெயரே.

### காப்புமாலை, வேனில்மாலை, உற்பவமாலை, நூற்றந்தாதி

6. மூன்றைந்தேழ் பாத் தெய்வம் காக் காப்புமாலை வேனிற்புகலல்
ஆன்றல் வேனில்மாலை மால்பிறப்புப் பத்து மன்விருத்தந்
தான்றரல் உற்பவ மாலை கலித்துறை நூறுவெண்பாத்
தோன்றுத லாகுநூற் றந்தாதி யென்பர் சுரிகுழலே.

### மெய்க்கீர்த்திமாலை, பதிற்றைந்தாதி, இருபாவிருபஃது

7. சொற்சீ ரடிக்கட் டுரைப்பாக் குலமுறைக் கீர்த்திபுக
லற்சீர்மெய்க் கீர்த்திமாலை பத்து வெண்பாக் கலித்துறைபான்
தற்செய லாம்பதிற் றைந்தாதி முன்னிரு பாவந்தாதி
யிற்சேர்ந் திணைந்திரு பஃதா மிருபா விருபஃதே.

### மும்மணிமாலை, தாரகைமாலை, தானைமாலை

8. முதற்பாக் கலித்துறை மன்பா வந்தாதித் தொடைமுப்பதாம்
அதற்பெயர் மும்மணி மாலை வடமீன் மகளியற்கைக்
குதவுமேற் றுரகை மாலை தூசிப்படை யாசிரிய
விதிதவருத் தானை மாலையென் றுரும் வெளியிடையே.

### நயனப்பத்து, பயோதரப்பத்து, மங்கலவள்ளை, பதிகம், சதகம்

9. நயனம் பயோதரம் பப்பான் நவிலலந் நாமமினத்
துயர்மினை வெண்பா வகுப்பொன்ப தால்மங்கல வள்ளையாம்
இயையும் ஒருபொரு ளிற்பத்துச் செய்யு ளிசைபதிகம்
சயமா மிகுபொரு ளொன்றிற்பா நூறு சதகமதே.

### ஊர் நேரிசை, பெயர் நேரிசை, ஊரின்னிசை, பெயரின்னிசை, நாற்பது, உலாமடல், பவனிக்காதல்

10. ஊர்பெயர் சாரநே ரின்னிசை வெண்பாக்கொண் ணைநேரைம்
சார்பொருட் காலத்தின் முற்பா நாற்பஃ,

கூர்வ னெனக்கலி வெண்பா வுலாமடல் செயனமீறச்
சீரைப் பிறர்க்குரைத் தாற்பவனிக் காதல் தேமொழியே.

**வெட்சிமாலை, கரந்தைமாலை, வஞ்சிமாலை, காஞ்சிமாலை,**
**நொச்சிமாலை, உழிஞைமாலை, தும்பைமாலை, வாகைமாலை**

11. நிரைகவர் மீட்டல் செலலூன்றல் காவலை நேர்தல்வென்றி
மருவிய வெட்சி கரந்தையும் வஞ்சியும் காஞ்சி நொச்சி
உரையுழிஞை தும்பை வாகையும் அஃதவை மாலையென்பர்
செருகுபூ வேய்த லகவலெண் மூன்று முதலடைவே.

**வரலாற்று வஞ்சி, தொகைநிலை**

12. குலமுறை கீர்த்தி பிறப்புமேம் பாட்டுச் சிறப்பைவஞ்சிச்
சொலல்வர லாற்று வஞ்சிக்குறள் நெடிலடிச் செய்யுளால்
நிலையிற் றொகுத்துங் குறுந்தொகை முன்பி னெடுந்தொகையாய்க்
கலியிற் றொகுத்துக் கலித்தொகை போலாந் தொகைநிலையே.

**வாதோரண மஞ்சரி, பொன்னூசல்**

13. அடுமத யானை வயப்படுத் திப்பகை யானையெதிர்த்
திடல்பற்றல் வஞ்சி யால்வரவா தோரண மஞ்சரியாம்
தொடர்மன் விருத்தம் கலித்தாழிசை சுற்றத் தோடுபொலிந்
திடுகவென் றுடீரா டாமோஊ சல்பொலன் னூசலதே.

**அளவியற்றுண்டகம், அளவழித்தாண்டகம், கையறுநிலை**

14. இருபத் தெழுவெழுத் தின்னடி யாகுங் குருவிலகு
மருவி லளவியல் ஒவ்வா தளவழித் தாண்டகமாம்
பிரிவுழி யார்கட் பொருளுரை மாயாவா யம்விறலி
யருந்தனி நோயுழை மிக்கனவாங்கை யறுநிலையே.

**ஒருபாவொருபஃது, விளக்குநிலை**

15. அகவல் முதற்பாக் கலித்துறை பாவெனன் றந்தாதிவரத்
தகுமொரு பாவொரு பஃதாகும் வேல்வேற் றலைவிலங்கா
மிகும்வழி பொற்கோ லொடுவிளக் கொன்றுபட் டோங்குமா
குகவாகக் கூறல் விளக்கு நிலையாங் குயில்மொழியே. [ரேங்

### கண்படைநிலை, கடைநிலை

16. மன்போ லவரவை வைக மருத்துவர் மந்திரியும்
அன்பா லவர்கண் டுயில்கோடல் சொற் கண்படைநிலையாம்
மென்பா லவர்சேண் வரப்படர் தீர்வா மவைசெய்பவர்க்
கென்வா ரலவற் கிசைக்கடைக் கூறல் கடைநிலையே.

### எண்செய்யுள், துயிலெடைநிலை, புறநிலை

17. பெயரூர்ப் பதுமுத லாயிர மெண்பெய ரெண்செய்யுளாம்
வயமனர் பாசறை முற்றித் துயின்றூர் புகழைச்சூதர்
துயிலெடுப் பித்த லறை [யுந்]துயிலெடை யாங்கினதை
யயலும் அரணு வழிமிகச் சொல்லல் புறநிலையே.

### கடிகை வெண்பா, இயன்மொழி வாழ்த்து

18. கடவு ளரசர்க் கணிகழ் கருமங் கடிகையினின்
முடியுமுப் பானிரு நேரிசை வெண்பாக் கடிகைவெண்பா
குடியிற் பிறந்தவர்க் கிக்குண மாகு மவையுடையாய்
முடிவிலை முன்னு ரெனவா ழியன்மொழி வாழ்த்ததுவே.

### எழுகூற்றிருக்கை, பெருமங்கலம்

19. ஏழறை யாய்க்குறு மக்கள்முன் னின்று புகும்விளையாட்
டேழ்வழு வாவொன்று முதலே மீறெழு கூற்றிருக்கை
ஆழ்சிறை வீட்டல் முதற்கா ரணமான நாள்நிகழ
வாழ்வெள் ளணியைச் சொலல்பெரு மங்கல மான்விழியே.

### குறவஞ்சி

20. தலைவன் பவனி வரல் நங்கை காம முறல்மோகினி
வரலுலாப் போந்தோ [னவ]னைத் தெரியமா லாய்மதித்தென்
றலுமுத லியவுவா லம்பனம் பாங்கி வினவல்லுரைத்
தலுமவ னைப்பழித் தல்புகழ்தல் தூது வேண்டலுமே.

21. அவனடை யாளங் குறத்தி வரல்கல் வளம்வினச்சொல்
உவனூர் கிளைவளஞ் சொற்குறி சொன்னமை கூறல்வினு
அவடேப் பரவல் குறிநல்வரவு பரிசி லீகு
றவன்வரல் புள்வரல் கண்ணிகுத் தற்புட் படுத்தலுமே.

---

18. 16 முடிவில. 19. 12 மீட்டல். 21. 6 உவனூர்.

22. குறத்தியைக் காமுற்றுத் தேடல் குறவனற் பாங்கனொடு
குறத்தி யடையாளங் கூறல் குறவன் குறத்தி காண்டல்
குறவ னணிமுதற் கண்டை யுறவினு வல்லுரைத்தல்
குறத்தி யிவையுறுப் பெஞ்சாப்பா வான்குற வஞ்சியதே.

## உழத்திப் பாட்டு

23. கடவுள் வணக்க முழத்திய ருங்குடும்பன் வரலொன்
றடைமுறை நாடு வளங்குயிற் கூமழைக் காங்குறியோர்ப்
படுமா றுவரற் சிறப்புட் டுறைத் தலைவன் வரற்கூப்
படுமவ னன்னு ளூரப்பல் வெளியாம் பண்ணைச்செயலே.

24. வினைச்சொல லாயர் வருவிக்க வரல் தகைமுதலாள்
தனதுரை கேட்டுக் குடும்பன் கிடையிருந் தானெனவந்
தனைற்றொழு மாட்டப் புலம்பல்முற் பள்ளிகூழ் கொண்டுவரல்
சொனவள் மன்னித்தற் கேட்க வேண்டற்கு மறுத்திடலே.

25. சூள வனைமீட் பவனைப் பணிவித் துழவருழக்
காளைவெருட் பளைபாயப் புலம்ப லெழுந்துவித்தல்
ஆளத் தலைவற் குணர்த்தல் நடல்வினை செப்பஞ்செய்நெல்
நீளவளத்தல் முதற்பள்ளி கூவேசல் மூட்டவையே.

26. இவ்வமை யங்களிற் பாட்டுத் தலைவன் பெருமையாங்காங்
கொவ்விய சிந்து விருத்தம் விரவி வரத்தொடர்பு
செவ்விதிற் பாடு மதுவுழத் திப்பாட்டு பள்ளுமென்பர்
நவ்வி யெனக்கண் மடவீர் பிற விதம் நாட்டுவரே.

## சாதகம்

27. யுகவருடந் திதி வார முடுயோக [மா]ங்கரணந்
தகவது வோரை கிரக மிவையொன் பதினிலையால்
திகழ்தரு மெண்ணை யுணர்வோர் தலைவற் குறுவதுரைப்
பகனியிற் ருழ்குழல் சாதக மென்பர[ப் பாத்]தனையே.

---

24. 20 மறுத்தலே. 25. 11 வாளைத்; 13 குறுத்தல்.

# பிற்சேர்வு II

## * பிரபந்த அகராதியும் இலக்கணமும்

1. **அகப்பொருட் கோவை :** இருவகைப்பட்ட முதற்பொருளும், பதினான்கு வகைப்பட்ட கருப்பொருளும், பத்துவகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலுற்ற அன்புடைக் காமப்பகுதியவாம் களவொழுக்கத்தினையும் கற்பொழுக்கத்தினையுங் கூறுதலே யெல்லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றால் திணைமுதலாகத் துறையீறாகக் கூறப்பட்ட பன்னிரண்டு அகப்பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப் பாடுவது. இது வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணம் இவற்றானும் வழங்கப்படும்.

2. **அங்கமாலை :** ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் மிக்கென எடுத்துக் கூறும் அவயவங்களை வெண்பாவாலாயினும், வெளிவிருத்தத்தாலாயினும் பாதாதிகேசம் கேசாதிபாதம் முறை பிறழாது தொடர்வுறப் பாடுவது.

3. **அட்டமங்கலம் :** கடவுளைப்பாடி அக்கடவுள் காக்க என ஆசிரிய விருத்தம் எட்டில் அந்தாதித்துக் கூறுவது.

4. **அநுராகமாலை :** தலைவன் கனவின்கண் ஒருத்தியைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து இனிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப் பாங்கற்கு உரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

5. **அரசன் விருத்தம் :** பத்துக் கலித்துறையும் முப்பது விருத்தமும் கலித்தாழிசையுமாக மலை, கடல், நாட்டு வருணனையும், நிலவருணனையும், வாண்மங்கலமும், தோண்மங்கலமும் பாடி முடிப்பது. இது முடிபுனைந்த வேந்தர்க்கு ஆம்.

6. **அலங்கார பஞ்சகம் :** வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், சந்தவிருத்தம் இவ்வகையே மாறிமாறி நூறு செய்யுள் அந்தாதித்துப் பாடுவது.

7. **ஆற்றுப்படை :** அகவற்பாவால் விறலி, பாணர், கூத்தர், பொருநர் இந்நால்வருள் ஒருவர் பரிசிற்குப் போவாரைப் பரிசுபெற்று வருவார் ஆற்றிடைக்கண்டு தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கொற்றமும் சொல்வது.

---

* இவை சதுரகராதியினின்றும் எடுக்கப்பட்டவை.

8. **இணைமணிமாலை :** வெண்பாவும் அகவலும், வெண்பாவும் கலித்துறையும் ஆக இரண்டிரண்டாக இணைத்து, வெண்பாவகவல் இணைமணிமாலை, வெண்பாக்கலித்துறை இணைமணிமாலை என நூறுநூறு அந்தாதித்தொடை நான்காலும் பாடுவது.

9. **இயன்மொழி வாழ்த்து :** இக்குடிப்பிறந்தோர்க்கெல்லாம் இக்குணம் இயல்பு என்றும், அவற்றை நீயும் இயல்பாக உடையை என்றும், இன்னோர் போல நீயும் இயல்பாக ஈ என்றும் உயர்ந்தோர் அவனை வாழ்த்துவதாகக் கூறுவது.

10. **இரட்டை மணிமாலை :** முறையானே வெண்பாவும் கலித்துறையும் இருபஃது அந்தாதித் தொடையான் வருவது. நேரிசை வெண்பாப் பத்தும் ஆசிரியவிருத்தம் பத்தும் அந்தாதித் தொடையாற் பாடுவதுமாம்.

11. **இருபாவிருபஃது :** பத்து வெண்பாவும் பத்து அகவலும் அந்தாதித் தொடையான் இருபது இணைந்து வருவது.

12. **உலா :** இளமைப் பருவமுற்ற தலைமகனைக் குலம், குடிப்பிறப்பு, மங்கலம், பரம்பரை இவற்றால் இன்னான் என்பது தோன்றத் தலைமையாய மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன் பவனிவரப் பேதை முதலிய எழு பருவப் பெண்களும் கண்டு தொழ உலாவந்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

13. **உலாமடல் :** கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவி யின்பம் நுகர்ந்தோன் விழித்தபின் அவள் பொருட்டு மடலூர்வேன் என்பதைக் கலிவெண்பாவான் முற்றுவிப்பது.

14. **உழத்திப் பாட்டு :** கடவுள் வணக்கம், முறையே மூத்தபள்ளி இளையபள்ளி குடும்பன் வரவோடு அவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டுவளன், குயிற்கூக் கேட்டல், மழை வேண்டிக் கடவுட் பரவல், மழைக்குறியோர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்புக் காண்டல், இவற்றிற்கிடையிடை அகப்பொருட் டுறையுங்கூறிப் பண்ணைத் தலைவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையாளை அவன் உரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச்செயல் வினவல், அவன் அது கூறல், ஆயரை வருவித்தல், அவர் வரல், அவர் பெருமை கூறல், மூத்தபள்ளி முறையீடு, குடும்பன் கிடையிருந்தான் போலவரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி அடி

சிற் கொடுவரல், அவன் அவளோடு கூறல், அவன் அவளை மன்னித்தல் கேட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் சூளுறல், அவள் அவனை மீட்க வேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல், விதை முதலிய வளம் கூறல், உழவருழல், காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவன் எழுந்து வித்தல், அதைப் பண்ணைத் தலைவற்கு அறிவித்தல், நாறுநடல், விளைந்தபின் செப்பம் செயல், நெல் அளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க் கொருவர் ஏசல் என இவ்வுறுப்புக்கள் உறப் பாட்டுடைத்தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவிவர இவற்றூற் பாடுவது.

15. **உழிஞை மாலை :** மாற்றூரது ஊர்ப்புறம் சூழ உழிஞைப்பூ மாலை சூடிப் படைவளைப்பதைக் கூறுவது.

16. **உற்பவ மாலை :** திருமால் பிறப்புப் பத்தினையும் ஆசிரிய விருத்தத்தாற் கூறுவது.

17. **ஊசல் :** ஆசிரிய விருத்தத்தானுதல், கலித்தாழிசையானுதல் சுற்றத்தோடும் பொலிவதாக ஆடீரூசல், ஆடாமோவூசல் என்று இறக் கூறுவது.

18. **ஊர் நேரிசை :** பாட்டுடைத் தலைவன் ஊரினைச்சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது.

19. **ஊர் வெண்பா :** வெண்பாவால் ஊரைச் சிறப்பித்துப் பத்துச் செய்யுள் கூறுவது.

20. **ஊரின்னிசை :** பாட்டுடைத் தலைவன் ஊரினைச்சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது.

21. **எண் செய்யுள் :** பாட்டுடைத் தலைவனது ஊரினையும், பெயரினையும் பத்து முதல் ஆயிர மளவும் பாடி எண்ணுற் பெயர் பெறுவது.

22. **எழுகூற்றிருக்கை :** எழறையாக்கிக் குறுமக்கள் முன்னின்றும், புக்கும், போந்தும், விளையாடும் பெற்றியால் வழுவாமையால் ஒன்று முதலாக எழிறுதியாக முறையானே பாடுவது.

23. **ஐந்திணைச் செய்யுள்:** புணர்தல் முதலிய ஐந்து உரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய ஐந்திணையினையுங் கூறுவது.

24. **ஒருபா வொருபஃது:** அகவலும், வெண்பாவும், கலித்துறையும் ஆய இவற்றில் ஒன்றூல் அந்தாதித் தொடையால் பத்துப்பாடுவது.

25. **ஒலியலந்தாதி:** பதினாறு கலை யோரடியாகவைத்து இங்ஙனம் நாலடிக்கு அறுபத்துநாலு கலை வகுத்துப் பல சந்தமாக வண்ணமுங் கலையைப் புந் தவறாமல் அந்தாதித்து முப்பது செய்யுள் பாடுவது. சிறுபான்மை எட்டுக் கலையானும் வரப்பெறும். அன்றியும் வெண்பா, அகவல், கலித்துறை யாகிய இம்மூன்றையும் பப்பத்தாக அந்தாதித்துப் பாடுவதுமாம்.

26. **கடிகை வெண்பா:** தேவரிடத்தும் அரசரிடத்தும் நிகழும் காரியம் கடிகையளவிற் றோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவால் கூறுவது.

27. **கடைநிலை:** சான்றோர் சேணிடைவருதலாற் பிறந்த வருத்தம் தீர வாயில் காக்கின்றவனுக்கு என்வரவினைத் தலைவற்கிசையெனக் கடைக் கண் நின்று கூறுவது.

28. **கண்படை நிலை:** அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக் கண் நெடிது வைகியவழி மருத்துவரும் அமைச்சரும் முதலியோர் அவர்க்குக் கண் துயில் கோடலைக் கருதிக் கூறுவது.

29. **கலம்பகம்:** ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையும் முதற் கவி உறுப்பாக முற்கூறி, புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு,தழை, ஊசல் என்னும் இப்பதினெட்டு உறுப்புக்களும் இயைய மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத் தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னும் இவற்றால் இடையே வெண்பா கலித்துறை விரவி, அந்தாதித் தொடையால் முற்றுறக் கூறுங்கால் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கு ஐம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது.

30. **காஞ்சிமாலை:** மாற்றார் ஊர்ப்புறத்துக் காஞ்சிப்பூமாலை சூடி ஊன்றலைக் கூறுவது.

31. **காப்பியம்:** அறம் பொருள், இன்பம், வீடு எனும் நான்கனுள் ஒன்றும் பலவுங் குறைந்து ஏனைய உறுப்புக்கள் மேற் (பெருங்காப்பியத்துள்) கூறியவாறு இயல்வது.

32. **காப்புமாலை:** தெய்வம் காத்தலாக மூன்று செய்யுளானும், ஐந்து செய்யுளானும், ஏழு செய்யுளானும் பாடுவது.

33. **குழமகன்** : கலிவெண்பால் மாதர்கள்தம் கையிற்கண்ட இளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது.

34. **குறத்திப் பாட்டு** : தலைவன் பவனிவரவு, மகளிர் காமுறுதல், மோகினி வரவு, உலாப்போந்த தலைவனைக் கண்டு மயங்கல், திங்கள்; தென்றல் முதலிய உவாலம்பனம், பாங்கி உற்றது என்னெனவினவல், தலைவி பாங்கியோடு உற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தூது வேண்டல், தலைவி பாங்கியோடு தலைவன் அடையாளம் கூறல், குறத்தி வரவு, தலைவி குறத்தியை மலைவளம் முதலிய வினவல், குறத்தி மலைவளம் நாட்டுவளம் முதலிய கூறல், தலைவன் தலவளம் கிளைவளம் முதலிய கூறல், குறி சொல்லி வந்தமை கூறல், தலைவி குறிவினவல், குறத்தி தெய்வம் பராவல், குறி தேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசில் உதவி விடுத்தல், குறவன் வரவு, புள் வரவு கூறல், கண்ணி குத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்கனொடு குறத்தி அடையாளம் கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவன் அணி முதலிய கண்டு ஐயுற்று வினவலும் ஆண்டாண்டுக் குறத்தி விடை கூறலுமாகக் கூறல், பெரும்பான்மையும் இவ்வகை உறுப்புக்களால், அகவல், வெண்பா, தரவுக்கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம் இச்செய்யுள் இடைக்கிடைக் கூறிச் சிந்து முதலிய நாடகத் தமிழாற் பாடுவது.

35. **கேசாதி பாதம்** : கலி வெண்பாவால் முடிமுதல் அடியளவும் கூறுவது.

36. **கைக்கிளை** : ஒருதலைக் காமத்தினை ஐந்து விருத்தத்தால் கூறுவது. அன்றி, வெண்பா முப்பத்திரண்டு செய்யுளால் கூறுவதும் ஆம்.

37. **கையறுநிலை** : கணவனொடு மனைவி கழிந்துழி அவர்கட்பட்ட அழிவுப்பொருளெல்லாம் பிறர்க்கு அறிவுறுத்தித் தாம் இறந்து படாது ஒழிந்த ஆயத்தாரும், பரிசில் பெறும் விறலியரும் தனிப்படருழந்த செயலறுநிலையைக் கூறுவது.

38. **சதகம்** : அகப்பொருள் ஒன்றன்மேலாதல், புறப்பொருள் ஒன்றன்மேலாதல் கற்பித்து நூறு செய்யுள் கூறுவது.

39. **சாதகம்** : திதிநிலை, வாரநிலை, நாண்மீன் நிலை, யோகநிலை, கரணநிலை, ஓரை நிலை, கிரகநிலை இவ்வேழ்வகை உறுப்புக்கள் நிலையையும் சோதிட

நூலால் நன்குணர்ந்து அவற்றை அமைந்து அவற்றால் தலைவற்கு உறுவன கூறுவது. மற்றும் யுகாதி யாண்டு முதலியனவும் கொள்க.

40. **சின்னப்பூ :** நேரிசை வெண்பாவால் அரசனது சின்னமாகிய தசாங்கத்தினைச் சிறப்பித்து விரித்து நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னும் எண்படக் கூறுவது.

41. **செருக்களவஞ்சி :** போர்க்களத்திலே அட்ட மனிதருடலையும் யானை குதிரை உடலையும் நாயும் பேயும் பிசாசமும் கழுகும் பருந்தும் காகமும் தின்று களித்து ஆரவாரமாய் இருக்கப் பூதமும் பேயும் பாடியாட இங்ஙனம் இருந்த சிறப்புப் பாடுவது. இதையே பறந்தலைச் சிறப்புப் பாட்டும் என்ப.

42. **செவியறிவுறூஉ :** பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண் அவிதல் கடன் என அவையடக்கியற் பொருளுற வெண்பா முதலும் ஆசிரிய இறுதியுமாகக் கூறுவது.

43. **தசாங்கத்தயல் :** அரசன் தசாங்கத்தினை ஆசிரிய விருத்தம் பத்தினால் பாடுவது.

44. **தசாங்கப்பத்து :** நேரிசை வெண்பாவால் அரசன் படைத்த தசாங்கத்தினைப் பத்துச் செய்யுளால் கூறுவது.

45. **தண்டகமாலை :** வெண்பாவால் முந்நூறு செய்யுள் கூறுவது. இது வெண்புணர்ச்சிமாலை எனவும் படும்.

46. **தாண்டகம் :** இருபத்தேழு எழுத்து முதலாக உயர்ந்த எழுத்தடியினவாய் எழுத்தும் குருவும் இலகுவும் ஒத்துவந்தன அளவியற்றாண்டகம் எனவும், எழுத்தொவ்வாதும் எழுத்தலகொவ்வாதும் வந்தன அளவழித்தாண்டகம் எனவும் படும்.

47. **தாரகைமாலை :** அருந்ததிக் கற்பின் மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களை வகுப்பாற் கூறுவது. தூசிப்படையின் அணியைப் புகழ்ந்த வகுப்பு என்பாரும் உளர்.

48. **நாளைமாலை :** அகவலோசையிற் பிறழாது ஆசிரியப்பாவான் முன்னர் எடுத்துச் செல்லும் கொடிப்படையைக் கூறுவது.

49. **தும்பைமாலை :** மாற்றாரோடு தும்பைப் பூமாலைசூடிப் பொருதுவதைக் கூறுவது.

50. **துயிலெடைநிலை :** தன்வலியாற் பாசறைக்கண் ஒரு மனக்கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் துயிலெடுப்புதலாகப் பாடுவது.

51. **தூது :** ஆண்பாலும், பெண்பாலும் அவரவர் காதல் பாணன் முதலிய உயர்திணையோடும், கிள்ளை முதலிய அஃறிணையோடும் சொல்லித் தூது போய்வா எனக் கலிவெண்பாவால் கூறுவது.

52. **தொகைநிலைச்செய்யுள் :** நெடிலடிச் செய்யுளால் தொகுத்தது நெடுந்தொகையும், குறளடிச் செய்யுளால் தொகுத்தது குறுந்தொகையும், கலிப்பாவால் தொகுத்தது கலித்தொகையும் போல்வன.

53. **நயனப்பத்து :** கண்ணினைப் பத்துச் செய்யுளால் கூறுவது.

54. **நவமணிமாலை :** வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக ஒன்பது செய்யுள் அந்தாதித்துப் பாடுவது.

55. **நாமமாலை :** அகவலடியும் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவால் ஆண்மகனைப் புகழ்ந்து பாடுவது.

56. **நாற்பது :** காலமும், இடமும், பொருளும் ஆகிய இவற்றுள் ஒன்றனை நாற்பது வெண்பாவால் கூறுவது.

57. **நான்மணிமாலை :** வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலும் அந்தாதித்தொடையாக நாற்பது பாடுவது.

58. **நூற்றந்தாதி :** நூறு வெண்பாவினாலேனும், நூறு கலித்துறையினாலேனும் அந்தாதித் தொடையால் கூறுவது.

59. **நொச்சிமாலை :** புறத்தூன்றிய மாற்றார்க்கு ஓடலின்றி நொச்சிப் பூமாலைசூடித் தன்மதில் காக்கும் திறம் கூறுவது.

60. **பதிகம் :** ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுளால் கூறுவது.

61. **பதிற்றந்தாதி :** பத்துவெண்பா, பத்துக்கலித்துறை, பொருட்டன்மை தோன்ற அந்தாதித்துப் பாடுவது.

62. **பயோதரப்பத்து :** முலையினைப் பத்துச் செய்யுளால் கூறுவது.

63. **பரணி :** போர்முகத்து ஆயிரம் களிற்றியானையைக் கொன்ற வீரனைத் தலைமகனைக் கொண்டு கடவுள் வாழ்த்தும், கடைதிறப்பும், பாலைநிலமும், காளிகோயிலும், பேய்களோடு காளியும் காளியோடு பேய்களும் சொல்லத் தான் சொல்லக் கருதிய தலைவன் சீர்த்திவிளங்கலும், அவன் வழியாகப் புறப்பொருள் தோன்ற வெம்போர் வழங்கவிரும்பலும் என்றிவையெல்லாம் இருசீரடி முச்சீரடி ஒழித்து ஒழிந்தமற்றடியாக ஈரடிப் பஃறாழிசையாற் பாடுவது.

64. **பல்சந்தமாலை**: பப்பத்துச் செய்யுள் ஒவ்வோர் சந்தமாக நூறு செய்யுள் கூறுவது.

65. **பவனிக்காதல்**: உலாக் காட்சியால் எய்திய காமம் மிக்கால் அவை பிறரோடும் உரைத்து வருந்துவது.

66. **பன்மணிமாலை**: மேற்சொல்லிய கலம்பகத்துள் வரும் ஒரு போகும், அம்மானையும், ஊசலும் இன்றி ஏனையுறுப்புக்கள் எல்லாம் அமைய அவ்வாறு கூறுவது. இதையே கலம்பகமாலை என்ப.

67. **பாதாதிகேசம்**: கலிவெண்பாவால் அடிமுதல் முடியளவும் கூறுவது.

68. **பிள்ளைக் கவி**: காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை முறையே அகவல் விருத்தத்தால் பப்பத்தாகக் கூறுவது ஆண்பாற் பிள்ளைக்கவி. இவ்வுறுப்பினுள் கடைமூன்று ஒழித்து, கழங்கு, அம்மனை, ஊசல் என்பவற்றைக் கூட்டி மேற்சொல்லியவாறு கூறுவது பெண்பாற் பிள்ளைக் கவியாம்.

69. **புகழ்ச்சி மாலை**: அகவலடியும் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக் கூறுவது.

70. **புறநிலை**: நீ வணங்கும் தெய்வம் நின்னைப் பாதுகாப்ப நின் வழிவழி மிகுவதாக எனக்கூறுவது.

71. **புறநிலை வாழ்த்து**: வழிபடுதெய்வம் நிற்புறங் காப்பப் பழிதீர் செல்வமொடு ஒருகாலைக் கொருகால் சிறந்து பொலிவாய் என வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகப் பாடுவது.

72. **பெயர் நேரிசை**: பாட்டுடைத் தலைவன் பெயரினைச் சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது.

73. **பெயரின்னிசை**: பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவது.

74. **பெருங்காப்பியம்**: தெய்வவணக்கமும் செயப்படுபொருளும் இவற்றிற்கு இயைய வாழ்த்து முன்னுளதாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளும் பயக்கும் நெறியுடைத்தாய், நிகரிலாத் தலைவனையுடைத்தாய், மலையும் கடலும் நாடும் நகரும் பருவமும் இருசுடர்த்தோற்றமும் என்று இவற்றின் வளம் கூறுதலும், மணமும் முடிகவித்தலும் பொழில்

விளையாட்டும் நீர்விளையாட்டும் உண்டாட்டும் மகப்பேறும் புலவியும் கலவியும் என்று இவற்றைப் புகழ்தலும், மந்திரமும் தூதும் செலவும் போரும் வென்றியும் என்றிவற்றைத் தொடர்ந்து கூறலும் ஆகிய இவை முறையே தொடர்புறச் சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் என்னும் பகுதியை உடைத்தாய் வீரம் முதலிய சுவையும் அவற்றை விளக்கும் கருத்தும் விளங்கக் கற்றோரால் இயற்றப்படுவதாம். நாற்பயன் ஒழிந்து ஏனைய உறுப்புக்களுள் சில குறைந்து இயலினும் குற்றமின்று.

75. **பெருமகிழ்ச்சிமாலை :** தலைவியின் அழகு, குணம், ஆக்கம், சிறப்பினைக் கூறுவது.

76. **பெருமங்கலம் :** நாடோறுந் தான் மேற்கொள்கின்ற சிறை செய்தல் முதலிய செற்றங்களைக் கைவிட்டு, சிறைவிடுதல் முதலிய சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.

77. **போர்க்கெழுவஞ்சி :** மாற்றார்மேல் போர் குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூமாலை சூடிப் புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை ஆசிரியப் பாவால் கூறுவது.

78. **மங்கலவள்ளை :** உயர்குலத்துதித்த மடவரலை வெண்பா ஒன்பதாலும் வகுப்பு ஒன்பதாலும் பாடுவது.

79. **மணிமாலை :** எப்பொருள் மேலும் வெண்பா இருபதும் கலித்துறை நாற்பதும் விரவிவருவது.

80. **முதுகாஞ்சி :** இளமை கழிந்து அறிவு மிக்கோர் இளமை கழியாத அறிவில் மாக்கட்குக் கூறுவதாம்.

81. **மும்மணிக்கோவை :** ஆசிரியப்பாவும், வெண்பாவும், நேரசையும் நிரையசையும்கொண்டு எழுத்தெண்ணிப் பாடும் கலித்துறையும், முறையே தொகை முப்பதுபெற அடுக்கிய அந்தாதித் தொடையால் பாடுவது.

82. **மும்மணிமாலை :** வெண்பாவும் கலித்துறையும் அகவலும் அந்தாதித்தொடையான் முப்பது பாடுவது.

83. **மெய்க்கீர்த்திமாலை :** சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளால் குலமுறையிற் செய்த கீர்த்தியைக் கூறுவது.

84. **வசந்தமாலை :** தென்றலை வருணித்துப் பாடுவது.

85. **வரலாற்றுவஞ்சி :** குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையும் கீர்த்தியையும் வஞ்சிப்பாவால் கூறுவது.

86. **வருக்கக்கோவை:** அகரம் முதலாகிய எழுத்து வருக்கம் மொழிக்கு முதலாம் எழுத்து முறையே காரிகைத்துறைப் பாட்டாகப் பாடுவது.

87. **வருக்கமாலை:** மொழிக்கு முதலாம் வருக்க எழுத்தினுக்கு ஒவ்வோர் செய்யுள் கூறுவது.

88. **வளமடல்:** அறம் பொருள் இன்பம் ஆகிய அம்முக் கூறு பாட்டின் பயனை எள்ளி, மங்கையர் திறத்துறும் காமவின்பத்தினையே பயன் எனக்கொண்டு, பாட்டுடைத்தலைமகன் இயற்பெயர்க்குத் தக்கதை எதுகையாக நாட்டியுரைத்து, அவ்வெதுகை படத் தனிச்சொல் இன்றி இன்னிசைக் கலிவெண்பாவால் தலைமகன் இரந்து குறைபெருது மடல் ஏறுவதாய் ஈரடியெதுகைவரப் பாடுவது.

89. **வாகைமாலை:** மாற்ருரை வென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதை ஆசிரியப்பாவால் கூறுவது.

90. **வாதோரணமஞ்சரி:** கொலைபுரி மதயானையை வயப்படுத்தி அடக்கினவர்கட்கும், எதிர்பொருகளிற்றை வெட்டி அடக்கினவர்கட்கும், பற்றிப் பிடித்துச் சேர்த்தவர்கட்கும், வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பாவால் தொடுத்துப் பாடுவது.

91. **வாயுறை வாழ்த்து:** வேம்பும் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கள் முன்னர்த் தாங்கக்கூடாவாயினும் பின்னர்ப் பெரிதும் பயன்தரும் என மெய்ப்பொருளுற வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகக் கூறுவது.

92. **விருத்தவிலக்கணம்:** வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், குடை இவ்வொன்பதினையும் பப்பத்து விருத்தத்தால் ஒன்பது வகையுறப் பாடுவது.

93. **விளக்குநிலை:** வேலும் வேற்றலையும் விலங்காது ஓங்கியவாறு போலக் கோலோடுவிளக்கும் ஒன்றுபட்டோங்குமாறு ஓங்குவதாகக் கூறுவது.

94. **வீரவெட்சிமாலை:** சுத்தவீரன் மாற்ருர் ஊரிற் சென்று பசுநிரை கோடற்கு வெட்சிப்பூமாலை சூடி அவ்வண்ணம்போய் நிரை கவர்ந்து வரில், அவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப் போய்வந்த வெற்றி பாடுவது.

95. **வெற்றிக்கரந்தைமஞ்சரி:** பகைவர் கொண்ட தம் நிரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப்போய் மீட்பதைக் கூறுவது.

96. **வேனில்மாலை:** வேனிலையும் முதுவேனிலையும் சிறப்பித்துப் பாடுவது.

# பிற்சேர்வு III

## 1. பாட்டியல்களின் ஒப்பு நோக்குப் பட்டிகை

### (எண்கள் பிரபந்தங்களில் வைப்பு முறையைக் குறிப்பன)

*பன்னி - பன்னிருபாட்டியல்; வெண் - வெண்பாப்பாட்டியல்; நவநீத - நவநீதப்பாட்டியல்; சிதம்ப - சிதம்பரப்பாட்டியல்; இலக். பாட்-இலக்கணவிளக்கப் பாட்டியல்; தொன் - தொன்னூல் விளக்கம்; சதுரக - சதுரகராதி.*

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக்-பாட் | பிரபந்த மரபியல் | தொன் | பிர பந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகப்பொருட் கோவை (கோவை, நானூற்றுக் கோவை) | 60 | 10 | 37 | 5 | 5 | 6 | 31 | 7 | 5 |
| 2 | அங்கமாலை | | 34 | 21 | 28 | 26 | 29 | 10 | 9 | 9 |
| 3 | அட்டமங்கலம் | 31 | 26 | 32 | 21 | 33 | 22 | 27 | 10 | 10 |
| 4 | அநுராகமாலை | | | (53) | 37 | 53 | 39 | 43 | 11 | 11 |
| 5 | அரசன் விருத்தம் | | | (49) | | | | 78 | 66 | 67 |
| 6 | அலங்கார பஞ்சக(ம)ம் | | 23 | 17 | 20 | 34 | 21 | 38 | 70 | 72 |
| 7 | ஆற்றுப்படை | 42 | 37 | 36 | 25 | 66 | 26 | 16 | 54 | 53 |
| 8 | இணைமணிமாலை | 12 | 16 | 8 | 7 | 7 | 8 | 37 | 13 | 13 |
| 9 | இயன்மொழி வாழ்த்து | | | (101) | | | | 95 | 93 | 93 |
| 10 | இரட்டை மணிமாலை (இரட்டை மாலை) | 13 | 15 | 7 | 6 | 8 | 7 | 32 | 12 | 12 |
| 11 | இருபாவிருபஃது | 59 | 14 | 6(63) | 10 | 11 | 11 | 15 | 53 | 52 |
| 12 | உலா (உலாப்புறம்) | 6 | 31 | 22 | 34 | 52 | 36 | 8 | 48 | 48 |
| 13 | உலாமடல் | | | (77) | 36 | 51 | 38 | | 49 | 49 |

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக்-பாட் | பிரபந்த மரபியல் | தொன் | பிரபந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | உழத்திப் பாட்டு | 56 | | (105) | | | | 92 | 86 | 86 |
| 15 | உழிஞைமாலை | | | (84) | 48 | | 52 | 57 | 40 | 39 |
| 16 | உற்பவமாலை (அரிபிறப்பு, தசப் பிராதுற்பவம்) | 30 | 28 | 34(59) | 53 | 58 | 57 | 50 | 28 | 28 |
| 17 | ஊசல் (பொன்னூசல், ஊஞ்சல்) | | 24 | 31(90) | 16 | 35 | 17 | 30 | 87 | 87 |
| 18 | ஊர் நேரிசை (ஊர் நேரிசை வெண்பா) | | 8 | (72) | | 21 | | 70 | 61 | 59 |
| 19 | ஊர் வெண்பா | | 22 | 16 | | | | 71 | 62 | 60 |
| 20 | ஊரின்னிசை (இன்னிசைத் தொகை, ஊரின்னிசைவெண்பா) | 24 | 9 | (74) | | 15 | | 68 | 59 | 57 |
| 21 | எண் செய்யுள் | | | (97) | | 38 | | 60 | 36 | 43 |
| 22 | எழுகூற்றிருக்கை | | | (102) | | | | | 88 | 88 |
| 23 | ஐந்திணைச் செய்யுள் | | | (51) | | 39 | | 41 | 8 | 6 |
| 24 | ஒருபாவொருபஃது | 58 | 17 | (93) | 23 | 12 | 24 | 14 | 52 | 51 |
| 25 | ஒலியலந்தாதி (ஒலியந்தாதி) | 19 | 6 | 11 | 9 | 13 | 10 | 61 | 45 | 45 |
| 26 | கடிகை வெண்பா (நாழிகைக் கவி, நாழிகை வெண்பா) | 27 | 25 | 38(100) | 54 | 40 | 58 | 93 | 89 | 89 |
| 27 | கடைநிலை | 64 | | (96) | | | | 74 | 71 | 63 |
| 28 | கண்படைநிலை | 43 | | (95) | | | | 65 | 56 | 54 |
| 29 | கலம்பகம் | 5 | 5 | 2 | 2 | 2 | 2 | 6 | 4 | 4 |
| 30 | காஞ்சிமாலை | | | (82) | 46 | | 50 | 55 | 38 | 37 |
| 31 | காப்பியம் | | 55 | | 60 | 49 | 64 | 3 | 96 | 96 |

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக்- பாட் | பிரபந்த மரபியல் | தொன் | பிரபந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 32 | காப்புமாலை | | 2 | (57) | | 23 | | 46 | 24 | 24 |
| 33 | குழமகன் | | 32 | 23 | | 63 | | 85 | 75 | 77 |
| 34 | குறத்திப்பாட்டு (குறவஞ்சி) | 57 | | (104) | | | | 91 | 85 | 85 |
| 35 | கேசாதிபாதம் | | 36 | 20 | 27 | 65 | 28 | 12 | 69 | 71 |
| 36 | கைக்கிளை (கைக்கிளை மாலை) | 29 | 11 | 18 | 33 | 17 | 35 | 81 | 51 | 73 |
| 37 | கையறுநிலை (கையறம்) | 65 | 45 | (92) | 62 | | 66 | 75 | 72 | 64 |
| 38 | சதகம் | | | (71) | | 37 | 46 | 88 | 80 | 80 |
| 39 | சாதகம் | 1 | | (106) | | | | | 1 | 1 |
| 40 | சின்னப்பூ | 7 | 19 | 13 | 14 | 36 | 15 | 13 | 91 | 90 |
| 41 | செருக்களவஞ்சி (வஞ்சி, பறந்தலைச் சிறப்புப் பாட்டு, பறந்தலைப் பாட்டு) | 41 | 50 | (50) | 55 | 61 | 59 | 23 | 37 | 36 |
| 42 | செவியறிவுறூஉ | 52 | | 41 | | | | 89 | 82 | 81 |
| 43 | தசாங்கத்தயல் | | | (47) | | | | 77 | 67 | 66 |
| 44 | தசாங்கப்பத்து (தசாங்கநிலை) | | 20 | 14 | 13 | 30 | 14 | 76 | 73 | 65 |
| 45 | தண்டகமாலை (புணர்ச்சி மாலை) | | | (46) | | | | 51 | 31 | 31 |
| 46 | தாண்டகம் | 36 | | (91) | | | | 86 | 79 | 78 |
| 47 | தாரகைமாலை (தார்மாலை) | 34 | 41 | (65) | 52 | 57 | 56 | 49 | 27 | 27 |
| 48 | தானைமாலை | | 38 | (66) | 51 | 59 | 55 | 18 | 29 | 29 |
| 49 | தும்பைமாலை | | | (85) | 49 | | 53 | 58 | 41 | 40 |
| 50 | துயிலெடைநிலை | 44 | | (98) | | | | 66 | 57 | 55 |
| 51 | தூது | | | | 38 | 67 | 40 | 83 | 78 | 75 |

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக்.-பாட். | பிரபந்த மரபியல் | தொன். | பிரபந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 52 | தொகைநிலைச் செய்யுள் (தொகைநிலை) | | | (88) | | 6 | | 1 | 44 | 44 |
| 53 | நயனப்பத்து (நயனம், நயனவிருத்தம்) | 55 | 29 | 29(67) | 12 | 46 | 13 | 79 | 64 | 68 |
| 54 | நவமணிமாலை | 28 | 27 | 33 | 22 | 28 | 23 | 28 | 14 | 14 |
| 55 | நாமமாலை | 22 | 47 | 25 | 32 | 56 | 34 | 22 | 16 | 16 |
| 56 | நாற்பது | | | (76) | | | | 84 | 77 | 76 |
| 57 | நான்மணிமாலை | 15 | 13 | 5 | 19 | 10 | 20 | 25 | 15 | 15 |
| 58 | நூற்றந்தாதி (அந்தாதித்தொகை, அந்தாதி, வெண்பாவந்தாதி கலித்துறையந்தாதி) | 49 | 4 | 10(60) | 4 | 32 | 4 | 63 | 47 | 47 |
| 59 | நொச்சிமாலை | | | (83) | 47 | | 51 | 56 | 39 | 38 |
| 60 | பதிகம் | 37 | | (70) | | | | 87 | 74 | 79 |
| 61 | பதிற்றந்தாதி | | | (62) | | 31 | | 62 | 46 | 46 |
| 62 | பயோதரப்பத்து (பணை முலை, பயோதர விருத்தம்) | 54 | 30 | 30(68) | 11 | 45 | 12 | 80 | 65 | 69 |
| 63 | பரணி | 8 | 53 | 43 | 58 | 29 | 62 | 7 | 3 | 3 |
| 64 | பல்சந்தமாலை | 11 | 3 | 9 | 24 | 25 | 25 | 29 | 17 | 17 |
| 65 | பவனிக்காதல் | | | (78) | | | | 90 | 81 | 84 |
| 66 | பன்மணிமாலை (கலம்பகமாலை, பன்மணி) | 16 | 18 | 12 | 3 | 3 | 3 | 34 | 18 | 18 |
| 67 | பாதாதிகேசம் (பாதாதி) | 53 | 35 | 19 | 26 | 64 | 27 | 11 | 68 | 70 |

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக். பாட் | பிரபந்த மரபியல் | தொல். | பிரபந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 68 | பிள்ளைக்கவி (பிள்ளைப் பாட்டு) | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 5 | 2 | 2 |
| 69 | புகழ்ச்சிமாலை | 23 | 46 | 26 | 31 | 55 | 33 | 21 | 20 | 20 |
| 70 | புறநிலை | | | (99) | | | | 73 | 55 | 62 |
| 71 | புறநிலைவாழ்த்து (புறநிலை) | 50 | | 39 | | | | | 84 | 83 |
| 72 | பெயர் நேரிசை | | | (73) | | 20 | | 69 | 60 | 58 |
| 73 | பெயரின்னிசை (இன்னிசைத் தொகை) | 24 | | (75) | | 14 | | 67 | 58 | 56 |
| 74 | பெருங்காப்பியம் (தொடர் நிலைப் பாட்டு) | 62 | 54 | 44 | 59 | 48 | 63 | 2 | 95 | 95 |
| 75 | பெருமகிழ்ச்சிமாலை (மகிழ்ச்சி மாலை) | | | (48) | | | 32 | 44 | 22 | 21 |
| 76 | பெருமங்கலம் | | | (103) | | | | 96 | 97 | 94 |
| 77 | போர்க்கெழுவஞ்சி (வஞ்சிமாலை, வஞ்சிப்பூமாலை) | | 39 | (81) | 45 | | 49 | 54 | 34 | 34 |
| 78 | மங்கலவள்ளை (மங்கலவெள்ளை) | 33 | 42 | (69) | 29 | 18 | 30 | 82 | 76 | 74 |
| 79 | மணிமாலை | | | (55) | | | | 33 | 19 | 19 |
| 80 | முதுகாஞ்சி | | | (45) | | | | 94 | 90 | 92 |
| 81 | மும்மணிக்கோவை | 17 | 7 | 3 | 8 | 4 | 9 | 35 | 6 | 8 |
| 82 | மும்மணிமாலை | 14 | 12 | 4(64) | 18 | 9 | 19 | 36 | 30 | 30 |
| 83 | மெய்க்கீர்த்திமாலை (சீர் மெய்க் கீர்த்தி, மெய்க்கீர்த்தி) | 38 | 44 | 35(61) | 30 | 22 | 31 | 45 | 23 | 23 |
| 84 | வசந்தமாலை | | | (54) | | 27 | | 48 | 26 | 26 |

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக்-பாட். | பிரபந்த மரபியல் | தொன் | பிரபந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 85 | வரலாற்று வஞ்சி | | 51 | (87) | 56 | 60 | 60 | 24 | 35 | 35 |
| 86 | வருக்கக் கோவை | | | (52) | | | 5 | 42 | 5 | 7 |
| 87 | வருக்கமாலை | 21 | 49 | (56) | 17 | 16 | 18 | 17 | 21 | 22 |
| 88 | வளமடல் (மடல், இன்பமடல்) | 9 | 33 | 24 | 35 | 50 | 37 | 64 | 50 | 50 |
| 89 | வாகைமாலை | | 40 | (86) | 50 | | 54 | 20 | 42 | 41 |
| 90 | வாதோரணமஞ்சரி (யானைத் தொழில், யானைவஞ்சி) | 20 | 43 | 28(89) | 57 | | 61 | 59 | 43 | 42 |
| 91 | வாயுறை வாழ்த்து | 51 | | 40 | | | | | 83 | 82 |
| 92 | விருத்த விலக்கணம் (விருத்த வகை, விருத்த விகற்பம்) | 25 | 21 | 15 | 15 | 47 | 16 | 26 | 92 | 91 |
| 93 | விளக்கு நிலை | 45 | | (94) | | | | 72 | 63 | 61 |
| 94 | வீரவெட்சிமாலை (வெட்சிமாலை) | | | (79) | 43 | | 47 | 52 | 32 | 32 |
| 95 | வெற்றிக்கரந்தை மஞ்சரி (கரந்தை மாலை) | | | (80) | 44 | | 48 | 53 | 33 | 33 |
| 96 | வேனில்மாலை | | | (58) | | 24 | | 47 | 25 | 25 |

# 2. மிகைப் பிரபந்தங்கள்

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக். பாட் | பிரபந்த மரபியல் | தொன். | பிரபந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகப்புறக்கைக்கிளை | | | 42 | | | | | | |
| 2 | இருமொழிமாலை | | | | | | | 40 | | |
| 3 | இல்லறவெள்ளை | 32 | | | | | | | | |
| 4 | ஊர்த்தொகை வெண்பா | | | 11 | | | | | | |
| 5 | ஐம்படை விருத்தம் | 26 | | | | | | | | |
| 6 | கடாநிலை | 46 | | | | | | | | |
| 7 | கணக்கு (மேல், கீழ்) | 61 | | | | | | | | |
| 8 | கலியந்தாதி | 18 | | | | | | | | |
| 9 | குடைமங்கலம் | 3 | | | | | | | | |
| 10 | செந்தமிழ் மாலை | 35 | | | | | | | | |
| 11 | செருக்களவழி | 39 | | | | | | | | |
| 12 | தேவபாணி (ஒரு போகு) | 4 | | | | | | | | |
| 13 | நால்வகைமாலை (எண்ணாலும் பெயர்பெறும்) — பொருள்மாலை | | | | 39 | | 41 | | | |
| 14 | இடமாலை | | | | 40 | | 42 | | | |
| | காலமாலை | | | | 41 | | 43 | | | |
| | தொழில்மாலை | | | | 42 | | 44 | | | |
| 15 | நானாற்பது | | | | | 41-44 | | | | |
| 16 | பருவமாலை | | | | | | | 39 | | |
| 17 | பலபொருள் வஞ்சி | | 52 | 27 | | 62 | | | | |
| 18 | பறைநிலை | 48 | | | | | | | | |

| எண் | பிரபந்தங்கள் | பன்னி. | வெண். | நவநீத | சிதம்ப. | இலக். பாட். | பிரபந்த மரபியல் | தொன். | பிரபந்த தீபிகை | சதுரக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | பாட்டு (பத்துப் பாட்டு) | 63 | | | | | | | | |
| 20 | புராணம் (புராண கதை) | | 56 | | 61 | | 65 | 4 | | |
| 21 | மஞ்சரி | | | | | 68 | 45 | | | |
| 22 | மடல் | | | | | | | 9 | | |
| 23 | மறக்களவஞ்சி | 40 | | | | | | | | |
| 24 | மறம் | 10 | | | | | | | | |
| 25 | மெய்க்கீர்த்தி | | | | | 54 | | | | |
| 26 | யாண்டுநிலை | 47 | | | | | | | | |
| 27 | வஞ்சிமாலை | | | | | | | 19 | | |
| 28 | வண்ணம் | | | | | | | | 94 | |
| 29 | வேறு இரட்டை மணிமாலை | | 48 | | | 19 | | | | |
| | பிரபந்தங்களின் மொத்தம் | 65 | 56 | 44 (106) | 62 | 68 | 66 | 96 | 97 | 96 |

நவநீதப்பாட்டியலின் கீழ் நகவளைவுக் குறிகளிலுள்ள எண்கள் மிகைப்பாடபேதங்களும் மிகைச்செய்யுட்களும் கூறும் பிரபந்தங்களைக் குறிப்பன.

# பிற்சேர்வு IV

## பாக்களின் சாதி முதலியன

| பா | சாதி | வண்ணம் | நிலம் | கடவுள் | நாள் | ஓரை | விரை | பூ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெண்பா | அந்தணர் | வெண்மை | முல்லை | சந்திரன் வியாழன் | கார்த்திகை முதல் 7 | மீனம் கார்க்கடகம் விருச்சிகம் | சந்தனம் | மல்லிகை | வஸ்திரம் ஆபரணம் முன் சொன்ன திறப்பகுதியினவே. |
| ஆசிரியப்பா | அரசர் | செந்நிறம் | குறிஞ்சி | செங்கதிர் செவ்வாய் | மகம் முதல் 7 | சிங்கம் தனு மேடம் | செஞ்சந்தனம் | கழுநீர் | |
| கலிப்பா | வணிகர் | பொன்மை (கருமை) | மருதம் (நெய்த) | சனி புதன் | அநுடம் முதல் 7 (அநுடம் முதல் 6) | துலாம் குடம் மிதுனம் | சந்தனம் | சண்பகம் | |
| வஞ்சிப்பா | வேளாளர் | நீல நிறம் (பொன்) | நெய்தல் (மருதம்) | சுக்ரன் இராகு கேது | சதயம் முதல் 6 (அவிட்டம் முதல் 7) | இடபம் கன்னி மகரம் | கலவை | நீலம் | |
| மருட்பா | கலப்பு | சிவப்பு | பாலை | | மகயிரம்-பூரம் | ஞெண்டு | தகரச் சாந்து | பவளம் | |

இவை பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், இலக்கணவிளக்கம் முதலியவற்றில் கண்டன. நவநீதப் பாட்டியலில் (80) சாதி யொன்றே கூறப்பட்டுள்ளது. இதன் பழைய உரைகாரர் 'மாமூலர் இராசியும் நாளும் கிழமையும் மற்றும் எல்லாவற்றிற்கும் (சொல்லிச்) சாதியும் அடைத்தார்; அவற்றூற் பயனின்மையின் இவர் வேண்டிற்றிலரெனக் கொள்க' என்றனர். யாப்பருங்கல விருத்தியிலும் (பக். 457-460) இவை யுள்ளன.

# பிற்சேர்வு V

## நவநீதப் பாட்டியல் பழைய உரை

### 1. நூலுள் 'பாடகம் பேசி' (89) என்பதன் பின்னுள்ள செய்யுளும் உரையும்

குற்றமில் லாவோலை தன்னிற் குலவுவெண் பாமன்னனைச்
சொற்றதோர் பாவா லரசரைப் பேசிப் பொருட்டிறத்தின்
உற்றவை யேன்றென்று தன்னு லுரைப்பவன் றன்னைச்சொல்லி
மற்றவன் றன்னையும் பின்னே யுரைத்தல் மரபென்பவே.

என் - எனின், தூக்கும் ஓலையும் ஏற்கும் இலக்கணமாமாறு உணர்-ற்று.

(இ - ள்.) மூரியும் பிளப்புமில்லாத ஓலையின் கண்ணே வெண் பாவாற்றான் ஆசிரியப்பாவாற்றான் அரசாளும் அரசன் றன்னைப் பேசி, பொருட்பேசும் பகுதியாகிய வாத விதண்டை சற்பங்களின் தோன்ற லென்றுரைக்கும் மற்றவன்றன்னை முன்பு சொல்லி, ஏனோரவரையும் பின்புரைதது முடிப்பது ஓலையது இலக்கணமாம் என்றவாறு.

(வ-று) ஓலைய திலக்கணம் உரைக்குங் காலை
நாலாறு விரலாம் நான்மறை யோர்க்கே
பாருடை யோர்க்குப் பதிற்றிரண் டாகும்
வணிகர்க் கீரெண் விரலா கும்மே
சாணென மொழிப சூத்திரர்க் கெனவே.

வெண்பா அகவ லாயிரு மரபினுஞ்
செய்யுட் பரவிய அவ்விரு திறத்தினு
முற்புறத் திரண்டாம் பிற்புறத் தொழிந்து
வரைவென வுரைப்பர் தெரிநூற் புலவர்.

சந்தனஞ் திமிசு சாதி செண்பகம்
உந்திய பதின்முழம் உயர்ந்ததை யாசனம்
கூவிளம் பலாசு வணிகர்க்கு வகுத்த
நாலிரு முழமே யுயர்ச்சி யாகும்.

பலவே கதிரம் அறுமுழ முயரம்
நிலமுழ தோர்க்கு நீதி யாகும்
நாடுது நாட்டிம னுமைவை யாமே.

கலலே பொதுவாந் திசையவர் திசையே
முனிவர்க் கோலே முப்பது விரலே
முறைமையின் முன்கடை யுயர்ந்ததை யுயர்ச்சி.

அரசர் முன்கடை யல்லாப் பொதுவின்
முனிவரோ டல்லது மூவர் மற்றியலார்
பிறர்வலிக் கேய்ந்தன வாதனத் தியல்பே.

ஈசன் பதியா மெரிபாவே
பரியார்க் குந்திரு வருளி யுண்பவே.
ஒழிந்தவை நான்கு முரிய வென்ப.

மேடம் இடபம் அந்தணர்க் குரித்தே
நண்டரி யரிவை யரசர்க் காகும்
துலையோ டெறிதேள் வணிகர்க் காகும்
